

# ...யா?

...ிப்பழம் சாப்பிட்டு
...நோய்க்கு ஆளாக
...
...ச் சாறுடன்
...து காலையில்
...ர, மாதவிடாய்க்
... சரிப்படும்.
...ப்புண்ணும்





இந்திரா சௌந்தர்ராஜன்

# பதினெட்டாம் படி



## 1

‘பதினெட்டு படி’ என்பது ஒரு வாழ்க்கைத் தத்துவம். குழந்தையாக இருந்து, படிப்படியாக வளர்ந்து முதுமையை அடைந்து, பின் முடிந்துபோகும் ஒரு அமைப்பாகும். கூர்ந்து கவனித்தால், ஒவ்வொருவருமே தன் வாழ்வில் பதினெட்டு படித்தளங்களை ஏறியவராக இருப்பர். இந்தப் பதினெட்டு

படித்தனம் என்பது ஒரு மனிதனின் பதினெட்டு வயது பூர்த்தியாகும் காலம் என்றும் 'முதல் பிராய' காலமாகும்.

இத்தனை ஆண்டுகளை அவன் எப்படிக் கழித்தான்! எந்த இடத்தில், யார் யாருடன், என்ன விதமாகக் கழித்தான்! என்பதிலிருந்தான் அவன் முன்வினை, வரப்போகும் பின்வினை என்று எல்லாமே உள்ளன!

குழந்தையாகப் பிறந்து, முதல் ஆண்டைப் பூர்த்திசெய்யும் அந்த இடைப்பட்ட 365 நாட்களில் அந்தக் குழந்தை சீராட்டப்படும் மனம் என்பதே என்னவென்று தெரியாத நிலையில், அதன் மனத்தில் பதிவாகும் காட்சிகளிலிருந்தான் தாய்- தந்தை என்ற இரு பேர்களுடன் அவன் அடுத்து பெறப்போகும் பதினாறு பேறுகள் உள்ளன. அவை என்னென்ன என்று தெரியுமா!

புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

இந்தப் பதினாறில் முதல் ஆண்டில் தாய்- தந்தை பராமரிப்பில் ஒருவன் முழுமையாக அடைய வேண்டியது எதைத் தெரியுமா- நோயின்மை.

அதிசயமாக சென்னை வானில் அன்று மழை மேகங்கள்!

வெயிலே இல்லாமல் இதமாக மொத்த சென்னை நகரமும் ஒரு பந்தலுக்குக் கீழ் வந்துவிட்ட மாதிரி இருந்தது.

என்னதான்- கடலோர நகரமாக இருந்தாலும்... எண்ணெய் பூசிக்கொண்டது போல வியர்ப்பதும், மனிதர்களைச் சதா எரிச்சலில் வைத்துக்கொள்வதும் இன்றைய சென்னைக்கு வாடிக்கை ஆகிவிட்டது. 'குளு குளு' வசதி இருந்தால் காலம் தள்ளலாம். மற்றவர்களுக்கு சென்னை நகரம் மெல்ல நரகமாகிக்கொண்டு இருக்கிறது.

இந்த 'குளு குளு' வசதி எல்லாம் இருந்துமே பிரசாத்துக்கு வாழ்க்கை நரகமாகத்தான் இருந்தது. அவன் மனம்விட்டுச் சிரித்தே பல வருஷங்கள் ஆகிவிட்டன. எப்பொழுதும் இறுக்கமான முகத்துடன் அவனைப் பார்க்கப் பரிதாபமாகக்கூட இருக்கிறது.

'சி.ஏ.' தேர்வில் மாநில அளவில் முதல் மாணவனாகத் தேறியவன், மிகப்பெரிய நிறுவனம் ஒன்றில் அதிகாரியாக வேலையில் இருக்கிறான்.



மாதச் சம்பளம் கிடைத்திட்ட என்பதினாலேயும்.

ஒரு குறையும் இல்லாத ஆடம்பர வாழ்க்கையைக் காட்டிக்கொண்டு வாழுகிறான். ஆனால்...

அலுவலகத்தில் வேலை வேலை அவன் எழுதி இருந்த ராஜினாமா கடிதம்!

விஷயம் தெரிந்து ஜேக்கப் வந்திருந்தான்.

"என்னப்பா... எதுக்காக இப்படியொரு முடிவு!"- அவன் கேள்விக்கு பிரசாத்திடம் இருந்து பதில் இல்லை.

"உன்னைத்தான்...! இந்த ஆபீசை உனக்கு என்ன குறை!"

மீண்டும் பதில் இல்லை. பெருமூச்சு வந்தது.

"பிரசாத்... பேசு! இப்படி மவுனமா இருந்தா எப்படி?"

கெஞ்சிவிட்டான் ஜேக்கப்.

"என்னத்த பேசறது! இந்த வேலை... இந்த சம்பாத்தியம்... இந்த அந்தஸ்து எல்லாமே வெறும் மாயைதான்!"

"என்ன திடீர்னு தத்துவம் பேச ஆரம்பிச்சுட்டே...!"

"நான் உண்மையைத்தான் பேசறேன்டா. உனக்கு எப்படிப் புரிய வைக்கறதுன்னுதான் தெரியலை."

"சரி, ராஜினாமா செய்துட்டு என்ன பண்ணப்போறே!"

"தெரியலை. ஆனா ஒண்ணு... நான் இந்த ஊர்ல இனி இருக்க மாட்டேன். என்னை இப்பவே நல்லா பார்த்துக்கோ..."

"ஏன்டா... எதிர்காலத்துல உன்னை வேற ஒரு ஊர்ல கூடவா பார்க்க முடியாது!"

"ஆமாம். நான் முகவரியே இல்லாதவனா ஆகப்போறேன்."

"ஆ...!"

"இந்த சித்தார்த் என்கிற புத்தர், காடு-மேடெல்லாம் சுத்தினாரே...? அப்படி சுத்தப் போறேன்..."

"சுருக்கமா சொல்றதா இருந்தா, சன்னியாசி ஆகப் போறேன்னு சொல்."

"ஆமா... அப்படித்தான் வெச்சுக்கயேன்."

"சரிடா, ஆல் த பெஸ்ட்..."- அவனிடம் கைகுலுக்கிவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

பிரசாத்துக்குள் அவன் கன்னத்தில் அறைந்த மாதிரி இருந்தது

ராஜினாமா கடிதத்தை வாங்கி கிழித்துப் போடுவான், ஆறுதல் சொல்வான் என்கிற எதிர்பார்ப்பு எல்லாம் தவிடுபொடியான மாதிரி இருந்தது.

அடுத்து உள்ளே நுழைந்தவன் சந்தானம்.

"பிரசாத்... ஜேக்கப் சொன்னான்... நீ ராஜினாமா பண்ணப் போறியாமே?" என்று ஆரம்பித்தான்.

"ம்."

"உனக்கு என்ன பைத்தியமா?"– கோபத்தில் கத்தினான்.

பிரசாத் பதிலுக்கு ஒரு தினுசாகப் பார்த்தான்.

"என்னடா பிரச்சினை? எதுக்கு சன்னியாசியாக போகப் போறேன்னு எல்லாம் உளர்றே?"

"..........."

"உன்னைத் தாண்டா... மனம் விட்டுப் பேசு, எனக்குத் தெரிஞ்சு, உனக்குக் குழந்தை இல்லைங்கற ஒரு குறை இருக்கு. உனக்கும் கல்யாணமாகி பத்து வருஷம் ஆயாச்சு. இவ்வளவு நாளா குழந்தை பிறக்கலைங்கறது வருத்தமான விஷயம்தான். ஆனா, உனக்கு என்னடா பெருசா வயசாயிடிச்சு? முப்பத்தி எட்டு இருக்குமா? அறுபது வய்சுல பிள்ளை பெத்துக்கிட்டவங்க உண்டு, தெரியுமா?"

சந்தானத்தின் ஆறுதல் பேச்சை, பிரசாத் தன் இழுப்பறையைத் திறந்து தூக்கிப் போட்ட ஒரு மருத்துவ அறிக்கை தடுத்தது. அவனும் அதைத் திறந்து பார்த்தான். படித்து முடித்தவனின் முகம் கிட்டத்தட்ட இருண்டுவிட்டது.

"இப்ப என்ன சொல்றே?"– மிக மெல்லிய குரலில் கேட்டான் பிரசாத்.

"இந்த 'ரிப்போர்ட்... ரிப்போர்ட்...'"

"நூறு சதவிகிதம் சரியான 'ரிப்போர்ட்'. என்னால பிள்ளை பெத்துத் தர முடியாதுன்னு இதுவே சொல்லிடுச்சு."

"இருக்கலாம். ஆனா, இன்னிக்கெல்லாம் எவ்வளவோ நவீன முறைகள் வந்திருக்கு. உன்னோட மலட்டுத் தன்மை ஒண்ணும் நிரந்தரம் இல்லையே!"

"இல்ல சந்தானம். நான் பார்க்காத டாக்டர்கள் இல்லை. செய்துக்காக வைத்தியம் இல்லை. போகாத கோவிலும் இல்லை.



செய்யாத பரிகாரமும் இல்லை. எல்லாம் என்னைக் கைவிட்டுடிச்சு. வாழ்க்கையே வெறுத்துடுச்சு..."

"விரக்தியில் உனக்கு மூளை கெட்டுப் போச்சுடா. பிள்ளை பெத்தக்கிட்டாதான் ஆண் மகன்னு உனக்கு யாருடா சொன்னா? பிரமச்சரியா எவ்வளவோ பேர் இருந்திருக்காங்க. உன் கருத்து அவங்களை எல்லாம் கொச்சைப்படுத்தற மாதிரி இருக்குதுடா."

"மன்னிச்சிடு சந்தானம்... என் நம்பிக்கை தவிடுபொடி ஆகிடிச்சு. என் மேல ரொம்ப நம்பிக்கையோட இருந்தா தேவிகா. அவ இப்ப எவ்வளவு தூரம் நொறுங்கிப் போயிட்டா தெரியுமா?"

"திரும்பவும் சொல்றேன். இந்த மாதிரி நேரங்கள்லதான் மனோ தைரியத்தோடயும், தெளிவோடயும் நடந்துக்கணும். உன் வருத்தத்தை இந்த வேலையில் மறக்கலாம். ஆனா நீ... நீ... வேலையை விடறேங்கறே. முட்டாள்தனமான முடிவு."

"இப்படித்தான் ஜேக்கப்பும் சொல்வான்னு நான் எதிர்பார்த்தேன். ஆனா, அவன் என்னை வாழ்த்திட்டுப் போயிட்டான்."

"அப்ப நீ எல்லார்கிட்டேயும் ஆறுதலை எதிர்பார்க்கறே... உன்னை எல்லாரும் தடுக்கணும்னு நினைக்கறே... அப்படித்தானே?"

சந்தானம் கேட்கவும், பிரசாத் கண்களில் இருந்து கண்ணீர் புரளவும் சரியாக இருந்தது. இடையிட்டது 'இன்டர்காம்'!

மறுமுனையில் பொது மேலாளர் பஞ்சாட்சரம்!

"ஹலோ ஜென்டில்மேன்... என்னிடம் கொஞ்ச நேரம் பேச முடியுமா?"

"நிச்சயமாக..."

"அப்ப, நீங்க 'சீட்'ல இருங்க. நான் அங்கே வர்றேன்."

"வேண்டாம் சார். நான் வரேன். அதான் மரியாதை."

பிரசாத் வேகமாக எழுந்தான்.

"யார்... பஞ்சாட்சரம் சாரா?"

"ஆமாம்."

"உன் ராஜினாமா விஷயம், அவர் காது வரைக்கும் போயிடுச்சு. அதான் கூப்பிட்டிருக்கார்."

"அவர்கிட்ட நான் சொல்லலையே...!"

"ஜேக்கப் சொல்லி இருப்பான். எதுவா இருந்தா என்ன? அவர்

அருமையான மனிதர். இந்த காலத்துலேயும் உச்சியில குடுமி, நெத்தியில பட்டை. ஏகாதசி, கிருத்திகைன்னா விரதம்னு... வேற யார் இங்கே அப்படி இருக்காங்க?"

–அவன் பேசப் பேச கேட்டபடியே, பொது மேலாளரைப் பார்க்கப் புறப்பட்டான்.

சந்தானம் உள்ளுக்குள் சிரித்தான். 'பஞ்சாட்சரம் சார், இந்தப் பயல வளைச்சுக் கட்டி நிறுத்திடுவார்' என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

**ஊ**துபத்தி வாசத்துடன் கமகமவென்று வரவேற்றது, பொதுமேலாளரின் அறை. அவரும் பார்ப்பதற்கு சிவப் பழமாகக் காட்சி தந்தார்.

"வாங்க பிரசாத்..."

அவர் எதிரில் நின்றான்.

"உக்காருங்க... இப்படி நிக்கறது ஒருவித அடிமைப் புத்தி. நான் அதை ஆதரிக்கிறவன் கிடையாது."

அவனும் அமர்ந்தான்.

"நீங்க ராஜினாமா பண்ணப் போறதா ஜேக்கப் இப்பதான் போன் பண்ணினார். அதுக்காக உங்களை வாழ்த்துனதாகவும் சொன்னார். ஆனா, அவருக்கு உங்க ராஜினாமாவில் விருப்பமில்லை. உங்க முடிவை மாற்றச் சொல்லி பேசினா, நீங்க பதிலுக்கு உங்க குடும்பப் பிரச்சினைகளைச் சொல்லலாம். அதனாலதான் அவர் பேசலையாம்.

ஆனா, நான் பேசப்போறேன். ஒரு 'ஜி.எம்.'மா இதைச் சொல்லலை. உங்க நலன்ல அக்கறை உள்ளவரா சொல்றேன். உங்க பிரச்சினை என்னன்னு எனக்குத் தெரியும். குழந்தை இல்லை... அதானே உங்க பிரச்சினை?"

வெளிறிய விழிகளோடு பார்த்தான் பிரசாத்.

"நீங்க எல்லா டாக்டரையும் பார்த்து, எல்லா முயற்சிகளையும் செய்ததாகவும் கேள்விப்பட்டேன். இவ்வளவுக்குப் பிறகும் உங்களுக்குக் குழந்தை உருவாகலைன்னா, பிரச்சினை உங்க உடம்புல இல்லை. உங்க ஜாதகத்துலதான்..."

–பொது மேலாளர் சொன்னதைக் கேட்டு சிரிப்புதான் வந்தது, அவனுக்கு.





"என்ன... நான் சொல்றதை ஏத்துக்க முடியலையாக்கும்? ஜாதகக் கோளாறுதான் உடம்புல எதிரொலிக்கறது; அதான் அப்படிச் சொன்னேன். உங்க கட்டங்களைக் கூர்ந்து கவனிச்சா, அதுல எங்காவது ஒரு தோஷம் இருக்கும்.

குறிப்பா பதினாறு பேறுல ஒண்ணான 'நன்மக்கள்'ங்கற பேறு விடுபட்டிருக்கும். பதினெட்டு படிதான் வாழ்க்கை. நன்மக்கள் ஒரு படி. அதுல ஏறத் தெரியாம தவிக்கிறீங்க நீங்க. நான் உங்களுக்கு அதுக்கு வழிகாட்டுறேன்..."

பஞ்சாட்சரம் ஒரு புதிய கோணத்தில் அணுக, பிரசாத்தும் நிமிர்ந்து அமர்ந்தான்.

## 2

பதினாறு பேறுகளில் முதலாவதாக ஒருவருக்குத் தேவைப்படுவது அறிவு. ஒரு மனிதன் பிறக்கும்போதே வாய், மூக்கு போல ஒரு உறுப்பாக இதுவும் சேர்ந்தே பிறக்கிறது. இதுதான் அதன்பின் எல்லாமாய் இருந்து உயிர் பிரியும் வரையிலான காரண காரியங்களுக்குச் செயலகமாக விளங்குகிறது.

அறிவது என்பதில் இருந்தே அறிவு வந்ததாகக் கூறுவர். இது ஆளுக்கு ஆள் மாறுபாடுகிறது. சிலருக்கு 'உடம்பெல்லாம் மூளை' என்று வர்ணிக்கக் கேட்டிருக்கிறோம். இன்னும் சிலர் தலையில் களிமண் மட்டுமே இருப்பதாகவும் வருத்தப்பட்டு இருக்கிறோம்.

பிறக்கின்ற நேரமும், அப்போதைய கோள் சாரமும் ஒருவர் எத்தனைப் பெரிய அறிவாளி என்பதைச் சொல்லிவிடும். ஆனால், அந்த நேரத்தில் பிறக்க வேண்டும். அந்நொடிப் பொழுதுக்கான கோள்களால் வழிநடத்தப்பட வேண்டும் என்பது கர்மவினையால்தான்!

மொத்தத்தில் நமக்கான பேறுகள் கர்மவினையின் கைகளில்தான் உள்ளன. அதே நேரம் எது கர்மவினை என்னும் கேள்வியும் எழுகிறது. ஒரு பிறப்பில் ஒருவன் செய்யும் செயல்களின் நன்மை- தீமைகளே அதற்கேற்ப கர்மவினை ஆகின்றன! எனவே, எப்பொழுதும் யாருக்கும் நல்லதே செய்தால், அது நல்ல நேரப் புள்ளியில் ஜனிக்க வைத்து முதல் பரிசாக நல்லறிவைத் தருகிறது.



அறிவுதான் ஒருவன் தாண்டும் மூன்றாம் படி. தாய் முதல் படியாகவும், தந்தை இரண்டாவது படியாகவும் உள்ளனர்.

பிரசாத்தை மிகக் கனிவாகப் பார்த்தார் பஞ்சாட்சரம்.

"நான் சொல்லப் போறதை நல்லா கேட்டுக்கோங்க . மனுஷப் பிறப்பு ரொம்ப விசேஷமானது. மத்த பிறப்பெல்லாம் வெறும் மாமிசத் துடிப்புடையது மட்டும்தான். மனசுங்கற ஒண்ணும், அதோட துடிப்பும் மனிதனுக்கு மட்டும்தான். ஒவ்வொரு மனுஷனும் தான் யார், தன் பூர்வீகம் என்னன்னு அறிய சொற்பமா முயற்சி செய்தாலே போதும்.

உலகத்திலேயே எல்லா ஜாதிக்காரனுக்கும், மதத்தவனுக்கும் பொதுவான மொழி, கோடு பாஷை! அதாவது கோடுகளால் எழுதுவது. கோடுகளால் ஆனதுதான் இதயத் துடிப்பு பரிசோதனை. பூகம்பம், புயல்னு எதைப் பத்தி தெரிஞ்சுக்கணும்னாலும் கோடுதான் அங்க பிரதானம்.

என்னடா ஜாதகம் பத்தி பேச ஆரம்பிச்சவன்- கோடு, அது இதுன்னு குழப்பறேனேன்னு நினைச்சுக்காதீங்க. நான் காரணமாகத்தான் கோடு பத்தி பேசிக்கொண்டிருக்கேன். இப்படியொரு கோட்டு மொழி நம்ம கையிலயே இருக்கு. அதாவது கைரேகை.

கையை மூடிக்கிட்டு குழந்தை வயித்துல உருவாகறதால ஏற்படுற ஒரு படிவம் அதுன்னு இதை நம்பாதவங்க விளக்கம் தரலாம். ஆனா, ஒவ்வொருவர் கைரேகையும் ஒவ்வொரு விதம். ஒருத்தர் போல இன்னொருத்தருக்கு ரேகையும் இருக்கறதில்லை. இது எவ்வளவு ஆச்சரியம்...!

எதுக்கு சொல்றேன்னா, உங்க கையில இருக்கற உங்க ரேகை சொல்லிடும்... உங்களுக்குக் குழந்தை இருக்கா, இல்லையான்னு. இருக்குன்னா இருக்குதான். இல்லேன்னா இல்லேதான்."

கிட்டத்தட்ட ஒரு உபன்யாசமே செய்து முடித்துவிட்டார். பிரசாத்துக்கு அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதில் இன்னமும் குழப்பமாகக்கூட இருந்தது.

"சார்... நான் வெளிப்படையாப் பேசறேன். நீங்க இவ்வளவு தூரம் சொல்றதால, சில உண்மைகளைச் சொல்றேன். என் உயிரணுவுல ஒரு சதவிகிதம்கூட பிள்ளைப் பேறுக்குத் தேவையான உயிரணு இல்ல... இனி ஜாதகம் பார்த்தாத்தான் என்ன, கைரேகை பார்த்தாத்தான்

என்ன...?"

"அப்படிச் சொல்லாதீங்க. போய்ப் பாருங்க. அதுல குழந்தை இருக்குன்னா... நிஜத்துலேயும் உங்களுக்கு குழந்தை இருக்கு."

"நான் பார்த்த அளவுல யாரும் பெருசா எந்தக் குறையும் சொல்லலை. குழந்தை இருக்குன்னுதான் சொல்லி இருக்காங்க. ஆனா, பரிசோதனை முடிவுதான் பெரிய ஏமாற்றமாப் போச்சு."

"உங்க பரிசோதனையைத் தூக்கி உடப்புல போடுங்க. ஜாதகத்துல இருக்குன்னா இருக்குதான். எதுக்கும் சரியா கணக்கு போடத் தெரிஞ்ச, காசு வாங்காம- வித்தையா பலன் சொல்ற ஜோசியர் ஒருத்தரை நீங்க பார்க்கறது நல்லது."

அப்படி யாரையும் எனக்குத் தெரியாதே!"

"வேண்டாம். உங்க பிறந்த நாள், நேரம், ஊர் பற்றி சொல்லுங்க... அப்படியே கல்யாணத் தேதி."

"கல்யாணத் தேதி எதுக்கு?"

"உங்க ஜாதகமும், மனைவி ஜாதகமும் சரியானதுதானான்னு 'செக்' பண்ணுறதுக்குத்தான். அதாவது உங்க கல்யாண நாளும், உங்க மனைவி கல்யாண நாளும் ஒண்ணா வரணும். அதுக்குக் கட்டங்கள் அனுமதி தரணும். அப்படித் தந்திருந்தாதான், அது உங்க இரண்டு பேரோட சரியான ஜாதகம். இல்லேன்னா ஜாதகமே தப்பு... அதைப் பாக்கறதும் வீண்."

பிரசாத், அவர் கேட்ட குறிப்புகளைக் கொடுத்துவிட்டு எழுந்தான்.

"நீங்க போங்க. உங்க கவலையை இந்த மேசையில விட்டுட்டுப் போங்க. இனி என் பொறுப்பு. போய் அந்த ராஜினாமா கடிதத்தைக் கிழிச்சுப் போடுங்க."

மவுனமாக ஆமோதித்தான்.

வெளியில் வந்தான். ஜேக்கப்பும், சந்தானமும் வேலைக்கு நடுவில் அவனையும் பார்ப்பது தெரியாமல் பார்த்தனர்.

அவன் வெளியே வரவும், மெல்ல பஞ்சாட்சரத்தைச் சந்திக்க ஜேக்கப் அவர் அறைக்குள் நுழைந்தான்.

"சார்..."

"வா ஜேக்கப்!"

"என்ன சார் சொன்னான்?"



# நேருவின் நேர்மை



நேரு, லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார். அப்போது பேரன் ராஜிவ்காந்தி ஒரு பொம்மை வாங்கிவரும்படி கேட்டார்.

லண்டனைவிட்டு திரும்பும்போது அழகியகரடிப்பொம்மையை வாங்கிவந்தார் நேரு. டெல்லி விமான நிலையத்தில் அதை ராஜிவ் காந்தியிடம் கொடுத்தார். அருகில் இருந்த உதவியாளரிடம், "பொம்மைக்குச் சுங்கவரியைக் கட்டிவிட்டீர்களா?" என்றார்.

அதற்கு அவர், "நீங்கள் நாட்டின் பிரதமர், எதற்கு சுங்க வரி கட்ட வேண்டும்?" என்று கேட்டார்.

உடனே நேரு, "என் நேர்மைக்கு கெட்டப் பெயர் வந்துவிடும். முதலில் சுங்க வரியைக் கட்டிவிட்டு வாருங்கள்" எனக் கூறினார்.

–மெர்வின், சென்னை.

# உப்பு குறைந்த கடல்



★ வாத்துகள் அதிகாலையில் முட்டை இடும்.

★ மீனின் இதயத்தில் இரு அறைகள் இருக்கும்.

★ உலகில் உப்புச் சுவை குறைவாக உள்ள கடல் பாஸ்டிக்.

–சு.லக்குமண சுவாமி, திருநகர்.



# ...பேசுகிறது



சூறாவளியாக வாசகர்கள் நெஞ்சில் சுழன்று ‘சுனாமி’ பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என கூறினால் அது மிகையல்ல!

—எஸ். விஜயலட்சுமி,
ஆதம்பாக்கம்.

‘கவிக்குயில்கள்’ பகுதி, படைப்பாளிகளின் கற்பனைத் திறனை நன்கு வெளிப்படுத்துகிறது.

—பி.கம்பர் கப்பிலாள்,
கோவிலம்பாக்கம்.

சு.ப.செல்வராஜ் எழுதிய ...சங்கமம்’ சிறுகதை ‘சூப்பர்’. இன்றைய தலைமுறையினர் ...ட்டாயம் படிக்க ...வண்டியது.

—எம்.சம்பத்குமார்,
புதுடெல்லி.

உங்கள் கருத்துகளை ...னுப்ப வேண்டிய முகவரி:

**இதயம் பேசுகிறது,**
**‘ராணிமுத்து’,**
**...னை— 600 007.**



இருக்கார்.”

“நான் பாத்துக்கறேன்னேன். சரின்னு சொல்லி இருக்கார்.”

“நன்றி. சார் ஒரு சந்தேகம்...”

“என்னப்பா...?”

“பாறையில எப்படி சார் பயிரிட முடியும்? ‘எனக்கு தன்னம்பிக்கை அதிகம்’னு ஒருத்தர் பாறையில உழப் போனா சிரிக்க மாட்டோமா?”

“நிச்சயமா! அதே நேரம் தன்னம்பிக்கையோடு புத்தியும் இருந்தா பாறைக்கு மேல மண்ணைப் போட்டு, உழுது அதுல பயிர் செய்து காட்டலாமே...”

அவரின் பதில் ஜேக்கப் எதிர்பாராத ஒன்று.

“அப்படின்னா பிரசாத்தோட குறையை முதல்ல நிறையாக்கணும். அப்படித்தானே...?”

“நிச்சயமா.”

“மருந்தே இல்லைன்னு டாக்டர்கள் கைவிட்டுட்டாங்களே சார்...”

“எனக்குத் தெரிஞ்சு, டாக்டர்களுக்கெல்லாம் டாக்டரான ஒருத்தர் இருக்கார். அவர் பார்த்துக்குவார் ஜேக்கப்.”

“யார் சார் அவர்?”

“கல்யாண சித்தர்...”— பஞ்சாட்சரம் பதிலோடு தன் மேசையின் கண்ணாடிக்குக் கீழ் செருகி இருந்த புகைப்படம் ஒன்றைக் காட்டினார்.

புகைப்படத்தில் புதர் போல தாடி, மீசையோடு கோமணம் மட்டுமே கட்டிய நிலையில் ஒருவர்.

“இவரா சார்...?”

“இவரேதான்.”

“எங்க சார் இவர் இருக்கார்?”

“கொல்லிமலையில...”

“இந்த சேலம் பக்கத்துல இருக்கே... அந்த மலையா சார்?”

“அங்கேயேதான்.”

“பிரசாத் என்ன செய்யணும்... இவரைக் கும்பிடணுமா?”

“முதல்ல ஜாதகத்தைப் பார்த்து முடிக்கறேன். பிறகு பேசுவோம்...”

ஜேக்கப் அதற்கு மேல் அவரைக் குடையாமல், ஆனால் நம்பிக்கையோடு எழுந்தான்.

"நிச்சயம் நீங்க நல்லபடி ஏதாவது செய்வீங்கன்னு எனக்குத் தெரியும் சார். சீக்கரமா செய்யுங்க. பாவம் சார் அவன்..." என்று நண்பனுக்காக வருந்தியபடி, அந்த அறையைவிட்டு வெளியேறினான்.

பஞ்சாட்சரமும் நம்பிக்கையோடு அந்தப் புகைப்படத்தைப் பார்த்தார். உற்றுப் பார்த்தவர் கண்கள் இடுங்க, கைகளைக் கூப்பினார். மனதுக்குள், 'சாமி! மனுஷ வாழ்க்கையைத் தவத்தால ஜெயிச்சவர் நீங்க. பாவம் இந்தப் பிள்ளை. இவனுக்காக நான் பிரார்த்திக்கறேன். நல்ல வழி காட்டுங்க' என்று உருகினார்.

அப்படியே சில நொடிகள்...

கண்ணைத் திறந்தவருக்கு திக்கென்றது.

எதிர் நாற்காலியில் கல்யாண சித்தர்!

நாற்காலியில் எப்படி அமர வேண்டுமோ அப்படி அமராமல் குந்திக்கொண்டிருந்தார்.

வலது கை பரபரவென்று அவரது சடைமுடியில் அரிப்பைத் தேய்த்து இடறிக்கொண்டிருந்தது. கண்களில் மட்டும் பஞ்சாட்சரத்தையே வெறிக்கும் ஒரு கூர்மை.

"சாமி... நீங்களா?"

"நானேதான்."

"இப்பத்தான் உங்களை நினைச்சேன். நேரிலேயே வந்து நிக்கறீங்களே...!"

பதிலுக்கு அவர் சிரித்தார். பஞ்சாட்சரம், அறைக் கதவைப் பார்த்தார். அது சாத்தியே இருந்தது.

"சாமி..."

"என்ன?"

"வந்த விதம்...?"

"................"

"நாங்கல்லாம் சாதாரண மனுஷங்க. ஒரு இடத்துல இருந்து இன்னொரு இடத்துக்குப் போக சைக்கிள், ஸ்கூட்டர், கார், பஸ், ரெயில்னு வாகனங்களையும், நேரத்தையும் செலவழிக்கிறவங்க..."

"செலவழி... செலவழி. அப்படியே அதனால பூமி, காத்து,



வானம்னு எல்லாத்தையும் பாழ்படுத்தி அழிவையும் தேடிக்கோ. எனக்கென்ன வந்தது? ஆமா, என்னை எதுக்குக் கூப்பிட்டே?"

"நான் கூப்பிடலை, நினைச்சேன்."

"கூப்பிட்ட மாதிரி இருந்தது. சரி... எதுக்கு?"

"எங்க ஆபீஸ்ல ஒருத்தர்... பாவம், கல்யாணமாகி பத்து வருஷமாகியும் புத்திர பாக்கியமில்லை..."

"ஹூம். அதுக்கென்ன இப்போ?"

"என்ன சாமி இது... புத்திர பாக்கியம் வேணும்..."

"கட்டம் இருக்கா?"

"ஜாதகமா?"

"நான் கட்டம்னுதான் சொல்வேன்."

"கட்டம் கட்டமா இல்லை. ஆனா பிறந்த நேரம், நாள், இடம்கற குறிப்பு இருக்கு."

"எங்கே, அதைக் கொண்டா..." - அவர் கரம் நீண்டது. குறிப்புகள் அதில் ஏறிக்கொண்டன.

அவரும் அதை உற்றுப் பார்க்க ஆரம்பித்தார்.

## 3

பதினாறு பேறுகளில் நான்காவது பேறு நெல்! பிறக்கும் போது நல்ல தாய்- தந்தை வயிற்றில் கர்ம வினையின் துணையுடன் நல்ல நேரப் புள்ளியில் பிறந்து, கண் திறந்து பார்த்து அறிவுடன் செயல்படத் தொடங்குவது முதல் மூன்று பேறு. பிறந்துவிட்ட ஒருவனுக்கு இறக்கும் வரை அந்தப் பரமன் படியளக்க வேண்டும். 'சோற்றுக்கில்லை- பட்டினி' என்று உயிர் பிரிந்துவிடக்கூடாது. அதே நேரம் நாலு பேர் வந்தால் அவர்களுக்கு வயிறாரச் சோறிடும் வசதியான அடிப்படை வேண்டும்.

உலகிலேயே எந்த ஒரு மனிதனும் போதும் போதும் என்று சொல்வது வயிறு நிரம்பச் சாப்பிடும்போதுதான். அதே வேளை அந்தப் பசியும்கூட ஒரு முறை சாப்பிடுவதால் எல்லாம் அடங்கிவிடுவதில்லை. பசி என்னும் நெருப்பு அதிகம் எரியாமலும், அவிந்து அடங்கிவிடாமலும் தொடர்ந்து இருந்தபடியே

இருப்பதாகும்.

**இந்தப் பசிக்கான உணவான நெல்லை நிறைவாகப் பெறுவதே நான்காம் பேறு. நெல்லைப் பெற்றவன், நான்காம் படியைக் கடந்தவன் ஆவான்.**

அந்தக் காகிதக் குறிப்பை உற்றுப் பார்த்தவர், விரல்விட்டு சிறு பிள்ளைகள் கூட்டிக் கழிப்பது போல் ஏதேதோ செய்துவிட்டு பஞ்சாட்சரத்தைப் பார்த்து, "ஒரு காகிதம் எடுத்து கட்டம் போட்டுக்கோ..." என்றார்.

"ஜாதகக் கட்டம்தானே சாமி...?"

"ஆமாம். சீக்கிரமாப் போடு."

பஞ்சாட்சரமும் கட்டத்தை மளமளவென்று போட்டு முடித்துவிட்டு, "போட்டாச்சு சாமி" என்றார்.

"சரி, நான் சொல்ல அந்தக் கட்டங்கள்ல யார், எங்க இருக்காங்கன்னு சொல்றேன். குறிச்சுக்கோ..."

"சரி சாமி!"

"மேஷத்துல மாந்தி..."

"ம்."

"ரிஷபத்துல செவ்வாய்..."

"ம்."

"மிதுனத்துல சந்திரன்... கடகத்துல சூரியன்... சந்திரனோட வீட்டுல சூரியன்... அதாவது. உன்னோட இந்த ஆபீஸ்ல நான் இருக்கற மாதிரி..." அவர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

தொடர்ந்து சாமி சொல்லச் சொல்ல அவர் குறித்துக்கொண்டார். இறுதியாக ஒரு ஜாதகம் உருவாகிவிட்டது. பஞ்சாட்சரத்துக்கு பிரமிப்பாக இருந்தது. பஞ்சாங்கத்தை எடுத்துக்கொள்ளாமல், காகிதம், பேனா என்று எழுதிப் பார்க்காமல், மனக்கணக்காகவே இந்தக் கிரகம், இந்த நாளில், இந்த நேரத்தில், இந்த வீட்டில் இருந்தது என்று கூறிவிட எவ்வளவு ஞானமும், ஞாபக சக்தியும் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

"காலையில பிரம்ம முகூர்த்தத்துல கண் விழி. உச்சந்தலையில உச்சி வெயில் படாம பார்த்துக்கோ. தினமும் தலைமுழுகக் குளி. துளசி சாப்பிடுற மாதிரி, நாலு வல்லாரைத் தழையைச் சாப்பிடு. ஞாபகசக்திக்கு அப்புறம் கேக்கணுமா என்ன?" என்று– பஞ்சாட்சரம்



வியந்ததற்கும் ஒரு பதிலையும் சொல்லி முடித்தார்.

"சாமி! உங்ககிட்டே எல்லாமே ஆச்சரியமும், அதிசயமுமாத்தான் இருக்கு."

"ஒரு .புண்ணாக்கும் என்கிட்ட கிடையாது. சரி, நீ என்ன கேக்கணுமோ கேளு..."

"ஜாதகத்தை உக்காந்த இடத்துல கணிச்சிட்டீங்க. புத்திர பாக்கியம் இருக்குதானே?"

"இருக்கு. சந்தேகமே வேண்டாம். ஆனா..."

"என்ன சாமி... ஆனான்னு கொக்கி போடுறீங்க?"

"இந்த ஜாதகம் பரிகாரம் செய்து கடைத்தேற்ற ஜாதகம்!"

"இந்த ஜாதகம் பரிகாரம் பண்ணினா சரியாயிடுமா?"

"அப்ப பரிகாரம் பண்ணினா சரியாயிடுமா?"

"மருந்து சாப்பிட்டா குணமாகித்தானே தீரணும்?"

"என்ன பரிகாரம் சாமி..."

"பதினாறு விஷயங்களை இவன் தர்மம் பண்ணணும்..."

"பதினாறா? பதினாறும் பெத்துப் பெருவாழ்வு வாழுன்னு சொல்வாங்க. கேள்விப்பட்டு இருக்கேன். நீங்க அதை இவன் கொடுக்கணும்னு சொல்றீங்களா?"

"ஆமாம். இந்த ஜாதகன் வம்சாவழியில இவனோட நேரடி ரத்த சம்பந்தம் கொண்ட இவனது முந்தைய உறவுகள் இந்தப் பதினாறு பேறுகளுக்கு எதிராகவும், அதுலேயே பாவத்தையும் செய்து வெச்சிருக்காங்க. எல்லாம் ஒண்ணு சேர்ந்து ஒரு புள்ளியில கூடி இவன் தலையில விடிஞ்சிருக்கு. அவ்வளவுதான் விஷயம்..."

"சாமி..."

"என்ன?"

"இந்தப் பாவங்களை இவர் பண்ணலை. இவரோட உறவுகள்... அதாவது ரத்த சம்பந்தப்பட்டவங்க பண்ணினதா சொல்றீங்க. நான் தெரிஞ்சுக்கறதுக்காகக் கேக்கறேன். அவங்க பாவங்களுக்கு இவர் எப்படிப் பொறுப்பாவார்?"

– அவரின் கேள்விக்கு கல்யாண சித்தர் கோணலாக ஒரு மாதிரி சிரித்தார்.

"என்ன சாமி... நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனோ?"

"பின்ன... நீ வெச்சிருக்கியே உடம்பு... அது யாரோடது?"

"சாமி..."

"என்ன சாமி... உன் உடம்புக்குள்ளேயே பதினாறு பேர் இருக்காங்க. அது தெரியுமா?"

"என் உடம்புக்குள்ள பதினாறு பேரா?"

"ஆமாம். உன் மூக்கு உன் முப்பாட்ட விந்துக்கண்ணி. உன் நெத்தி அதுக்கும் முந்தையவனுது. உன் முக அமைப்பு, தாயோடது. உன் உயரம், நாலாவது தாத்தாவினுடையது..."

"சாமி... இதை எப்படி நம்பறது?"

"உன்னை யார் நம்பச் சொன்னது? நம்பாதே, போ."

"கோவிச்சுக்காதீங்க சாமி, நான் புரிஞ்சுக்கறதுக்காகக் கேட்டேன்."

"சில விஷயமெல்லாம் கேட்டுத் தெரிஞ்சுக்கற விஷயங்கள் இல்லை. அதுக்கெல்லாம் விடை சப்தத்துல இல்ல. அமைதியா யோசிக்கிறதுலயும், கவனிக்கிறதுலயும்தான் இருக்கு."

"மொத்தத்துல நாம செய்யற நல்லது– கெட்டது நம்ம சந்ததிகளைப் பாதிக்கும்னு சொல்றீங்க, அப்படித்தானே சாமி?"

"அப்படியும் சொல்லலாம். நீ வேற, உன் சந்ததிகள் வேற இல்லைன்னும் சொல்லலாம்."

– அந்த பதில், பஞ்சாட்சரத்தைச் சற்று குழப்பியது.

"என்ன பாக்கறே? இப்ப நீ இருக்கே... உன்னை நான் சவுக்கால அடிக்க விரும்பறேன். உனக்குப் பதிலா உன் குழந்தையை அடிக்கறேன். உன்னை விட்டுடுறேன்னா நீ சரின்னு சொல்வியா?"

"என்ன கேள்வி இது சாமி... குழந்தை அந்த அடியைத் தாங்குமா?"

"அது தாங்குது, தாங்கலை. நீ தப்பிச்சுக்கறே இல்லியா?"

"இல்ல சாமி... இப்பதான் நான் வசமா மாட்டுறேன். உடம்போட வேதனையை சாதாரணமா எடுத்துக்கலாம். ஆனா, மனசு அப்படி இல்லையே...?"

"இப்ப புரியுதா... நீ வேற, உன் சந்ததிகள் வேற இல்லைன்னு..."

"புரியுது. இப்ப நீங்க விஷயத்துக்கு வாங்க. இந்த ஜாதகர் எந்த மாதிரி பரிகாரம் பண்ணணும்?"

"கேக்க வேண்டிய கேள்வியைக் கேட்டுட்டே. சரி, சொல்றேன். கேட்டுக்கோ, அதுக்கு முந்தி நான் சொல்றதையும் உனக்குள்ளே



வாங்கிக்கோ. நீ எதைச் செய்யறியோ, அதுதான் உனக்கு திரும்ப வரும். எதைக் கொடுக்கறியோ அதுவும் உனக்குத் திரும்ப வரும்."

"வாஸ்தவம்தான் சாமி..."

"வாஸ்தவம்னு சாதாரணமா சொல்லிடாதே. வாழ்க்கைத் தத்துவமே இதுதான். உனக்கு ஒரு விஷயத்தை நீ கொடுத்துக்க முடியுமா?

"புரியலியே சாமி..."

"தனக்குத் தானே ஒருத்தன் தர்மம் பண்ணிக்க முடியுமா?"

"அது எப்படி முடியும்?"

"முடியும்."

"முடியுமா?"

"ஆமாம், முடியும். நீ பிறருக்குக் கொடுக்கும்போதுதான் உனக்குக் கொடுத்துக்க முடியும்."

"அப்படின்னா?"

"ஆரம்பத்துல நான் சொன்ன அந்த விஷயத்துக்கு வா. நீ கொடுப்பதே திரும்ப வரும். செய்யறதுதான் வினையாகி உன்னைத் தொடரும்..."

"அதனால?"

"உனக்கு இப்ப பிள்ளை பிறக்கலை. ஆனா, ஜாதகத்துல பிள்ளை பிறக்கணும்னு இருக்குன்னா?"– சற்று இடைவெளிவிட்டுத் தன் புதர் முகத்தைத் தூக்கி ஒரு பார்வை பார்த்தார்.

"சாமி... உங்க பார்வைக்கு எனக்குப் பொருள் தெரியலை. நீங்களே சொல்லிடுங்களேன்."

"முட்டாளே... ஒரு பக்கம் காலதாமதம்; ஆனா, அந்தப் பக்கமா குழந்தை. இதுக்கு அர்த்தம் என்னன்னா... நீ செய்ய வேண்டியதைச் செய்தா குழந்தை உன் கைக்கு வந்துடும்கறதுதானே?"

"அதைத்தான் பரிகாரம்னு சொன்னீங்களா?"

"ஆமாம். இந்த விஷயத்துக்கு மட்டுமில்லை. ஒரு குடும்பத்துல இருக்கற குழந்தைகளுக்குச் சரியா படிப்பு வரலைன்னா பதினாறு பேறுகள்ல கல்விங்கற ஒரு பேறு அவங்களுக்கு போச்சு. எங்கேயோ, எப்பவோ யாருக்கோ படிப்பு விஷயத்துல நீ செய்த உபத்திரவம்தான் ஒரு சுழற்சியில திரும்ப இப்படி வந்து நின்னுருக்குன்னு அர்த்தம்."

"அப்ப இதுக்கெல்லாம் பரிகாரம்...?"

"ஏது உன்கிட்ட..."

"என்கிட்ட... இல்லையோ, அதை நீ பிறருக்குக் கொடு..."

[illegible] இப்ப செல்வம் இல்லை. நான் எப்படி [illegible]

"கொடுக்கணும் மனசு வெச்சாக் கொடுக்க முடியும்?"

"சரி சாமி, அப்படிக் கொடுத்துட்டா?"

"நீ தப்பா எழுதினதை நீயே உன் கையால திருத்தி எழுதின[illegible]

அவ்வளவுதான் விஷயம்."

"இது என்னோட [illegible]"

"சன்னைப் பிரச்சினை [illegible]"

"அப்ப அதுதான் பிரச்சினைகளுக்கும் பொருந்துமா?"

"நிச்சயமா."

"அப்ப அதுதான் பரிகாரமா?"

"அப்ப இந்த ஜாதகரான பிரசாத்துக்குப் பிள்ளைப் பே[று]

இதுவரையில இல்லை, இல்லாத இவர் எப்படி பிள்ளை[...]

கொடுக்க முடியும்?"

"முட்டாளே... பிள்ளை கொடுக்கறதுன்னா இங்க அர்த்[தம்]

பண்ணிக்கிறியே... பிள்ளைக்குக் கொடுக்கறதுன்னு இங்கே பொரு[ள்]

கொள்ளணும்."

"எத்தனை அநாதைக் குழந்தைகள் இருக்காங்க..."

"ஓ... நீங்க அப்படி வர்றீங்களா?"

"அவனுக்கான ஒரு வாரிசு உருவாகறது. இப்படி அவ[ன்]

தொடங்கறதுலதான் இருக்கு..."

"நான் இப்பவே சொல்லிடறேன் சாமி, நான் சொன்னா கேக்[கு]

பிள்ளைதான் அவர்."

"நான் இப்ப சொல்லப்போற விஷயத்தையும் சேர்த்து[ச்]

சொல்..."

"என்ன சாமி?"

"கொல்லிமலையில கரடிப்பாறைங்கற ஒரு இடத்துக்[கு]

அவனையும், அவன் மனைவியையும் போகச் சொல். அங்[கு]

தொடர்ச்சியா அவனுக்கு ஏற்படப் போகிற அனுபவங்க[ள்]

குழந்தை கிடைக்கறது மட்டுமல்ல; அவனுக்கான பரிகாரமாக[வும்]

அவ்வளவும் அமையும்."

"இப்பவே கூப்பிட்டுச் சொல்லிடுறேன். நான் சொல்றதை[...]



நீங்களே சொன்னா இன்னும் நல்லது."

"பத்திரிகைகாரரா... நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். அங்கே பார்த்துட்டேன். சொல்ல வேண்டியதையும் சொல்லிட்டேன். அவனுக்கான சோதனைகள்ல... அவனுக்கான பதினொரு விஷயங்கள் ஒளிஞ்சிருக்கு.

சத்தியத்துக்கும், உண்மைக்கும் மாறுபட்டு மட்டும் எக்காரணம் கொண்டும் நடக்காம இருந்தாலே போதும். அந்தப் பதினொரு விஷயங்களும் வசமாகும். அது வசமானா... அவன் நால் தந்தையோட சேர்ந்து பதினெட்டுங்கற முழுமையான படிகளை கடந்தவனா மாறுவான். பதினெட்டை முழுசாக் கடந்தவன்தான் முழு மனுஷன். இவன் கடப்பான்னுதான் நினைக்கறேன். என்ன, இவன் ஜாதகத்துலதான் குழந்தை அழகா கண்ணுக்குத் தெரியுதே!"– நம்பிக்கையாக இருந்தது. கல்யாண சித்தர் சொன்னது. பஞ்சாட்சரம் உணர்ச்சி மிகுதியாலும், நன்றி உணர்வோடும் பதிலுக்குக் கைகூப்பினார். அப்போது சில நொடிகள் கண்களை மூட நேர்ந்தது.

திறந்து பார்த்தபோது எதிரில் அவர் இல்லை.

திறந்து பார்த்தபோது எதிரில் அவர் இல்லை. பஞ்சாட்சரத்துக்கு சிலிர்த்துவிட்டது உடம்பு. மிகச் சரியாக அந்த நொடி, கதவைத் திறந்துகொண்டு ஜேக்கப் உள்ளே வந்தான். கையில் ஒரு கோப்பு.

பொது மேலாளர் நின்ற கோலத்தைப் பார்த்துவிட்டு வியந்தான்.

"சார்... என்ன சார்? ஏன் உங்க கண் கலங்கி இருக்கு... கை கூப்பி இருக்கு? இங்க யாரும் இல்லையே...!"

"இதுவரை இருந்தார் ஜேக்கப். ஆனா, இப்பதான் போனார்..."

"யார் சார்...? இங்க யாரும் வந்த மாதிரியே தெரியலையே சார்...?"

"உங்களுக்குத் தெரியாதுதான். ஆமா, நீங்க வந்த விஷயத்தைச் சொல்லுங்க..."

"இந்த கோப்புல சில குழப்பங்கள். அதான் உங்ககிட்ட பேசிட்டுப் போக வந்தேன்."

"பேசிட்டாப் போச்சு. அதுக்கு முந்தி பிரசாத்தைக் கொஞ்சம் வரச் சொல்லுங்க."

"இப்பவே வரச் சொல்றேன் சார். அவன் ராஜினாமா முடிவுல இருந்து மாறிட்டான்ல..."

"நிச்சயமா. அது மட்டுமில்ல, அவருக்குக் குழந்தையும் உறுதி. அதுக்கு என்ன வழின்னு சொல்ற கடமையை, காலம் இப்ப என் கைகள்ல கொடுத்திருக்கு."

"அது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா சார்?"

"இது ஒண்ணும் தெம்பர ரகசியம் இல்ல. இருந்தாலும் பிரசாத்கிட்ட முதல்ல சொல்லிட்டு, பிறகு உங்ககிட்ட சொல்றேனே...!"

"சரி சார். இதோ, இப்பவே அவனைக் கூப்பிடுறேன்..." என்று அவர் மேசையிலுள்ள 'இண்டர்காமை' எடுத்து பிரசாத்தை அழைத்தான்.

அடுத்த இரண்டாவது நிமிடமே பிரசாத் அங்கே வந்துவிட்டான்.

"உட்காருங்க..." என்றார் அவரும்.

அமர்ந்தான்.

"சாதாரணமா இந்த இருக்கையில எப்பவும் நம்ம வேலை சம்பந்தமாத்தான் பேசிக்கொண்டிருப்போம். வித்தியாசமா இன்னிக்கு நான் உங்க தனிப்பட்ட விஷயம் பத்தி பேசப்போறேன். இது அலுவலக நேரமா இருக்கிறதால, பதிலுக்கு வேலை முடிஞ்ச பிறகு நீங்க கூடுதலாக ஒரு மணி நேரம் இருந்து வேலை பார்த்துட்டு போகணும்... சரியா?"

– புன்னகையோட கரிசனமாக அவர் கேட்ட விதமே மிக இதமாக இருந்தது. அந்த நேர்மை பிரசாத் மனதைத் தொட்டது.

"சுருக்கமாக சொல்லிக்கறேன் பிரசாத். உங்க ஜாதகம் இப்ப என் கையில! உங்ககிட்ட பேசின மறுநொடியே நான் என் குருநாதரா நினைச்சு வழிபட்டுக்கிட்டு வர்ற கல்யாண சித்தரைத்தான் மனசுக்குள்ளே பிரார்த்தனை செய்தேன். என் பிரார்த்தனைக்கு அடுத்த நொடி அவர் இங்கே, என் எதிரே வந்துவிட்டார். வந்தவர் நிறைய நல்ல விஷயங்களைச் சொன்னார். அதுல முதல் விஷயம், உங்களுக்குக் குழந்தை பாக்கியம் இருக்காம். இதோ அவர் கணிச்சுக் கொடுத்த உங்க ஜாதகம். இதை வெச்சுத்தான் சொன்னார்" –ஜாதகக் குறிப்பை அவர் நீட்டியதும், பிரசாத்துக்குப் புருவங்கள் வளைந்தன.

"என்ன பாக்குறீங்க... இது நான் போட்ட கட்டம். இது என் கையெழுத்துதான். ஆனா, இந்தக் கட்டத்துல இந்தக் கிரகங்களை அவர் சொன்னது..."



"அவர்... அவர்..."

"அவருக்கென்ன பிரசாத்!"

"அவருக்கு இப்ப இங்கே அவர் வந்தாரா?"

"இல்ல... இப்ப இங்கே அவர் வந்தாரா?"

"ஆமாம். ஏன் பிரசாத்... நம்ப முடியலையா?"

"ஆமாம் சார்... ஆமாம் சார்..."

"இல்லை சார்... யாரும் நுழைஞ்ச மாதிரியே தெரியல."

"புரியுது. ஆபீசுக்குள்ள யாரும் நுழைஞ்ச மாதிரியே தெரியல. ஆனா நான், வந்தாருன்னு சொல்றேன். அப்படித்தானே?" – பதிலுக்கு அவன் அமைதியாக அவரையே வெறித்தான்.

"சித்தர்கள் விஷயமே ஒரு புதிர்தான். அவர்களெல்லாம் எப்ப வேணாலும் வருவார்கள். அவர் எப்படி வந்தாருங்கறதோ, போனாருங்கறதோ இப்ப இங்க பெரிய விஷயம் இல்லை. நான் சொல்றதை நீங்க கேட்டு நடந்தா உங்களுக்குக் குழந்தை உறுதி."

"சார்... அது என்னன்னு முதல்ல சொல்லுங்க. பிரசாத் நிச்சயம் கேட்டுப்பான்" – இது ஜேக்கப்பின் வக்காலத்து.

"ரொம்ப 'சிம்பிள்'. நாம எதைக் கொடுக்கிறோமோ அதுதான் நமக்குத் திரும்ப வரும். இதுதான் அவர் சித்தாந்தம். அதே நேரம் வாழ்க்கையில நமக்கு ஏதாவது ஒரு குறை இருக்குன்னா, அது பிறர் பெறுவதுல ஒண்ணு குறையறதுதான். பிறருக்குப் பாதிக்குப் பாதியும்கூட குறையும். எது நம்மகிட்ட இல்லையோ, அதை நாம தானமா கொடுக்கத் தயாராயிடணும். இதுதான் பரிகாரம்."

"சார்... அப்ப பிரசாத் பரிகாரம் பண்ணினா விஷயம் முடிஞ்சதா?"

"ஆமாம் ஜேக்கப். இவருக்குக் குழந்தை இல்லை. அதுக்கு ஒரே பரிகாரம், இவர் ஒரு ஏழை அநாதைக் குழந்தைக்கு அப்பாங்கற ஸ்தானத்தைக் கொடுத்து, அதை வளர்க்க வளர்க்க இவருடைய விஷயத்துல பரிகாரம் ஏற்பட்டு, இவருக்கும் ஒரு குழந்தை உறுதியா பிறக்கும்னு கல்யாண சித்தர் சொன்னார்."

பொது மேலாளர் சொல்லி முடிக்கவும், ஒரு விரக்திச் சிரிப்பை பிரசாத் சிரிக்கவும் சரியாக இருந்தது.

"ஏன் சிரிக்கிறே...? இது சிரிக்கிற விஷயமா? எவ்வளவு 'சீரியஸா'ன விஷயம் தெரியுமா?" – ஜேக்கப் கத்த ஆரம்பித்துவிட்டான்.

"'சீரியஸ்' விஷயம்தான் ஜேக்கப். எனக்கும் பிள்ளை வேறுவ... தத்து எடுத்துக்கறதைத் தவிர வேறு வழி இல்லைங்கறது நல்ல... தெரியும். இதை சார் நேராவே சொல்லலாம். ஆனா, ஒரு சித்த... சொன்னாருங்கறதும், அதன் பிறகு குழந்தை பிறக்குங்கறதும் எனக்கு என்னவோ சரியா படலை. சார் என்னைத் தேத்தறதுக்காகச் சொல்... ஒரு விஷயமாத்தான் படுது..."

இதைக்கேட்டு பஞ்சாட்சரம் பதறிவிட்டார்.

"சத்தியமா இல்லை பிரசாத்... உங்களுக்காக நான் மனசார வருந்தி அவரை நினைக்கவும், உடனே வந்தார். நான் உங்ககிட்ட சொன்ன விஷயத்தையும் சொன்னார். இன்னும்கூட சில விஷயங்க... பாக்கி இருக்கு..."

"அது என்னன்னு என்கிட்ட சொல்லுங்க சார் நீங்க!"- என்று ஜேக்கப்தான் பதில் ஆர்வத்தைப் பெரிதாகக் காட்டினான்.

"நீங்க கேட்டாலும், கேக்காட்டியும் நான் சொல்லத்தான் போறேன். இது அவர் சொன்னது. அதுவும் இவருக்காக அவர் இங்கயே வந்து சொன்னது. அப்படி இருக்க நான் சொல்லாம விடுவேனா?"

"சொல்லுங்க சார்... அது என்னன்னுதான் தெரியட்டுமே...!"

"சொல்றேன். கொல்லிமலையில கரடிப்பள்ளம்னு ஒரு இடம் இருக்காம். அங்க பிரசாத்தும், அவர் மனைவியும் போகணுமாம். அப்படிப் போகும்போது, அங்க தொடர்ச்சியா இவருக்குச் சில அனுபவங்கள் ஏற்படுமாம். அந்த அனுபவங்களே இவங்களுக்கான பரிகாரமா அமைஞ்சிடுமாம்."

"அது எப்ப சார்?"

"அது தெரியாது. ஆனா, அவரோட வாக்கை பிரசாத் நம்பறபட்சத்துல நாளைக்கேகூட கிளம்பலாம். ஆனா ஒண்ணு... இனி நான் சொல்லப் போறதுதான் முக்கியமான ஒண்ணு."

"என்ன சார்...?"

"எங்கேயும் எப்பவும் சத்தியம், தர்மத்துக்குக் குந்தகம் வந்துவிடக்கூடாது."

"அதாவது கொஞ்சமும் பாவம் பண்ணிடாதபடி நடந்துக்கணும் அப்படித்தானே சார்..."

"ஆமாம்."



"பிரசாத்... இன்னும் என்ன யோசனை! ராஜினாமா கடிதத்தை விருப்புக் கடிதமா மாத்து. நீயும், உன் மனைவியும் உடனே புறப்படுங்க..."

ஜேக்கப் துளியும் சந்தேகமே இன்றி, பிரசாத்தைத் தூண்டிவிடத் தொடங்கினான்.

ஆனால், பிரசாத்திடம் ஒரு வித மவுனமே நிலவியது.

## 4

படிகளில் தாய், தந்தை, அறிவு, தெல் என்னும் நான்கு படிகளை அடுத்து ஐந்தாவதாக வருவது அழகு என்னும் லட்சணமாகும். மனிதப் பிறப்பெடுப்பது என்பதுகூட பெரிய விஷயமில்லை. அப்படி எடுக்கும் பிறப்பில் கூன், குருடு, செவிடு போன்ற ஊனங்கள் இல்லாமல் பிறப்பது என்பதுதான் முக்கியமான விஷயம். கூடவே நல்ல நிறம், சரியான உயரம் என்பதும் அடக்கம்.

இத்தனை அம்சங்களோடும் பிறந்து பிணியின்றி பாலருந்தி, நல்ல சக்தியுள்ள ஆகாரங்களையும் உண்டு குழந்தைப் பிராயத்திலேயே எல்லாவித சக்தியையும் கொண்ட ஒரு ஆரோக்கிய உடம்பாக இருக்க வேண்டும்.

இந்த ஆரோக்கியத்தை அடுத்து உடம்பில் அமையும் அடுத்த இன்னொரு விஷயம், அழகிய முக அமைப்பு... அதில் தேஜஸ்!

இந்த தேஜஸ்தான் முகராசியை உருவாக்குகிறது. பார்த்தால் பார்த்த நொடி நேசிக்கத் தூண்டுகிறது. நல்ல களையான முகமும், ஊனமில்லா உடம்பும் பதினாறு பேறுகளில் அழகு என்னும் அம்சமாக இருந்து... இதுவே ஐந்தாம் படியாக அமைகிறது.

இந்தப் படியைக் கடந்தால், ஆறாம் படியில் காத்திருக்கிறது கல்வி.

**கா**ர், 'போர்டிகோ'வுக்குள் நுழையும்போதே ஜன்னல் வழியாகக் கவனித்தாள் தேவிகா. பிரசாத்தின் மனைவி.

தூங்கி எழுந்தவள் போல் 'நைட்டி'யில் இருந்தாள். அப்படியே வந்து கதவைத் திறந்தாள். உள்ளே நுழையும் பிரசாத்தை ஏறெடுத்தும் பார்க்காமல் திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

சில காலமாகவே அவள் இப்படித்தான் நடந்துகொள்கிறாள்.
அவளிடம் அங்குலத்துக்கு அங்குலம் விரக்தி.
அதை அவள் இப்படியெல்லாம்தானே காட்ட முடியும்! அதிலும்
மருத்துவ பரிசோதனை அறிக்கை வந்த பிறகு அவளிடம் உயிரே
இல்லை. கொஞ்சம் போல ஒட்டிக்கொண்டிருந்த நம்பிக்கையும்
பட்டென்று அறுந்துவிட்டது.

“தேவிகா...”– படுக்கையறை நோக்கி நடந்தவளை அழைத்தான்
பிரசாத்.

அவள் திரும்பவில்லை. ஆனால் நின்றாள்.

“இன்னிக்கு ஆபீஸ்ல ஒரு திருப்பு முனை...”– அவன் மெல்ல
ஆரம்பித்தான். அவள் கேட்டும் கேட்காத மாதிரி மீண்டும் நடக்க
ஆரம்பித்தாள்.

“நில்லு... நான் சொல்றதை முழுசாக் கேட்டுட்டுப் போ.”

அவள் இந்த முறை திரும்பினாள்.

“ஆமா... நீ என்ன, காலையில நான் ஆபீஸ் போகும்போது
பார்த்த மாதிரி அப்படியே இருக்கே... குளிக்கலையா?”

அவளிடம் மவுனம்.

“எதுக்கு தேவிகா இப்படி விரக்தியா இருந்து உன்னையும்
வதைச்சுக்கிட்டு என்னையும் வதைக்கறே...?”

அவள் மவுனத்துக்கு நடுவில், கொஞ்சமாய் முறைக்க
ஆரம்பித்தாள்.

“அப்படிப் பாக்காதே... உனக்கு ஒரு விடுதலை தரணுங்கறதுதான்
என் எண்ணம். என் உடம்பு பற்றியும், இந்தக் குறை குறித்தும் முன்னமே
தெரிஞ்சிருந்தா நிச்சயம் நம்ம கல்யாணமே நடந்திருக்காது.
இன்னிக்குக்கூட நான் நிறைய முடிவுகளை எடுத்துட்டேன்.
அதுல ஒண்ணு, அவ்வளவு சொத்துகளையும் உன் பேருக்கு நான்
மாத்தி எழுதினது... பாரு, அதுக்கான பேப்பரை...”– தன் சிறிய
சூட்கேசை திறந்து ஒரு பத்திரக் கட்டைத் தூக்கி அவள் முன்
போட்டான். அவள் புருவத்தில் லேசான வளைசல்.

“இது உனக்கான பத்திரம் மட்டுமல்ல, இதுல நான் ஒ
விருப்பத்தையும் வெச்சிருக்கேன். அதுதான் ரொம்ப முக்கியம். அந்
வேற ஒரு கல்யாணம் பண்ணிக்கணும், சந்தோஷமா உனக்கு
மணவாழ்க்கை அமையணும்... அப்பத்தான் என் சொத்து உன்னை





சேரும்னு இதுல எழுதி இருக்கேன்..."

அவன் சொன்னது அவள் முகத்தில் அதிர்ச்சி அலையாய் பரவியது.

"இப்படி ஒரு உயிலை தயார் செய்துவிட்டு, என் வேலையையும் ராஜினாமா பண்ணிட்டேன். ஆனா..."

பிரசாத் 'ஆனா' போட்டு இடைவெளியில் நீட்ட, தேவிகாவை ஒரு சின்ன சுவார்சியம் தொற்றிக்கொண்டது.

"எல்லாமே மாறிப் போச்சு. எங்க பொது மேலாளர் மிஸ்டர் பஞ்சாட்சரம், ஒரு 'ஜென்டில்மேன்'. அவர் என் ராஜினாமாவை ஏத்துக்கலை. பதிலுக்கு அவர் நமக்கு ஒரு நல்ல வழியைக் காட்டி இருக்கார்..." – அவன் திரும்பவும் இடைவெளி விட்டான்.

அவள் முகத்தில் ஒரு எதிர்பார்ப்பு.

"மிஸ்டர் பஞ்சாட்சரம், என் ஜாதகத்தைக் கேட்டார். நான் பிறந்த நேரம், நாள், ஊர் இந்த மூன்றையும் சொன்னேன். அடுத்து ஒரு மணி நேரத்துல என்னைக் கூப்பிட்டு, நமக்குக் குழந்தை இருக்கும்னு ஜாதகம் சொல்றதா சொன்னார்."

அவன் அப்படி சொல்லவும், அவள் சிரித்துவிட்டாள்.

"நானும் இப்படித்தான் தேவிகா சிரிச்சேன். ஆனா, பஞ்சாட்சரம் சார் அவரா சொல்லலை. கல்யாண சித்தர்னு ஒருத்தர்தான் அவருக்கு இப்படி சொன்னவர்..."– தொடர்ந்து நடந்த அவ்வளவையும் கூறி முடித்தான். இறுதியில் அவள் முகத்தில் நிரந்தரமாக ஒரு கேலிச் சிரிப்பு ஒட்டிக்கொண்டது.

"தேவிகா... உன்னால நம்ப முடியலையா?"

"நீங்க நம்புறீங்களா?"– அவள் திருப்பிக் கேட்டாள்.

அவள் வாயைத் திறந்து பேசிய முதல் பேச்சும் அதுதான்.

"நான்... நான்..."

"சொல்லுங்க... நீங்க நம்புறீங்களா?"

"பஞ்சாட்சரம் சார் பொய் சொல்றவர் இல்ல..."

"சரி... இந்த சித்தர் சமாச்சாரத்தை– மர்மமான முறையில அவ வந்துட்டுப் போன விஷயத்தை– நாலு பேர்கிட்ட சொல்வோம் யாராவது ஒருத்தராவது நம்பறாங்களான்னு பார்ப்போமா?"

"தேவிகா... பஞ்சாட்சரம் சார் தொடங்கும்போதே புத்திபூர்வமா சித்தர்கள் விஷயங்களைப் பார்த்தா, அது சரியா புரியாதுன்



சொல்லிட்டார்."

"அவர் இப்படியெல்லாம் சொல்லி உங்களை ஏன் முட்டாள் ஆக்குறாருன்னு தெரியலை. தத்து எடுத்துக்க நமக்குத் தெரியாதா என்ன? ஆயிரம்தான் ஆனாலும் பெத்தப் பிள்ளை மாதிரி வருமா?"

"நான் அதை மறுக்கலை. அதே நேரம் நாம அப்படி செய்தாதான் நமக்கு பிள்ளை பிறக்கும்னு விதி இருக்கும்போது, அதை எப்படி மாத்த முடியும்?"

"அப்படியா... அப்ப அந்தப் பெரிய மனுஷனோட உளறலை நீங்க நம்புறீங்க. அப்படித்தானே?"

"தேவிகா! அவசரப்பட்டு அப்படியெல்லாம் பேசாதே, நம்மால புரிஞ்சுக்க முடியாத விஷயங்கள், உலகத்தில் எவ்வளவோ இருக்கு."

"இருக்கட்டும்."

"அப்ப உன் முடிவான பதில்?"

"முடிவான பதில்– நீங்க சித்தர் சொன்னார், 'ஜி.எம்.' சொன்னாருன்னு அவங்க பேரைச் சொல்லி, என்னை ஏமாத்தப் பார்க்கிறீங்க. நேரடியா ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்குவோம்னு சொல்ல உங்களுக்குத் தைரியம் இல்லை. ஒரு டாக்டருக்கு பத்து டாக்டருங்க உங்களைப் பிரிச்சு மேய்ஞ்சு, இந்த ஜென்மத்துல உங்களுக்குக் குழந்தை இல்லைன்னு சொன்ன பிறகும் என்னை ஏமாத்தி என்கூட வாழ வழி இருக்கான்னு பாக்கிறீங்க..."– அவள் பொரிந்து தள்ளினாள்.

அவனுக்கு முகமெல்லாம் இருண்டுவிட்டது.

"தேவிகா... இந்த உயில், இதுல என்னோட விருப்பம்... எல்லாத்தையும் பார்த்த பிறகுமா நீ இப்படிச் சொல்றே...?"

"இதெல்லாம் சும்மா ஒரு ஏமாற்று."

"இல்ல தேவிகா, வெண்ணெய் திரண்டு வரும்போது, தாழி உடைஞ்சிடப் போகுது. கடைசி கடைசியா நாம இப்படியொரு முயற்சி செய்துதான் பார்ப்போமே..."

"இல்ல... இதுல ஏதோ சதி இருக்கு. கரடிப்பள்ளம், யானைப்பள்ளம்னு கூட்டிக்கிட்டுப் போய் நீங்க என் கழுத்தைத் திருகிப் போட்டுடலாம். இல்லை, புடிச்சுத் தள்ளிவிட்டு கொலை

செய்துடலாம். வந்த இடத்துல விபத்து ஏற்பட்டு நான் செத்துட்ட... ஊர் உலகத்தை நம்ப வெச்சுட்டு, அப்புறமா நீங்க இப்படியே கால... கழிக்க முயற்சி செய்யலாம்.

நீங்க ஒரு மலடுன்னு அப்ப உலகம் சொல்லாது. மனைவியை இழந்துட்டு கல்யாணமே செய்துக்காம வாழறவர்னுதான் ஊரு... உலகமும் உங்களைப் பற்றி நினைக்கும். இதுதான் உங்க திட்டம்...'

– தேவிகாவின் பேச்சு, பிரசாத்தைத் துவம்சப்படுத்திவிட்டது...

"தேவிகா..." என்று பதற்றமாகி எழுந்தவன், உயிலைத் தூக்... அவள் முன்னால் விட்டெறிந்தான்.

"இப்ப சொல்றேன்... இனி உனக்கும், எனக்கும் எந்த... சம்பந்தமும் இல்லை. நீதிமன்றத்துல விவாகரத்து ஆனாதான் நீ என்... மனைவி இல்லேன்னு அர்த்தமில்லை. இப்பவே... இந்த நொடியே... அப்படித்தான். பத்து வருஷ தாம்பத்தியத்துல, நான் எப்படி, என்... குணம் எப்படின்னு எதையும் நீ கொஞ்சம்கூட புரிஞ்சுக்கலை... ஒரு பொம்மை போலதான் என்கூட வாழ்ந்திருக்கே... இறுதியா... எவ்வளவு பாவத்துக்கு நடுவுலேயும் ஒரு நல்ல வழி தெரிஞ்சு... நீ அதை நம்பாம கொச்சைப்படுத்திட்டே..... இனியும் உன்கிட்டே... கெஞ்சினா, நான் நல்ல ஆம்பளையே இல்லை."

அவனும் பதிலுக்குச் சீறி முடித்தான்.

கூர்ந்து பார்த்தவள், "எதுக்கு இவ்வளவு பெரிய வசனமெல்லாம்... அந்த சித்தர் அங்க மாயமா வந்த மாதிரி, இப்ப... இப்ப... எ... எதிர்க்க வரட்டும். உங்க 'ஜி.எம்.'கிட்ட சொன்னதை நம்மகிட்ட... சொல்லட்டும். பிறகு நீங்க சொல்றதை நான் கேக்கறேன்."

அதறாமல் பதறாமல் தேவிகா திருப்பிக் கேட்டது பிரசாத்தையு... யோசிக்க வைத்தது. அடுத்த நொடியே மவுனம் ஆகிவிட்டா... மிக இறுக்கமான மவுனம். அவளும் அமைதியாக அவனை ஊன்... பார்த்தாள்.

"என்ன... பதிலைக் காணோம்?" – சீண்டினாள்.

அவனோ வெடுக்கென்று நிமிர்ந்தான்.

"இதுல இருந்தே நீங்க சொன்ன எல்லாம் பொய்யின்னு தெரியு... உங்க பொய்க்காக உங்க 'ஜி.எம்.', அப்புறம் சித்தர்னு இரண்டு பே... வேற சேர்த்துக்கிட்டு இருக்கீங்க. பாவம் அவங்க. சித்தராம் சித்தர்... யாருக்குக் குழந்தை இல்லைன்னு பார்த்து, பலன் சொல்றதுதா... சித்தர்களுக்கு வேலை பாருங்க..."



அலட்சியமான பேச்சோடு அங்கிருந்து அகலத் தொடங்கினாள்.

அப்படி அவள் பேசியதற்கு பதிலாக செருப்பை எடுத்து அடித்திருக்கலாம். அதுகூடத் தேவலை என்று மனதில்பட்டது அவனுக்கு!

தன் இயலாமையை நினைத்துக் கண்ணீரே வந்துவிட்டது பிரசாத்துக்கு. அப்படியே கண்ணாடி எதிரே போய் நின்றான். ஆறடிக்குக் குறையாத ஆஜானுபாகுவான உடம்பு. ஆனால், இதில் இருந்து பிரதி எடுக்கத்தான் வழியில்லை. எல்லாமே அழகாகத்தான் இருக்கிறது. கண், காது, மூக்கு, வாய் என்று எதிலும் கோணல்மாணல் இல்லை. ஆனால், உள்ளே உயிர்ச்சத்து இல்லை.

கிட்டத்தட்ட ஒரு மெழுகு பொம்மையும், தானும் ஒன்று என்று உணர்ந்தவன் ஒரு சிரிப்பு சிரித்தான். கீழே கிடந்தது உயில். அதை எடுத்து மேசை மேல் வைத்தான். வீட்டை ஒரு முறை நான்கு பக்கமும் திரும்பித் திரும்பி பார்த்தான். அரங்கில் மாட்டி இருந்த கல்யாணப் புகைப்படத்தின் அருகில் போய் நின்றான். பின் ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு, அதைக் கழட்டினான். அப்படியே அலமாரியைத் திறந்து கல்யாண 'ஆல்பத்தை' வெளியே எடுத்தான். தீப்பெட்டியை எடுத்து வந்து அதற்குத் தீவிட்டான். நடுவீட்டில் திகுதிகு வென்று அது எரிந்து அடங்கியது.

தேவிகா, 'எக்கேடோ கெட்டுப் போ' என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொண்டாள்.'

இறுதியாக அவள் இருந்த அறையின் கதவருகே போனவன், அவளைத் தொடும் பாவனையில் அந்தக் கதவைத் தொட்டான். மனதுக்குள் பேச ஆரம்பித்தான்.

'பாவம் தேவிகா நீ... என்னால உனக்கும் மலடின்னு கெட்ட பேர்... உன் வரையில நான் ஒரு தண்டனையா போயிட்டேன். இனிமே உனக்கு விடுதலை...' – என்றவன், அப்படியே திரும்பிப் பார்க்காமல் நடக்க ஆரம்பித்தான்.

## 5

உலகில் உன்னதமான விஷயம் கல்வி. ஒருவன் இறப்புக்குப் பிறகும் அவன் கொண்டு செல்லும் விஷயம் இரண்டுதான். ஒன்று

அவனது கரும வினை; அடுத்தது கல்வி. மற்றபடி எவ்வள... கோடிகள் சம்பாதித்து இருந்தாலும் பயனில்லை. கல்வி மட்டு... ஒருவருக்கு வாய்த்துவிட்டாலோ, மற்ற விஷயங்கள் தானாகத் தே... வந்துவிடும். கல்விக்கு அப்படியொரு சக்தி. அடுத்து, அள்ள அள்ள... குறையாத ஒரே செல்வமும் கல்விதான்!

கல்வி இல்லாத ஒருவன் எவ்வளவுதான் செல்வம் இருந்தாலு... கல்வி கற்றவன் தயவினால் மட்டுமே அந்தச் செல்வத்தை... பேண முடியும். கல்விதான் ஞானத்தைத் தருகிறது. ஞானம்தா... பகுத்துப் பார்த்து அனைத்தையும் அறிவதாக உள்ளது. கல்வியை... கண்களுக்குச் சமமாகக் கூறுகின்றனர். கல்வி இல்லாதவர்க... கண்கள் இருந்தும் அறிவுக் குருடர்களாக உள்ளனர்.

ஒரு மனிதன் பெறும் பேறுகளில் பிரதானமானது கல்... வரிசையில் இது ஆறாவதாக உள்ளது. இந்த ஆறாவது படியை... கடந்தால் அடுத்து வருவது நுகர்ச்சி... நுகர்ச்சி என்றால்?

**வீ**தியில் இறங்கிவிட்ட பிரசாத்துக்கு எங்கே போவது என்... தெரியவில்லை! ஆனால் இனி இந்த ஊரிலோ, இல்லை இந்... தமிழ்நாட்டிலேயேகூட எங்கும் இருக்கக்கூடாது என்று மட்டு... எண்ணிக்கொண்டான்.

கால் போன போக்கில் நடக்க ஆரம்பித்தான்.

எங்கு பார்த்தாலும் ஒரே கூட்டம். ஒரு இடத்தில் பிஞ்சு... குழந்தையைக் காட்டி, ஒருத்தி பிச்சை எடுத்துக்கொண்டிருந்தா...

சோற்றுக்கு வழி இல்லாத இடங்களில்கூட குழந்தைகள். இ... நாட்டில், கட்டுப்படுத்த முடியாத பார்த்தீனியத் தாவரம் போ... எங்கும் மனித உயிர்கள்தான்!

அங்கே சுவர்களில் சிவப்பு முக்கோண எச்சரிக்கை... அ... அளவுக்கு நாட்டில் ஜன சந்தடி. ஆனால், தனக்கு அத... வக்கில்லாமல் போய்விட்டதே!

பிச்சைக்காரி வயிற்றில்கூட ஒரு உயிருக்கு அனுமதி வழங்கி... அந்த இறைவன், தன் வரையில் இப்படி கருணை இல்லாதவ... ஆகிவிட்டானே...! நடுத்தெருவில் நடந்துகொண்டிருக்கிறோ... என்பதையும் மீறி கண்களில் கண்ணீர் துளிர்த்தது. சுன்... விட்டுக்கொண்டான். பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. எதிர்... ஒரு ஓட்டல் தென்பட்டது.

சோர்வாக உள்ளே நுழைந்தான். தனியாக சந்தடியின்றிச் சாப்பி...



வேண்டும் போல் ஒரு விருப்பம். 'குளு குளு' அறை கண்ணில்பட்டது. உள்ளே போய் ஒரு மூலையாகப் பார்த்து அமர்ந்தான். 'சர்வர்' வரவும், "நான்கு இட்லி" என்றான். பின் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்து, 'பர்ஸ்' இருப்பதை உறுதி செய்துகொண்டான். 'பர்ஸ்'க்குள் 'ஏ.டி.எம். கார்டு' மற்றும் 'கிரெடிட் கார்டு'கள்.

'சர்வர்' இட்லியைக் கொண்டு வந்தபோது, அந்த அறைக்குள் நாலு சாமியார்கள் நுழைந்தனர்.

அவர்களைப் பார்க்க நல்ல தீட்சண்ணியம்.

ஆங்கிலத்தில் பேசிக்கொண்டனர். தங்களுக்குள் பேசிக்கொண்டதில் இருந்து, பத்ரிநாத்தில் இருந்து வந்திருப்பதைப் பிரசாத்தால் உணர முடிந்தது.

அவர்கள் ஆங்கிலத்தில் கேட்டது 'சர்வருக்குப் புரியவில்லை. திணறலோடு நின்றான். பிரசாத் தன்னையும் அறியாமல் அவர்களுக்கு உதவத் தொடங்கினான்.

"அவங்களுக்குச் சப்பாத்தியும், சப்ஜியும்தான் வேணுமாம். அது இருக்கான்னு கேக்கறாங்க..." என்றான். அடுத்த பத்தாவது நிமிடம் 'சர்வர்', கேட்டதைக் கொண்டு வந்துவிட்டான். அடுத்தடுத்து அவர்கள் கேட்க, பிரசாத்தே மொழிபெயர்த்தான்.

அவர்களும் பிரசாத்தை நன்றியுடன் பார்த்தனர்.

பின் அவனைப் பற்றி விசாரித்தனர். பிரசாத் அவர்களிடம் பொய் சொல்ல ஆரம்பித்தான்.

"என் பெயர் பிரசாத். எனக்குன்னு யாரும் இல்லை. தற்கொலை செய்துக்கலாம்ன்னு பலமுறை நினைச்சிருக்கேன். ஆனா, அது பெரிய பாவம்கறதாலேயும், பேயா– பிசாசா சுத்த வேண்டிவரும் ...ன்கறதாலேயும் அந்த முடிவை செயல்படுத்தல! உங்கள மாதிரி ...ன்னியாசியாகி ஏதாவது சேவை செய்ய விருப்பம். ஆனா, எப்படி ...ன்னியாசி ஆகறதுன்னுதான் தெரியலை" என்றான்.

அவனின் பேச்சு அவர்களை ஒருவருக்குள் ஒருவரை கூர்மையாகப் பார்த்துக்கொள்ள வைத்தது. இறுதியாக 'பில்' வந்தபோது, பிரசாத்தே அதற்குப் பணம் தந்தான்.

"உங்களைப் போன்ற சன்னியாசிகளுக்கு அன்னதானம் செய்த ...ரு திருப்தி எனக்குக் கிடைக்கட்டும்" என்றான். அந்த நொடியே அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர்.

"மிஸ்டர் பிரசாத்... நீங்க இனி எங்கள்ல ஒருத்தர். நாங்க ஒரு

ஆன்மீக யோகா மையத்தை பத்ரிநாத்ல வெச்சு நடத்தறோம். ரு வருஷத்துக்கு ஒரு முறை ஒண்ணா சுற்றுப்பயணம் கிளம்பிடுவோ அது அனேகமா ஏதாவது ஒரு புண்ணிய தலமாகவோ, இல் இயற்கை வளம் கொழிக்கற இடமாகவோதான் இருக்கும்.

இந்த முறை நாங்க தென்னாட்டுல சித்தர்கள் நடமாட்டமுள் இடங்களுக்குப் போய் அங்கே தியானம் பண்ணணும்னு முடி செய்தோம். அதுக்காகத்தான் வந்திருக்கோம். எங்களுக்கு தமி தெரியாது. இங்கே ஒரு வழிகாட்டியை ஏற்பாடு செய்து இருந்தோம். இப்ப நீங்க இருக்கறதால, எங்களுக்கு வழிகாட் தேவையில்லை. நீங்கதான் எங்களுக்கு இனி வழிகாட்டி... அப்படி எங்கக்கூட பத்ரிக்கு வந்துடுங்க. அங்க எங்களுக்கு நிறைய வேலை இருக்கு. அதைப் போகப் போக பார்த்துக்கலாம்..."– அவர்க சொன்னது பிரசாத்துக்கு மிக இதமாக இருந்தது.

"சரி, இப்ப நீங்க தமிழ்நாட்டுல சித்தர்கள் நடமாட்டமுள்ள எ இடத்துக்குப் போகணும்?"

"கொல்விமலையில நிறைய சித்தர் நடமாட்ட இருக்குதுதாமே...?"

– அவர்கள் கொல்லிமலை என்று சொல்லவும், பஞ்சாட்ச சார் சொன்னதுதான் ஞாபகத்தில் மின்னியது. சில விநாடி மவுனமாக நின்றான்.

"என்ன மிஸ்டர் பிரசாத்... உங்களுக்குக் கொல்லிமலை எ இருக்குன்னு தெரியாதா...? நீங்க போனதில்லையா?"

"ஆமாம் சாமிகளா..."

"அதனால என்ன, உங்களுக்கு பாஷை தெரியும். விசாரிச்சுக்கிட் போயிட்டா போச்சு."

"அதுவும் சரிதான். முதல்ல சேலம் போவோம். அப்புறமா அ இருந்து மலைக்கு வழி கேட்டுப் போகலாம்" என்றான்.

வெளியே காவிக்கொடி பறக்கும் அவர்களது காரின் உள் எல்லா வசதிகளும் இருந்தது. அவர்களிடமும் பளிச்சென்று தூய்மை தெரிந்தது.

ஒரு முறை சென்னை நகரை, புதியவன் போல பார்த்து முடித்த காரில் ஏறினான். அவர்களில் ஒருவர்தான் வேனை ஓட்டின அவர் தன் அருகில் பிரசாத்தை வந்து உட்காரச் சொன்னார்.



சொல்லத் தோதாக இருக்கும் என்றார்.

அந்த கார் சீறிக்கொண்டு கிளம்பியது.

## 6

பதினாறு பேறுகளில் ஏழாவது பேறு நுகர்ச்சி.

நுகர்ச்சி என்றால் வாசனையை உணர்தல் என்று உடனே பொருள் கொண்டுவிடக்கூடாது. இங்கே நுகர்ச்சி என்றால் குறிப்பதறிதல்... குறிப்பறிந்து நடக்க ஒருவருக்கு விவேகம் மிகவும் அவசியம்.

ஒருவரின் முகத்தை வைத்தே அவரிடம் இந்த விஷயம் பேசலாம், அதை இப்படிப் பேசலாம் என்று மனதுக்குள் முடிவு எடுக்கத் தெரிய வேண்டும். இடம், பொருள், ஏவல் என்று குறிப்பிடுவதும் இதைத்தான். சிலர் பேசத் தெரியாமல் பேசி, பேசக்கூடாத வேளையில் பேசி காரியத்தைக் கெடுத்துவிடுவார்கள். அடுத்து, எதையும் எப்படிச் சொல்ல வேண்டும் என்பது முக்கியம்.

எவ்வளவு கல்வி ஞானம் பெற்றிருந்தாலும் சரியான நேரத்தில், சரியான விதத்தில் பேசத் தெரியாவிட்டால் அவரது கல்வி ஞானமும் சேர்ந்து கெடும். இந்தக் குறிப்பறியும் சக்திதான் மனித உறவுகளுக்கே அடிநாதமாக உள்ளது.

நுகர்ச்சியில் தேறியவன் இங்கிதமும், விவேகமும் உடையவன். வாழ்வில் ஏழு படிகளைக் கடந்தவன்.

எட்டாவது...?

இரவு நேரம்!

மணி ஒன்பது இருக்கும். தொலைபேசி கூப்பிட்டது.

அறையில் இருக்கும் பிரசாத் எடுத்துப் பேசுவான் என்கிற னைப்பில், மெகா தொடர் ஒன்றிலேயே குறியாக இருந்தாள் தவிகா. தொடர்ந்து அது சப்திக்கவும் எரிச்சலாக இருந்தது. ன்னதான் செய்கிறான் இவன்?' என்கிற எரிச்சலுடன் எட்டிப் பார்த்தாள்.

அவன் இருந்தால்தானே?

மேசை மேல் உயில் மட்டும் கண்ணில்பட்டது. அதைப்

பார்த்தபடியே போய் 'ரிசீவரை' எடுத்தாள். மறுமுனையி…
சந்தானம்.

"நான் சந்தானம் பேசறேன்... பிரசாத் இல்லையா?"

"இல்லை."

"எங்கே போயிட்டான்?"

"எனக்கு என்ன தெரியும்?"

"அம்மாடி... இப்படி பதில் சொன்னா எப்படி? பிரசாத் ரொ… சந்தோஷமா ஆபீசை விட்டுக் கிளம்பிப் போனான். வீட்டு… வந்தானா... இல்லையா?"

"வந்தாரு. வந்தவர் நிறைய பொய் சொன்னாரு. எனக்கு… பொறுமை போயிடிச்சு. கத்தி விட்டுட்டேன். அப்புறமா நான் பே… கதவைச் சாத்திக்கிட்டேன். எங்கே போனாருன்னு தெரியாது."

"அவன் என்ன பொய் சொன்னான்னு சொல்ல முடியுமா?"

"எதுக்கு...? உங்க நண்பர் சொன்னது உண்மைன்னு வக்காலத்… வாங்கணுமா? இப்ப அவர் உங்கக்கூடத்தான் இருக்காரா?"

"என்கூட இருந்தா நான் எதுக்கு அவன் எங்கேன்னு உன்கிட்… கேக்கறேன்?"

"இப்படி கேக்கற மாதிரி கேட்டு, அவர் என்கிட்ட புளுகினை… உண்மைன்னு சொல்லத்தான்..."

"போதும்... நிறுத்தும்மா. அவன் புளுகினான், புளுகினான்… சொல்றியே... அவன் என்ன புளுகினான்னு சொல்லலையே..."

"அப்ப சத்தியமா அவர் இப்ப உங்கக்கூட இல்லைன்… நம்பலாமா?"

"என்னம்மா நீ... அவன் என்ன சொன்னான், அ… சொல்லு..."

"அவருக்குக் குழந்தை பிறக்குமாம். அதுக்கு முந்தி ஒரு குழந்தை… தந்து எடுத்து வளர்க்கணுமாம். அப்புறம் கொல்லிமலைக்… கரடிப்பள்ளங்கிற இடத்துக்குப் போகணும். அங்க நிறை… பரிகாரங்கள் செய்யணும்னு ஏதேதோ சொன்னாரு."

"அவன் சரியாத்தான் சொல்லி இருக்கான். பஞ்சாட்சரம் … இதைத்தான் சொன்னார்."

"அப்ப சித்தர் வந்தாருங்கறதெல்லாம் உண்மையா?"

"ஏம்மா... சித்தர்கள் வரமாட்டாங்கங்கறது உன் எண்ணமா…



"என்ன பேசறீங்க நீங்க? பத்து வருஷமா வராத சித்தர், இப்ப வந்தாரா? அதுவும் வேலை செய்யற ஒரு 'கார்ப்பரேட்' ஆபீசுக்கு..."

"எங்களுக்கும் அந்த சந்தேகங்கள்லாம் வந்ததும்மா. ஆனா, பஞ்சாட்சரம் சாரை நாங்க நம்பறோம்."

"நீங்க நம்புங்க. நான் நம்பத் தயாரில்லை. போதும் எனக்கு... ஒரு குழந்தை வேணுங்கறதுக்காக நான் போகாத கோவில் இல்லை, பார்க்காத டாக்டர் இல்லை, செய்யாத தர்மம் இல்லை. அங்கப் பிரதட்சணம் பண்ணி, மண்சோறு சாப்பிட்டு, அலகு குத்தி, விரதம் இருந்து... நான் செய்யாதது ஒண்ணும் இல்லை. அதுக்கெல்லாம் பலன், கடைசியா வந்த அந்த மருத்துவ பரிசோதனை அறிக்கைதான். அந்த அறிக்கை வராம இருந்திருந்தாக்கூட பரவாயில்லை. ஏதோ ஒரு நம்பிக்கையில காலத்தை ஓட்டி இருப்பேன். ஆனா, 'ரிப்போர்ட்' வந்து என் நம்பிக்கையில மண் அள்ளிப் போட்டுடிச்சு..."

"ஏன் இவ்வளவு விரக்தியா பேசறே? குழந்தை பிறக்காதுன்னே வெச்சுக்குவோம். ஒருவருக்கொருவர் ஆதரவா வாழக்கூடாதா? குழந்தை இல்லைங்கறதுக்காக இந்த நாட்டுல யாரும் உங்களை இந்த நாட்டுப் பிரஜை இல்லைன்னு சொல்லிட மாட்டாங்க!"

"சரி... இப்படியே நிறைய பேசிக்கிட்டே போகலாம். உங்களுக்கெல்லாம் குழந்தைங்க இருக்கறதால என் வலி என்னங்கறது புரியாது. அது என் இடத்துல இருந்து பார்த்தாத்தான் தெரியும்."

"இதோ பாரும்மா... உங்களுக்குக் குழந்தை இருக்கு. ஏன் இப்பவே அப்படியொரு முடிவுக்கு வர்றே...? எதை எதையோ செய்த நீ, கடைசியா எங்க 'ஜி.எம்.' சொன்னதைத்தான் செய்து பாரேன்."

"சரி, அவர் வரட்டும், யோசிக்கிறேன். இப்ப அவர் எங்கே போனாருன்னு தெரியல. எங்கேயாவது போய் கத்தி அடிச்சிட்டு வருவார். வரட்டும்... நானும் மனசு கொதிச்சுப் போய் ரொம்பவும் …பிட்டேன்..."

"இந்த மாதிரி நேரத்துல உன் மாதிரி பெண்கள் காட்டுற அன்பும், ஆதரவும்தான் ரொம்ப முக்கியம். தாய்மைங்கறது பிள்ளை பெத்துக்கறதுல மட்டுமில்ல, புருஷனை தாங்கிப் பிடிக்கிறதுலேயும் இருக்கு. அவன் என்ன, வேணும்னா இப்படியொரு குறைபாட்டை …த்துக்கிட்டான்?"

"புரியுது. நான் கொஞ்சம் விரக்தியில் கன்னா பின்னான்னு

நடந்துக்கிட்டேன். அவர் வரட்டும். நீங்க சொல்றதுக்கா உங்க 'ஜி.எம்.' சொன்னதுக்காகவும் அவர் செய்யச் சொ எல்லாத்தையும் செய்யறேன்..."

"ரொம்ப சந்தோஷம். நிச்சயம் நல்லது நடக்கும். அவன் உடனே எனக்கு கொஞ்சம் போன் பண்ணச் சொல்றியா?"

"சொல்றேன்..." என்ற பதிலோடு அந்த உயிலை எடுத்து அதை சுக்குநூறாகக் கிழித்துப் போட்டாள். அப்படியே பார்த்தவள், கல்யாண புகைப்படம் இல்லாததைக் வலியோடு முகம் சுளித்தாள். எங்கே என்று அதைத் தேடி இறுதியாக 'ஆல்பத்'துடன் அந்தப் படமும் எரிந்து சாம்ப இருப்பதைப் பார்த்தவளுக்கு அவன் எந்த எண்ணத்தில் நடந்துகொண்டான் என்பது தெரிந்துவிட்டது.

அப்படியே ஒரு ஓரமாகப் போய் அமர்ந்துகொண்டு, விசும்பி அழ ஆரம்பித்தாள்.

**வி**ழுப்புரத்தைக் கடந்து விரைந்துகொண்டிருந்தது கார். பிர தானே ஓட்டுவதாகக் கூறி காரை ஓட்டினான். நான்கு பே பின்னால் மவுனமாக யோகத்தில் இருந்தனர். அவர்களது அமை சிலை போன்ற தன்மை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வழியில் உளுந்தூர்பேட்டைக்கு முன்னால் செங்குறிச்சி என் கிராமத்தில் சாலையில் ஒரு பெரிய விபத்து! வேன் ஒன்றும், ஒன்றும் முட்டி மோதி கவிழ்ந்து கிடந்தன. உயிர் போன உடம் ஒருபுறம். விட்டால் போய்விடும் என்ற நிலையில் சிலர் ஆங் சிதறிக் கிடக்க, ஒரே கூட்டம். காரை நிதானப்படுத்திய அ எட்டிப் பார்த்துவிட்டு முகம் சுளித்தான்.

அதற்குள் சிலர் திபுதிபுவென்று ஓடி வந்து, "சார், ச உதவி செய்யுங்க. உங்க வண்டியில போட்டுக்கிட்டுப் போ உளுந்தூர்பேட்டை 'ஜி.எச்.'ல சேர்த்துடுங்க..." என்றனர். அத அந்த நான்கு யோகிகளும் தங்கள் யோக நிஷ்டை கலைந்து, அவர்க கூக்குரலை வைத்தே உதவி கேட்பதைப் புரிந்துகொண்டுவிட்ட பிரசாத் அவர்களிடம் சொன்னான்.

"சாமிகளா... இவங்க உதவி கேட்கறாங்க. சிலரின் உ துடிச்சுக்கிட்டு இருக்கு. ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போவோமா?"



"என்ன மிஸ்டர் பிரசாத் இது கேள்வி? கடவுள் நமக்கு இப்ப ஒரு பரீட்சை வெச்சிருக்கார். இதைப் பார்த்துட்டுப் பார்க்காம போறது பெரிய பாவம். இப்படியே கங்கைக்கே போய் குளிச்சாலும் பிரயோஜனம் கிடையாது. முதல்ல அவங்களுக்கு உதவி செய்வோம்..."

அவர்கள் தாண்டிவிட- பிரசாத் வேகமாக இறங்கி, துடித்துக்கொண்டிருந்த நான்கு பேரையும் தூக்கி காரில் போட்டான். அடுத்த நொடி அந்த கார் சிட்டாகப் பறக்க ஆரம்பித்தது. உறவினர்கள் சிலர் காரின் முன்பகுதியில் ஏறிக்கொண்டனர்.


ராணி முத்து

## சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை - 600 007.


உளுந்தூர்பேட்டை அரசு ஆஸ்பத்திரி!

**உ**டம்புகளை இறக்கி அவசர சிகிச்சைப் பிரிவில் சிரமப்பட்டுதான் உடம்புகளை இறக்கி அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்க முடிந்தது. ஏராளமாக ரத்தம் போய்விட்டிருந்ததால் ரத்தம் தேவைப்பட்டது. நான்கு யோகிகளும் ஓடிச் சென்று தங்கள் கைகளை நீட்டினர். பிரசாத்தும் ஐந்தாவதாக தன் கையை நீட்டினான். ஒரு ஆச்சரியம் போல அவன் ரத்தம் மட்டும்தான் தேவைப்பட்டது. அவர்கள் அவனைப் பார்த்து பொறாமைப்பட்டனர்.

"நீ அதிர்ஷ்டசாலி... ஒருத்தருக்கு ரத்தம் கொடுத்து உயிரைக் காப்பாத்தற வாய்ப்பை உனக்குக் கடவுள் கொடுத்திருக்கார்..." என்று அந்த உதவிக்கு ஒரு பெரிய கிரீடம் வைத்தனர். பிரசாத் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டான். அவர்கள் கொண்டு வந்து சேர்த்தவர்கள், சரியான நேரத்தில் கிடைத்த சிகிச்சையால் உயிர் பிழைத்துவிட்டனர். டாக்டர்கள் வந்து கை கொடுத்தனர்.

"இது ஒரு பெரிய உதவி... ரோட்டுல விபத்தைப் பார்த்ததும், 'எனக்கு என்ன?'ன்னு போகாம கோர்ட்டு, சட்டம்- இதனால வரப்போகிற சங்கடங்களுக்கும் பயப்படாம இங்க நீங்க செய்திருக்கிற

இந்த உதவிகள் ரொம்பப் பெருசு. பல பேருக்கு அவங்களோட வாழ்நாளைத் திரும்பக் கொடுத்திருக்கீங்க. ரொம்ப நன்றி" என்றார்கள்.

பிரசாத்துக்கு மனநிறைவாக இருந்தது. அந்த நான்கு யோகிகளையும் மதிப்புடன் பார்த்தான். அவர்கள் சம்மதித்ததால்தான் இந்த உதவியைச் செய்ய முடிந்தது. மறுத்திருந்தால் என்ன செய்திருக்க முடியும்?

டாக்டர்கள் பெயரைக் கேட்க, அவர்கள் சொன்னார்கள். பிரசாத்துக்கே அப்போதுதான் அந்த சன்னியாசிகளின் பெயரைக் கேட்காதது நினைவுக்கு வந்தது.

ஒருவர் பெயர் விட்டல், அடுத்தவர் ராமோஜி, மூன்றாமவர் அரிகிருஷ்ணா, நான்காமவர் பண்டரிநாத்.

நால்வரின் பெயர்களையும் மனதுக்குள் குறித்துக்கொண்டான் பிரசாத். சிறிது நேரத்தில் அங்கிருந்து மீண்டும் பயணம் தொடங்கியது. ஆனால், எப்படியோ தகவல் அறிந்து வந்துவிட்ட ஒரு பத்திரிகைகாரர் ஓடி வந்து கார் முன் நின்றார். வண்டியைத் தடுத்து நிறுத்தினார்.

"சார், சார்... ஒரு நிமிஷம்..."

"யார் சார் நீங்க?"

"நான் 'பத்திரிகையில இருந்து வரேன். விபத்தாகி கிடந்தவர்களை நீங்கதான் சரியான நேரத்துல கொண்டு வந்து சேர்த்துக் காப்பாத்தினீங்கன்னு டாக்டர்கள் சொன்னாங்க..."

"நானா?" பிரசாத் தன்னைச் சுட்டிக்காட்டிக் கேட்ட அடுத்த நொடி, "நீங்க டிரைவருங்கறது தெரியும். உள்ளே இருக்கற அந்த சாமியாருங்கன்னுதான் சொன்னாங்க. அவங்களை ஒரு படம் எடுத்துக்கறேன். நாளைக்கே பத்திரிகையில இது செய்தியா வரும்..."

"இல்ல, வேண்டாம்..."

"அப்படிச் சொல்லாதீங்க... இந்தச் செய்தியைப் படிச்சுட்டு நாலு பேர் தாங்களும் உதவி செய்யணும்னு நினைச்சா போதும், அதுதானே இப்ப சமூகத்துக்கு வேணும்?"

"சரி... இருங்க, அவங்ககிட்ட கேட்டுச் சொல்றேன்..."- பின்பக்கம் திரும்பி அவர்களிடம் பத்திரிகையாளரின் விருப்பத்தைக் கூறி முடித்தான். அவர்களும் முதலில் மறுத்துவிட்டு, பிறகு இதைப் படிப்பவர்களும்... தாமும் உதவி செய்ய வேண்டும் என்று



என்றுவார்கள் என்பதற்காகவே ஒப்புக்கொண்டனர்.

பிரசாத் காரை ஓரமாக நிறுத்தினான்.

அவர்களும் இறங்கினர். ஆனால், பிரசாத் இறங்கவில்லை. புகைப்படத்தில் தன் முகம் பதிந்து, நாளை பத்திரிகையிலும் வந்து அதை ஜேக்கப், சந்தானம் போன்றவர்கள் தெரிந்துகொண்டுவிட்டால் அது தன் நோக்கத்துக்கே பழுதாக முடியும் என்று கருதியவன், அந்த நான்கு பேர் கூப்பிட்டும் வர மறுத்துவிட்டான். இறுதியில் அவர்களை மட்டும் புகைப்படம் எடுத்துக்கொண்டு போனார் அந்த பத்திரிகையாளர்.

காரும் சேலம் சாலையில் சீற ஆரம்பித்தது.

## 7

படிகளில் எட்டாவது இளமை. பதினாறு பேறுகளில் இது முக்கியமானது. ஒரு மனிதன் மிகச் சிறந்த மேதையாக- வெற்றியாளனாக- உலகம் போற்றும் அறிஞனாகத் திகழ- அடிப்படைக் காரணமாக இருப்பது அவனது குழந்தைப் பிராய வளர்ப்பும், இளமையில் ஏற்படும் நட்பு மற்றும் கல்வி அம்சங்களும்தான்.

மனித வாழ்வின் மிகச் சிறந்த, வலுவான ஒரு காலகட்டம் இளமை. எப்போதும் இளமையாக இருக்க வேண்டும் என்று விரும்பாதவர்களே உலகில் இல்லை. இளமையில் மனம் மிகுந்த உற்சாகத்துடனும், உடம்பு வலிமை உடையதாகவும் இருக்கும். ஓடும் பாம்பைப் பிடிப்பது, முட்ட வரும் காளையை அடக்குவது, வானில் ஏறிப் பறக்க விரும்புவது, காதலிப்பது என்று இளமையில் ஏராளமான நடவடிக்கைகள் உள்ளன. ஆனால், பலர் இந்த இளமையில் கொடிய வறுமையின் காரணமாகத் துன்புறுகின்றனர். அதனால்தான் 'வறுமை கொடியது' என்றனர். இன்னும் பலர் இனிய இளமைப் பிராயத்தை எட்ட முடியாமல், குழந்தைப் பிராயத்திலேயே மரணம் அடைந்துவிடுகின்றனர்.

நல்ல ஆரோக்கியமான - அழகிய இளமை வாய்க்கப் பெறுவது பெரிய பாக்கியம்.

‘பிரசாத் வந்துவிட்டானா...?’ என்று பார்த்துக்கொண்டே தான் அலுவலகத்துக்குள் நுழைந்தார் பஞ்சாட்சரம். தன் இருக்கையில் அமர்ந்தும் அமராதவர், ‘இன்டர்காமில்’ அவனுக்குத் தொடர்புகொண்டார். ‘ரிங்’ போய்க்கொண்டே இருந்தது. அதுவே அவன் பணிக்கு வரவில்லை என்று சொல்லிவிட்டது.

அவர் முகத்தில் சின்னதாய் ஒரு வாட்டம்.

‘எக்ஸ்கியூஸ் மீ சார்...’ என்றபடியே உள்ளே நுழைந்தான் ஜெகன். கூடவே சந்தானம். இருவரது முகவாட்டமும் பஞ்சாட்சரத்தை இன்னும் நெருடியது.

“என்ன... பிரசாத் ராஜினாமா பண்ணிட்டுத் தலைமறைவாயிட்டாரா?”

“கிட்டத்தட்ட அப்படித்தான் சார்... நேத்து அவனுக்கும் மனைவிக்கும் பெரிய வாக்குவாதம். அவன் மனைவி ரொம்பவே காயப்படுத்திட்டா...” என்றான் சந்தானம்.

“அப்படியா...?”

“அந்தப் பொண்ணுக்கு ஆனாலும் கடும் விரக்தி. அது எல்லா விஷயத்துலேயும் நம்பிக்கை இழந்துடிச்சு... நீங்க சித்தர் சொன்னதா சொன்னதை கொஞ்சம்கூட நம்பலை. இந்த சாமியார், சித்தர்னு சொல்லிக்கிட்டு யார் வந்தாலும் துப்பாக்கியாலயே சுடலாம், தப்பு இல்லைன்னு சொல்ற அளவுக்கு அதுகிட்ட கோபம்...”

“அய்யய்யோ....”

“சார், உங்கள நான் ஒண்ணு கேட்கலாமா?”

“ம்...”

“தப்பா எடுத்துக்காம பதில் சொல்லணும்.”

“தெரிஞ்சா சொல்றேன்.”

“அந்த சித்தர் உங்ககிட்ட மட்டும்தான் பேசுவாரா? ஏன்னா, உங்களை வெச்சுதான் அவரை நானும் நம்ப வேண்டியது இருக்கு. அடுத்து, பிரசாத் ஜாதகத்தைப் பார்த்து அவனுக்கு குழந்தை இருக்குன்னு சொன்னார். அவன் இப்படி ஓடிப் போவான்னு ஏன் சொல்லலை? பொண்டாட்டியைவிட்டு ஓடிப் போயிட்ட ஒருத்தனுக்கு எப்படி சார் குழந்தை பிறக்க முடியும்?”- சந்தானம் எப்படியோ தன் சந்தேகம் முழுவதையும் கொட்டிக் கேள்விகளைக் கேட்டுவிட்டான்.



ஆனாலும், அது கொஞ்சம் அதிகப்படியாகவும்கூட அவனுக்குத் தோன்றியது. ஒருவித பயத்தோடுதான் பொது மேலாளரைப் பார்த்தான்.

“மிஸ்டர் சந்தானம்... உங்க கேள்வியில நிறையவே நியாயம் இருக்கு. என் அனுபவம் உங்களுக்கு இருந்தா, நீங்க இப்படி சிந்திப்பீங்களாங்கறது வேறு. ஒண்ணு மட்டும் என்னால சொல்ல முடியும், என் குருநாதர் சொன்னா சொன்னபடிதான் நடக்கும்.’ அது எப்படி நடக்க முடியும்? வாய்ப்பே இல்லையே?’ – அப்படீங்கிற கேள்விக்கெல்லாம் என்னிடம் பதில் இல்லை. மனுஷ வாழ்க்கையில எது, எப்ப நடக்கும்னு யாராலயும் சொல்ல முடியாது. அதுக்கு நான், உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்ல முடியும்.

ஒரு சந்தர்ப்பத்துல ராஜீவ்காந்திதான் அடுத்த பிரதமர்னு உலகம் முழுக்க ஒரு கருத்து இருந்தது. அவரும் பயங்கர செல்வாக்குல இருந்த நேரம் அது. எங்க பார்த்தாலும் அவரோட அலைதான். அந்த நேரத்துல நரசிம்மராவ்ங்கற நம்ம மாஜி பிரதமர், அரசியலைவிட்டே கிட்டத்தட்ட விலகிவிட்ட மாதிரிதான்னுகூட சொல்வேன். அவர் அப்ப ஒரு எம்.பி.யாகக் கூட பெருசா ஆசைப்படலை. ஆனா, நடந்ததோ வேற... ராஜீவ்காந்திய குண்டு வெடிப்புல பறிகொடுத்தோம். அனுதாப அலையில காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. கனவுல கூட பிரதமர் நாற்காலியை நினைச்சுப் பார்த்திராத நரசிம்மராவ், பிரதமர் ஆனார். அதுக்குப் பிறகு முழுசா அஞ்சு வருஷம் பிரதமராகவும் இருந்தார்.

அவர் பிரதமராகறதுக்கு முந்தி அவர்கிட்ட போய், ‘நீங்கதான் அடுத்த பிரதமர்’ன்னு யாராவது சொல்லி இருந்தா, சிரிக்காத அவர் சிரிச்சிருப்பார். ‘போய் வேலையைப் பாருப்பா’ன்னு சொல்லி இருப்பார். ஆனா, என்ன நடந்துதுன்னுதான் உங்களுக்கு தெரியுமே...”

“அப்ப அந்த மாதிரி ஏதாவது பிரசாத் வாழ்க்கையிலேயும் நடக்கும்னு சொல்றீங்களா?”

“அப்படி நடக்கும்னு நம்புவோமே! அதுல என்ன குறைஞ்சிடப் போகுது?”

“சரி சார், இப்ப அவன் எங்கே போனான்னே தெரியலை. ஆனா, அவன் மனைவி ரொம்ப வருத்தத்துல இருக்கா.”

"எல்லாம் சரியாயிடும், நம்புவோம்"- பஞ்சாட்சரம் துளிகூட நம்பிக்கை இழக்கவில்லை!

# 8

**ம**னிதனாய்ப் பிறந்து நல்ல தாய், தந்தையர்கள் இடையே நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுடன்- அறிவுடன்- அழகுடன்- கல்வியுடன்- நுகர்ச்சியுடன் திகழ்வதைவிடப் பெரிய விஷயம் மனதில் துணிவுடன் வாழ்வது! ஒருவனுக்கு எல்லாம் இருந்தும், துணிவு மட்டும் இல்லாமல் போகுமானால் அதனாலேயே அனைத்தும் அடிபட்டுப் போகும்.

இந்த உலகில் எது வேண்டுமானாலும் நடக்கலாம். அது எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கலாம். அப்படி ஒன்று நடக்கும்போது, துணிவு இருந்தால்தான் தாங்கிக்கொள்ள முடியும். அதே நேரம் சில முடிவுகளை சரியான நேரத்தில் எடுக்கத் துணிவு மிகவும் அவசியம்.

ஆணாயினும், பெண்ணாயினும் துணிவுதான் அவர்களுக்கான காவல்காரன். வாழ்க்கைப் போக்கில் தவறான நட்பு, ஒழுக்கக்கேடான செயல்கள், எதிரிகளால் துன்பம் போன்றவை உருவாகும்போது, துணிவு இருந்தால் மட்டுமே வென்று வெளியே வர முடியும். துணிய வேண்டிய நேரத்தில் தயக்கமோ, பயமோ குறுக்கிட்டால் வாழ்க்கையே மாறிவிடும்.

துணிவு, பதினெட்டு படிகளில் ஒன்பதாவது படியாகும்.

**ப**ச்சைப் பசேலென்ற கொல்லிமலையை அன்று பார்க்க முடியவில்லை. அந்த மலையின் மொத்த நீள- அகலத்துக்கு ஒரு வெண்பட்டுத் துணியை வாங்கி வந்து, அதனால் அந்த மலையையே மூடிவிட்டது போல பனிக் கூட்டம்.

அதற்கு நடுவே பிரம்மனின் படைப்புத் துப்பாக்கி என்னும் தோட்டாவில் இருந்து சீறிக்கொண்டு புறப்பட்டது போல் இரு கொக்குகள் சீரான இடைவெளியில் அந்த மலைவெளி மேல் பறந்தபடி இருந்தன. பனி மூட்டத்துக்குள் அன்னாசித் தோட்டம் ஒன்றின் சரிவில், ஒரு ஒற்றையடிப் பாதை மேல் அந்த நான்கு பேரும்



நடந்தபடி இருந்தனர். அவர்களுக்கு முன்னால் ஒரு வழிகாட்டி போல் பிரசாத்.

பிரசாத் கொல்லிமலை பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால், இப்போதுதான் பார்க்கிறான். முதல் பார்வையிலேயே அந்த மலைத் தலம் அவனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. குளிர், காது மடலை விரைக்க வைத்திருந்தது. 'உஸ்... உஸ்...' என்று கைகளைத் தேய்த்துக்கொண்டு, ஊதி விட்டுக்கொண்டே நடந்தான்.

இங்கு வரப்போவது தெரிந்திருந்தால், ஒரு 'ஜெர்கின் கோட்' கொண்டு இருப்பான். அவனும், தேவிகாவும் காஷ்மீர் போயிருந்தபோது வாங்கி இருந்த 'ஜெர்கின் கோட்' அலமாரியில்தான் இருக்கிறது. அவளே பார்த்து வாங்கினாள்... அதுவும் ஒரு படகு வீட்டுக் கடையில்! கொல்லிமலைக் குளிரின்போது, பிரசாத்துக்கு அதெல்லாம் ஏனோ ஞாபகம் வந்தது. குளிர் இப்படிக் குடும்ப நினைவை மூட்டும் என்று அவன் நினைத்திருக்க மாட்டான்.

வழியில் ஒரு மலையாளி தலை மேல் ஒரு பலாப்பழத்துடன் வந்தபடி இருந்தார். ஐந்து பேரையும் ஒத்தையடிப் பாதையில் பார்க்கவும் லேசான அதிர்வோடு நின்றார்.

"ஐயா..."

"சொல்லுங்க சாமி..."

"நாங்க பட்டணத்துல இருந்து வர்றோம்..."

"நல்லா வாங்க, அதுக்கென்ன இப்போ?"

"இல்ல... இங்க கம்பளிச்சட்டை சித்தர் சமாதின்னு ஒண்ணு இருக்காம்ல...?"

"ஆமா, அதுக்கு ரொம்ப தூரம் போகணும். கொஞ்சம் கஷ்டப்பட்டா போயிடலாம். ஆனா, திரும்பி வர்றதுக்குள்ள உசுரு போயிடுமே தம்பி..."

அவர் சொன்னதை பிரசாத் அப்படியே திரும்பி, அந்த நான்கு யோகிகளிடமும் கூறினான். அவர்களோ, "பரவாயில்லை. ஜீவசமாதி தரிசனம் எங்களுக்கு மிக முக்கியம்" என்றார்கள்.

பிறகு அவரிடமே வழி கேட்டுக்கொண்டு விறுவிறு என்று நடக்கத் தொடங்கினான். அவர்களும் அவனைத் தொடர்ந்தனர். அவர்கள் வந்த காரை கொல்லிமலை பேருந்து நிலையம் அருகே உள்ள பயணியர் விடுதி முன் நிறுத்திவிட்டுத்தான் ஐவரும் புறப்பட்டிருந்தனர். சித்தர் சமாதிக்கு காரில் போக முடியாது

என்பதால் நடைப்பயணம்.

அந்த ஒற்றையடிப் பாதையும் குண்டாங்குதுரையாக வளைந்து நெளிந்து போய்க்கொண்டே இருந்தது. திரும்பின பக்கமெல்லாம் முள் கொண்டையோடு அன்னாசிப்பழம். ஆங்காங்கே ஏலச் செடிகள் வேறு. செடிகளுக்குள் கையை விட்டுவிட்டு வெளியே எடுத்து, அந்த கையை முகர்ந்தபோது வாசனை உச்சந்தலை வரை 'கிர்'ரென்று பரவியது.

அதே நேரம், "யார் சாமி அது... ஏலச் செடிக்குள்ள கையை விட்டுக்கிட்டு... மண்ணுளிப் பாம்பு இருந்து தீண்டிடப் போவுது சாமி..." என்ற குரல் மட்டும் கேட்டது. குரலுக்குரியவனைப் பார்க்க முடியவில்லை.

துளிகூட சூரிய ஒளி இல்லை. எனவே குளிருக்கும், அதற்கும் கொஞ்சம் மந்தமாகக்கூடத் தோன்றியது. அவர்களோ அசராமல் நடந்தனர். யோகம் பயின்ற உடம்பு அந்தக் குளிரை சாதாரணமாகக் கருதியது. பிரசாத்தை நடுநடுவே பார்த்து இதமாகப் புன்னகைத்தனர்.

சில மணி நேர நடைக்குப் பிறகு, சித்தரின் ஜீவசமாதி இருக்குமிடம் கண்ணில்பட்டது. சின்னதாய் ஒரு சமாதி. அதற்கு மேலே சிறிய நாலுகால் மண்டபம். அவ்வளவுதான்! அங்கே நிர்வாணமாய் ஒற்றை நாடியில் ஒருவர் இருந்தார். உடம்பில் பொட்டுத் துணியில்லை. கையிலோ கனன்றபடி இருக்கும் சுருட்டு. ஐவரையும் ஆச்சரியமாகப் பார்த்தார்.

"ஐயா... நீங்க..."

"நான் இந்த சமாதிகிட்ட கிடக்கிற ஒரு அரைச் சித்தன். நீங்கள்லாம்...?"

"இவங்க பத்ரிநாத்ல இருந்து வர்றாங்க. அங்கே யோகம் சொல்லித் தர்றவங்களாம். நம்ம நாட்டுல இருக்கற எல்லா சித்தர்களோட ஜீவசமாதிகளையும் தரிசிக்கணும்கறது இவங்க ஆசை."

"ரொம்ப நல்ல ஆசைதான்..." என்றவர், அவர்களை அழைத்துப்போய் சமாதி முன் நிறுத்தி, கற்பூரத் தீபம் காட்டி முடித்தார். பின்பக்கத்தில் உள்ள ஒரு சிறிய குடிசையில் இருந்து பாய் ஒன்றை எடுத்து வந்து, சமாதி முன் விரித்து அவர்களை அமரச் சொன்னார். அவர்களும் அமர்ந்தனர்.

அவரைப் பார்த்னர். உதடுகளில் ஒரு மென் சிரிப்பு. பிரசாத் தனக்குச் சம்பந்தமே இல்லாத மாதிரி சற்று தூரம் தள்ளிப் போய்





நின்றான். அந்த நிர்வாண மனிதர், அவனை அழைத்தார். அவனும் அருகில் சென்றான்.

"ஏன் தூரப்போய் நிக்கறே? இங்கே நீயும் தியானம் பண்ணு..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாதே?"

"தியானம் பண்ணத் தெரியாத நீ எப்படி அதையே தொழிலா வெச்சுக்கிட்டிருக்கற இவங்களோட சேர்ந்தே?"

"எப்படியோ சேர்ந்தேன். அதுவா இப்ப விஷயம்...?" அவனிடம் விரக்திச் சிதறல்.

"என்ன அப்படி சொல்லிட்டே....! இங்க எல்லாரும் வர முடியாது. விதி இருக்கறவங்கதான் வர முடியும். வந்துட்டு எனக்கென்னன்னு நிக்காம, போய் நீயும் உக்காரு. உனக்கு என்ன வேணுமோ அதை இந்த சாமிகிட்ட கேளு..."

"என்னத்த கேட்க, நான் கேட்க ஒண்ணுமே இல்லை. மீறி வற்புறுத்தினா, சாவு வேணும்னு கேட்பேன். ஏன்னா, தற்கொலை செய்துக்க தைரியமில்லை. செத்த பிறகு பேயா சுத்தணுமாமில்ல..."

அவர் அதன் பிறகு அவனைத் தூண்டவில்லை. கூர்மையாகப் பார்த்தார். அவ்வளவுதான்! உடன் வந்த சன்னியாசிகளோ, கண்களை மூடித் தங்களை மறந்திருந்தனர். வெளியே இருட்டிக்கொண்டு வந்தது. மழைத் தூறலும் விழத் தொடங்கியது.

"போச்சுடா... வாயு மூலையில இருந்து மேகக் கூட்டம் வருது. மழை பிடிச்சா விடாதே..." என்று முணு முணுத்தார்.

"ஆமா, நீங்க இங்கே தனியாவா இருக்கீங்க...?"– அவரிடம்தான் பிரசாத் கேட்டான்.

"இல்லையே...!"

"..............."

"யார் சொன்னது? சமாதிக்குள்ள சாமி இருக்காருல்ல...?"

"ஓ... நீங்க இந்த சமாதியையும் கணக்குல எடுத்துக்கிட்டீங்களா?"

"நீ என்ன கேக்கறேன்னு தெரியுது. இவங்க தியானம் பண்ணும்போது, நாம இங்க தொணதொணன்னு பேச வேணாம். வா, குடிசைக்குள்ளார போவோம்..."– அவர் வெடுக்வெடுக்கென்று சடைமுடி முதுகுடன் மொத்த வேகமாக நடந்தார்.

குடிசைக்குள் ஒரே மூலிகை வாசம். தேன் குடுவைகள் தொங்கியபடி



இருந்தன. ஒரு மான் தோலும், புலித்தோலும் தெரிந்தன. அதில் ஒன்றை எடுத்துக் குளிருக்குப் போர்த்திக்கொள்வது போல சுற்றிக்கொண்டார். அவனோ சற்று நடுங்கவே ஆரம்பித்துவிட்டான்.

"அதோ, அந்தப் புலித்தோலை எடுத்துப் போர்த்திக்க."

"இருக்கட்டும்..."

"சும்மா போர்த்திக்க... இல்லாட்டி குளிர்ல ஆடிப் போயிடுவே..." என்றவர், குடிசை நடுவில் கிடந்த ஒரு தார்ப்பாயை அப்படியே தொட்டுத் தூக்க, அங்கே ஒரு தீக்குழி. உள்ளே வெதுவெதுப்பான– எரிந்த சாம்பல் தூள். மளமளவென்று அதில் சில சுள்ளிகளை அள்ளிப் போட்டவர், இரண்டு சிக்கிமுக்கிக் கல்லை எடுத்து– சுள்ளி நடுவில் தென்னை நார் ஒன்றுக்கு நடுவில் தீயைப் பிடித்தார். கையை ஒரு நடனப் பெண்மணி ஆட்டுகிற மாதிரிதான் இருந்தது. தீப்பிடித்து அந்த நார் எரியவும், சுள்ளிகளும் பற்றிக்கொண்டன.

குப்பென்று பரவிய தீயால், அறைக்குள்ளும் மஞ்சள் மினுமினுப்பாய் வெளிச்சம். பிரசாத், தீக்கு மேல் கையை நீட்டிச் சூடு பிடித்தான். சுகமாய் இருந்தது. அவரும் அப்படித்தான் செய்தார். அவன் பார்வை அவ்வப்போது அவர் மேல் சென்று கொஞ்சம்போல வெட்கப்படவும் செய்தது. அவரும் கவனித்தார்.

"என்னோட அம்மணம் உனக்குச் சிரிப்பா இருக்குதுல்ல...?"

"ஆமாம் சாமி. குறைஞ்சபட்சம் கோமணமாவது நீங்க கட்டிக்கலாம்..."

அவர் பதில் சொல்லாமல் சிரித்தார்.

"எப்படி சாமி இந்த மலையில, இந்தக் குளிர்ல தனியா இருக்கீங்க?"

"நீ என்ன சொல்றே? எப்பவும் நாலு பேரோடு பரபரன்னு இருக்கறதுதான் உன் வரையில வாழ்க்கையா?"

"எனக்கு சொல்லத் தெரியல. ஆனா, உங்களைப் பார்த்தா பாவமா இருக்கு."

"நீயே பெரிய பாவி... என்னை பாவிங்கறியா?"

அவர் அப்படிச் சட்டென்று திருப்புவார் என்று பிரசாத் எதிர்பார்க்கவில்லை. திக்குமுக்காடிவிட்டான். முகத்தில் திணறல் தெரிந்தது.

"ஆமா, சாகற அளவுக்கு உனக்கு என்ன கஷ்டம்?"

ஒரு சுள்ளியைத் தூக்கிப் போட்டபடியே கேட்டார். அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

“கேக்கறேன்ல...”

“தெரிஞ்சு என்ன சாமி பண்ணப் போறீங்க? என் கஷ்டம் என்னோட போகட்டும், விடுங்க...”

“அட நீ வேற. நீ சொல்லாமலே தெரிஞ்சுக்க என்னால முடியும். கம்பளிச்சட்டை சித்தர் எனக்கு நிறைய விஷயங்களை சொல்லிக் கொடுத்துருக்காரு. ஆனா, நான் அதையெல்லாம் உபயோகப்படுத்தறதில்லை.”

“அது போகட்டும்... இங்க கரடிப்பள்ளம்னு ஏதாவது இடம் இருக்குதா?”

–அவர் உடனே அவனை ஏறிட்டார். அதே வேளை, வெளியே சரியான மழை. சரம் சரமாய் நீர்க்கோடுகள் வானுக்கும்... பூமிக்குமாய்!

“நல்ல மழை பிடிச்சுகிச்சு. ஆமா, இதுக்கு முந்தி இங்கே வந்திருக்கியா?”

“இல்ல, இதுதான் முதல் தடவை.”

“அப்ப எப்படி கரடிப்பள்ளம் பத்தி உனக்குத் தெரியும்?”

“உங்களைப் போல ஒரு சித்தர்தான் சொன்னாரு. அதான் கேட்டேன்.”

“அதுவும் இது மாதிரி ஒரு இடம்தான். என்ன ஒரு கூடுதல் விசேஷம்னா... பவுர்ணமிக்கு பவுர்ணமி 18 சித்தருங்க வந்து அங்கே படிப்பாறை மேல ஏறிப் போய் அங்கு இருக்கற குகையில தியானம் பண்ணுவாங்களாம்...”

“அப்படியா?”

“என்ன சாதாரணமா கேட்டுட்டே...! கரடிப்பள்ளம் ஒண்ணும் சாதாரண இடம் இல்லை. அது பத்தி ரொம்பப் பேருக்குத் தெரியவே தெரியாது. ஆமா, உனக்கு அந்த இடம் பத்தி சொன்ன சித்தர் பேரு...”

“அவர் பேரு... அவர் பேரு... ஆங்... கல்யாண சித்தர். ஆனா, அவர் என்கிட்ட நேரா சொல்லலை. என்... என்... சரி, விடுங்க. அப்புறம் நான் தொட்டுத் தொட்டு எல்லாம் சொல்ல வேண்டியது இருக்கும்.”

“அடப்பாவி மனுஷா... நீ இப்ப வந்துருக்கற சித்தர் சமாதி



யாருதுன்னு நினைச்சே...?”

“அதான் சொன்னீங்களே, கம்பளிச்சட்டை சித்தர்னு...”

“அது ஊர் வெச்ச பேர். ஆனா, அவர் பேர்தான் கல்யாண சித்தர். கல்யாணசுந்தரம் சாமியோட முழுப் பேரு.”

பிரசாத் ஒரு விநாடி அதிர்ந்தான்.

“என்ன பாக்கறே... எந்த சாமி சொல்லிச்சோ, அந்த சாமி சமாதிக்கே வந்திருக்கியே... நீ பெரிய ஆள்தான்.”

“இல்ல... சமாதியானவர் எப்படி வர முடியும்?”

“வர முடிஞ்சாதான் அவர் சித்தர். இல்லாட்டி உப்பும், காரமும் தின்னு ஒண்ணுமில்லாம போன மனுஷன்னுல்ல அர்த்தம்...”– அவர் சொன்னது பிரசாத்தின் இதயத்தை ஊடுருவியது. கண்களில்கூட ஒரு குட்டி பயம்.

“சாமி சொன்னதோடு வழியும் காட்ட ஆரம்பிச்சிடுச்சு போல இருக்கு. அதான் இந்த நாலு பேரோட சேர்ந்து இங்கே வந்துருக்கே... இங்கிருந்து போறதுக்குள்ள உன் பிரச்சினை தீர்ந்துடும் பாரு. செத்தா போதும்னு சொன்ன நீ, வாழ்ந்தே தீரணும்னு சொல்வே...”– அவர் பேசப் பேச பிரசாத் அப்படியே உணர்ச்சி மயமானான்.

‘இவர் கூறியது எல்லாம் திட்டமிடலா... இல்லை தற்செயலா?’– திகைத்தான்.

மழை வெளுத்து வாங்கியபடி இருந்தது. அந்த நால்வரோ, சாரல் மேலே பட்டும் தியானத்தில் இருந்து விலகவில்லை!

“சாமி... எனக்குக் குழப்பமா இருக்கு. என்கிட்ட இந்த சித்தர் பத்தி சொன்னவர், எனக்கு அப்பா மாதிரியான ஒருத்தர். பாவம்–புண்ணியம் என்ன பண்ணுறோமோ அதுதான் திரும்பி வரும். அப்படி, இப்படின்னு ஏதேதோ சொல்லிவிட்டு, கொல்லிமலை கரடிப் பள்ளத்துக்குப் போ... மத்ததெல்லாம் தானா நடக்கும்னாரு. ஆனா, நான் அதைப் பெருசா எடுத்துக்கலை. என் பெண்டாட்டி என்னை எடுத்துக்கவிடலை. இருந்தும் நான் இங்கே வந்துருக்கேன்னா, அது நிஜமா ஒரு ஆச்சரியம்தான் சாமி...”

“இது முதலாவது ஆச்சரியமா வேணா இருக்கலாம். ஆனா, சாமி சொன்ன மாதிரி எதைக் கொடுக்கறோமோ, அதுதான் திரும்ப வரும். அப்படி அதெல்லாம் வரும்போது, இன்னும் எவ்வளவோ ஆச்சரியங்கள் இருக்குது. அதை எல்லாம் நீ பார்ப்பே...”

"என்னவோ சொல்றீங்க... நடக்கறதை என்னால நம்பவும் முடியல, நம்பாம இருக்கவும் முடியல. நான் இப்படி இந்த நாலு பேர் கூட பத்ரிநாத் போயி சாமியார் ஆயிடற முடிவுல இருக்கேன் சாமி. இந்த சாமி ஆசீர்வாதம் பலிக்க வாய்ப்பு இருக்கற மாதிரி தெரியல..." என்றவனை எதனாலோ இளக்காரமாய்ப் பார்த்துச் சிரித்தார் அவர்.

அதே நேரம் வெளியே ஒரு பெரிய இடி சப்தம். அந்த நான்கு பேரும்கூட அதனால் கலைந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். அப்போது முற்றிலும் எதிர்பாராதபடி ஒரு வேங்கைப் புலி, ஈர உடம்புடன் இடிக்கு பயந்து அந்த சமாதிக்குள் ஒரே பாயாகப் பாய்ந்தது! அவர்களிடம் அதனால் சிதறல்!!

ஆளுக்கொரு பக்கமாய் அவர்கள் அலறிக்கொண்டு ஓடத் தொடங்கினர். அந்த நிர்வாண சித்தர், வேகமாக குடிசைக் கதவை மூடினார். மூடியபடியே, "அடிக்கடி வேங்கையன் வந்துடுவான். அவனுக்கு இடி சப்தமே பிடிக்காது..." என்று கண்களைச் சிமிட்டினார்.

"ஐயோ சாமி... அவங்களுக்கு ஏதாவது ஆயிடப் போகுது. வாங்க, காப்பாத்துவோம்."

"பதற்றப்படாதே! சாமியை வணங்கிட்டவங்களுக்கு எதுவும் ஆகாது. கொஞ்சம் பொறு. அந்த வேங்கை போயிடும். அப்புறமா நாம வெளிய போய் அவங்களைத் தேடலாம். ஆனா, அது அவ்வளவு சுலபமில்லை. ஏன்னா, மழையும் பெருசா பெய்யுது..." என்றபடியே குளிர் காய்ந்த அந்த சித்தரைப் பீதியுடன் பார்த்தான்.

ஏதோ ஒரு அன்றாட சம்பவத்தைச் சொல்வது போல அவர் பேசுவது, அவனுக்கு எரிச்சலாகக்கூட இருந்தது. மெல்ல கதவு இடுக்கு வழியாகப் பார்த்தான். அந்தப் புலி, சமாதி மேலேயே படுத்து நாக்கை தொங்கப் போட்டபடி இளைப்பாறிக் கொண்டிருந்தது.

'அடக் கடவுளே!'

## 9

**ஆ**ரோக்கியமான பிறப்பெடுத்து அப்படியே துணிவு வரை ஒன்பது படிகளைக் கடந்துவிட்ட ஒருவனுக்கு, அவசியமான



இன்னொரு தேவை பெருமை! இந்தப் பெருமை என்பது சாதாரண விஷயம் அன்று. அதை எந்தக் கடையிலும் விலைக்கு வாங்க முடியாது. அரிய செயல்பாடுகளால் ஒருவர் சம்பாதித்துக்கொள்வதாகும். ஒருவர் சம்பாதித்துக்கொள்ளும் பெருமை, அவரைச் சார்ந்த அத்தனை பேருக்கும் ஊட்டச்சத்து போலப் பரவும். 'என் அண்ணன், மாநிலத்தில் முதலாவதாக வந்தவன்'. 'என் சகோதரி, நாட்டியத்தில் முதல் ரக பெண்மணி', 'என் தந்தைதான் இந்த மாவட்ட கலெக்டர்' என்று நம்மைச் சார்ந்தவர்களின் சாதனைகளும், உயர்வும்தான் நமக்குப் பெருமையாக வந்து சேருகின்றன.

இதில் இருந்து ஒரு விஷயம் புலனாகிறது. எல்லாப் பேறுகளையும் நாம் மட்டும் பெற்றிருந்தால் போதாது. நம்மோடு இருப்பவர்களும் அத்தகைய பேறுகளுக்கு ஆட்பட்டிருக்க வேண்டும்.

பெருமை... ஒரு மனிதன் இளம் பிராயத்தில் கடக்கும் பத்தாவது படியாகும்.

**ம**ழை விட்டுவிட்ட நிலையில் வானமும் லேசாக வெறிக்க, குடிசைக் கதவைத் திறந்தான் பிரசாத். அந்த நிர்வாண சித்தரோ எவ்வித பயமுமின்றி சமாதி நோக்கிச் சென்றார். அப்படிப் போகும்போது, ஞாபகமாக தீப்பற்றி எரியும் ஒரு விறகைப் பற்றியபடி போனார். அவர் வருவதைப் பார்க்கவும், அந்த வேங்கைப் புலி பயத்துடன் எழுந்து ஓடியது. பிரசாத் அதை ஒரு அரிய காட்சியாகப் பார்த்தான். அவர் பின்னாலேயே வந்தவன், "சாமி... அவங்க எங்க போனாங்கன்னு தெரியலியே..." என்று நாலாபுறமும் பார்த்தான்.

"பயப்படாதே... தைரியமா இரு. நம்ம சாமி இருக்கற இடத்துல காரணம் இல்லாம எதுவுமே நடக்காது..." என்றவர், விறுவிறுவென்று ஒரு மரத்தின் மேல் ஏறினார். குரங்கு போல அப்படியொரு வேகம். மரக் கிளைகளின் உச்சிக்கே சென்றார். அங்கே ஒயிலாக நின்றுகொண்டு அப்படியே வட்டம் கட்டி ஒரு பார்வை பார்த்தார். நல்லவேளை... அவரது பார்வையில் அவர்களில் சிலர் பட்டனர். உடனே கத்தினார்.

"அஹேய்... அங்க என்ன பண்ணுறீங்க...? வாங்க..." என்று கை காட்டிஅழைத்தார். அவர்களும் மரத்தின் மேல் தெரிந்த அவரைப் பார்த்துவிட்டு, மலைச் சரிவில் இருந்து அந்த மரத்தைக் குறிவைத்து வந்தனர்.

ஆனால், அவர்கள் மூன்று பேர்தான். பண்டரிநாதன்

என்பவரைக் காணவில்லை!

பிரசாத்பதறிப்போன அந்தமூன்றுபேரைச்சமாதானப்படுத்திவிட்டு, பண்டரிநாதனைத் தேடிக்கொண்டு வெளியே ஓடினான்.

புலியைப்பார்த்தபிறகும்,அவனைப்பயம்தொற்றிக்கொள்ளவில்லை. ஆனால், அவர்களோ வெளிறிப் போய்விட்டனர். அந்த நிர்வாண சாமியோ வெகுசாதாரணமாக இருந்தார். குட்டி போட்ட பூனை போல அங்கும் இங்குமாய் நடந்தார். அவர்கள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் பேசிய எதுவும் அவருக்குப் புரியவில்லை. புரிந்துகொள்ள விரும்பவும் இல்லை.

பிரசாத், “மிஸ்டர் பண்டரிநாத்...” என்று அவர் பெயரைச் சொல்லிக் குரல் கொடுத்துக்கொண்டே போனான். நல்லவேளை... ஒரு மழைக்குட்டை போன்ற நீர்த்தேக்கத்தில் பண்டரிநாதன் கால் ஒடிந்தவராய் விழுந்து கிடந்தார். பிரசாத் வரவும், “நான் இங்கே இருக்கிறேன்” என்று குரல் கொடுத்தார். பிரசாத்தும் ஓடிப் போய் அவரைத் தூக்கினான். அவரால் நிற்க முடியவில்லை. முகம் சுணங்கியது.

“இடது கால் எலும்பு முறிஞ்சி போச்சு...” என்றார்.

“கவலைப்படாதீங்க, நான் உங்களை தூக்கிட்டு போறேன்” என்று அவரை அப்படியே தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டான். வந்த வழியே திரும்பி நடந்தான். அங்கங்கே வழுக்கி விழப் பார்த்துச் சுதாரித்தான். ஈசல் பூச்சி மாதிரி கொசுக்கள் பறந்தபடி இருந்தன. அவன் மீதும், பண்டரிநாதன் மேலும் அவை விருந்து வைக்கப் பார்த்தன. ஒரு இடத்தில் துர்நாற்றம் வீசியபடி இருந்தது. கூர்ந்து பார்த்தபோது பல நாட்களுக்கு முன்பே யானை ஒன்று செத்து விழுந்திருக்க, அந்த நாற்றம்தான்! சகித்தபடி பார்த்துப் பார்த்து நடந்தான். ஆனால், தோள் பாரம் காரணமாக மூச்சிரைத்தது.

பொதுவாக மலைத் தலங்களில் பிராணவாயு குறைவாகவே இருக்கும். கவனமாகவே மேலே ஏற வேண்டும். வேகம் கூடாது. பண்டரியும் உணர்ந்தவர் போல, “மெதுவாகப் போங்கள், மெதுவாகப் போங்கள்” என்றார்.

எப்படியோ, சித்தர் சமாதிக்கு வந்து சேர்ந்தான். பண்டரியையும் அப்படியே பாய் மேல் கிடத்தினான். நிர்வாண சித்தர் ஒரு உடைந்த குச்சியுடன் வந்து பார்த்தவர், “என்ன... கால் ஒடிஞ்சு போச்சா...?” என்று கேட்டார்.



“ஆமாம் சாமி.”

“சகஜம்தான். இங்க வர்ற ரொம்ப பேருக்கு இப்படி ஆகி இருக்கு...”

“இப்ப என்ன சாமி பண்ணுறது?”

“கவலைப்படாதே. இன்னிக்கு இங்கயே தங்குங்க. நான் விடிகாலையில மூணு மணிக்கு எழுப்பிவிடுறேன். இவரைத் தூக்கிட்டு அருவிக் கரைக்குப் போவோம். அப்பதான் நிறைய சித்தர் சாமிங்க அருவிக்கு குளிக்க வருவாங்க. அவங்களை அப்ப பாக்கறதே விசேஷம். காரணம் இல்லாத யார் வந்தாலும் கோபப்படுவாங்க. காரணத்தோடு வந்தவங்களை ஒண்ணும் சொல்லமாட்டாங்க. அங்கே ஒரு சாமியார் இருக்காரு. எலும்பு முறிவுக்கு என்ன செய்யணும்னு அவருக்கு நல்லாத் தெரியும். அவர்கிட்ட இந்த சாமியக் காட்டுவோம். மிச்சத்த அவரே பாத்துக்குவார்...”– இவர் சொல்லிவிட்டார்.

ஆனால், பிரசாத்துக்குத் தலையைச் சுற்றியது. மற்ற மூன்று பேர்களிடமும், அவர் சொன்னதைச் சொன்னான். அவர்களும் தீவிரமாக யோசித்தனர்.

“என்ன யோசிக்கிறீங்க...! இங்க வரணும், இப்படி ஆகணுங்கறது விதி. ஒரு வகையில இது நல்லதுக்குத்தான். இல்லாட்டி சித்தர் சாமிங்களை தரிசனம் பண்ணத் தோணுமா, இல்ல நான்தான் சொல்வேனா?”

“சரி சாமி! ஆனா, இங்கே ஒரு ராத்திரியை எப்படி கழிக்கிறது? ஆகாரத்துக்கு எங்க போக? இப்பவே சரியான பசி...”

“கவலைப்படாதீங்க. உள்ளே தேன் இருக்குது. எடுத்துக் குடியுங்க. மரவள்ளிக் கிழங்குங்க இங்கு கிடைக்கும். நான் போய்ப் பிடுங்கிட்டு வரேன். அதை வேக வெச்சு சாப்பிட்டா நாலு நாளைக்குப் பசிக்காது”– என்றவர், அப்போதே கிழங்கு பிடுங்கக் கிளம்பிவிட்டார்.

அந்த நான்கு யோகிகளும், ‘இப்படி ஆகிவிட்டதே?’ என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். பிரசாத் ஆறுதல் கூறினான். சித்தர்கள் தரிசனம் கிடைப்பது பற்றியும் சொன்னான்.

அதை ஒரு சாதாரணத் தகவல் போல கூறினான்.

அருவியில் குளிக்க அசாத்தியமான உடம்பு வேண்டும். அது சித்த புருஷர்களுக்கு

அதிகாலை மூன்று மணிக்கு மலை உச்சியில் உள்ள

மட்டுமே சாத்தியமான விஷயம். அதிகாலை மூன்று மணி என்பது பிரம்ம முகூர்த்த காலத்தின் ஆரம்ப நேரம். அப்போது உச்சந்தலையாகிய சகஸ்ராரத்தில் திபுதிபுவென்று தண்ணீர்படக் குளிப்பது என்பது உடம்பையே 'ஓவர்ஆயில்' செய்கிற மாதிரி ஒரு விஷயம்.

நாடி நரம்புகள் எல்லாம் ஒரு புத்துணர்ச்சியோடு துடிக்கக் குளித்து முடித்துவிட்டு, கொல்லிமலை குகைகளில் ஆங்காங்கே சித்தர்கள் ஸ்தாபித்திருக்கும் பாண லிங்கங்களைத் தேடிச் சென்று அப்படியே அதன் முன்னால் தியானத்தில் அமர்வது என்பது சொர்க்க நிலைக்கு ஒப்பானதாகும்.

இதை அறிந்த பண்டாரிநாதன், தன் கால் ஒடிந்ததும் ஒரு வகையில் நல்லதுக்குத்தான் என்றார். தன்னைச் சிரமப்பட்டு தூக்கி வந்த பிரசாத்துக்குத் திரும்பத் திரும்ப நன்றி கூறினார். அவனோ திரும்பத் திரும்ப மறுத்தான். அதென்னவோ தெரியவில்லை. ஆபீசில் 'குளு குளு' அறைக்குள் காலாட்டிக்கொண்டு இருக்கும்போது இருந்ததைவிட, இங்கே அத்துவான மலைச் சூழலில் நிம்மதியாக இருக்கிற மாதிரிதான் உணர்ந்தான்.

அதற்குள் வெளியே போன அந்த நிர்வாணச் சித்தரும் கை நிறைய கிழங்குகளோடும், சில அன்னாசிப் பழங்களோடும் வந்து சேர்ந்தார். அதைப் பார்க்கவும் அவர்களுக்கு அப்போதே வயிற்றில் அமிலம் சுரக்கத் தொடங்கிவிட்டது.

ஒரு ஓரத்தில் மண் சட்டி ஒன்று கிடந்தது. அதை எடுத்தவர், விறுவிறுவென்று வெளியே சென்று எங்கிருந்தோ தண்ணீர் பிடித்து வந்தார். குடிசையில் ஒரு ஓரத்தில் கற்களால் ஆன ஒரு விறகு அடுப்பு. அதன் மேல் சட்டியைத் தண்ணீரோடு வைத்தவர், கீழே தீ மூட்டிவிட்டு– கிழங்குகளைத் தூக்கி அதில் போட்டார். சில கிழங்குகளை, எரியும் நெருப்பில் வைத்தார். நடுநடுவே திரும்பிப் பார்த்துச் சிரித்தார். துளிகூட கவலை, சலிப்பு என்பதே இல்லாத வேகம் அவரிடம்!

பிரசாத் வியந்துகொண்டே போனான். அவர்களும், "பாவம், இவருக்குத்தான் நம்மால் எவ்வளவு சிரமம்?" என்றனர். பிரசாத் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மாலைப்பொழுது... மணி ஐந்து. ஆனால், வெளியில் அப்போது இருட்டு கோட்டை கட்டிவிட்டது. நிர்வாண சித்தர் ஒரு தீப்பந்தத்தை எடுத்துப் பற்ற வைத்தார்.



அதன் வெளிச்சத்தில் இருக்கும் இடத்தில், சில கிழிந்த பாய்களை விரித்துப் போட்டார். பின்னப், கரடித்தோல்– புலித்தோல் என்று இருப்பதை எல்லாம் எடுத்துப் போட்டுக் குளிருக்குப் போர்த்திக்கொள்ளச் சொன்னார். பின் குடுவையை எடுத்து, அதை மூடி இருந்த கொட்டாங்கச்சியில் தேனை விட்டு அவ்வளவு பேருக்கும் குடிக்கக் கொடுத்தார்.

"நல்ல சுத்தமான மலைத்தேன்! புளிப்பு வாடை எப்படி இருக்கு பாரு... குடி! உடம்பு கணகணன்னு சூடாயிரும். குளிருக்கும் திம்முன்னு இருக்கும். ரத்தம் சுத்தப்படும்..."– என்றார்.

அவனும் சரி, அவர்களும் சரி... ஆசையாகக் குடித்தனர். அமிர்தமாக இருந்தது. அவர் சொன்னதுபோலவே சிறிது நேரத்திலேயே உடம்புக்குள் இதமான ஒரு சூடு பரவியது. அதற்குள் கிழங்கு அவிந்திருந்தது. அதை அப்படியே கையால் எடுத்து பிளந்தபடியே, ஆவி பறக்க நீட்டினார். ஒருவித வாசமும் மூக்கை நெருடியது. ஐந்து பேரும் அப்படியே அள்ளி விழுங்கினர். ஆனால், அவர் கொஞ்சம்போல் தேன் குடித்ததோடு சரி, கிழங்கைச் சாப்பிடவில்லை.

"ஏன் சாமி... நீங்க சாப்பிடலையா?"

"நான் சாப்பிடமாட்டேன்."

"ஏன்... பசிக்கலையா உங்களுக்கு?"

"பசிச்சா இருக்குதே பச்சத்தண்ணி. ரொம்பப் பசிச்சா சில வாழைப்பழம் சாப்பிட்டா முடிஞ்சது..."

"ஏன், கிழங்கு பிடிக்காதா?"

"எந்தச் சித்தனும் கிழங்கு வகையை ரொம்பச் சேர்க்க மாட்டாங்க."

"ஏன்... வாய்வுங்கறதாலயா?"

"வாய்வாவது, கீய்வாவது... சுக்கை மென்று விழுங்கினா, அதெல்லாம் பறந்துடாது...? ஆனா, கிழங்குங்கறது கிட்டத்தட்ட இறைச்சி மாதிரி."

"மாமிசம்னா இதை சொல்றீங்க?"

"இதுவும் ஒரு வயிகல மாமிசம்தான். வெளிப்படையா பூத்து காயாகி, கனியாகிற காய்கனிகளுக்குப் பஞ்சபூதமே கருவறை. ஆனா, கிளங்குக்கு மண்தான் கருவறை.

வயித்துக்குள்ள குழந்தை வளர்ற மாதிரிதான் கிழங்கும் உருவாகுது. கர்ப்பம் தரிச்சு வளர்ற எல்லாமே மேலான உயிர். ஆனா, மரத்துல காய்க்கிற காய்– கனியெல்லாம் அரை உயிர். அதை நாம சாப்பிட்டாதான் அதுக்கு முழுமை. அதனால நமக்கு நன்மை. ஆனா, இந்தக் கிழங்கு... உடம்புல சேட்டையெல்லாம் செய்யும். புத்திய மாத்தும். நாக்கை ருசிக்கு அடிமையாக்கும். சித்தன்கறவன் காத்து மாதிரி! விடுதலையை விரும்பறவன். அவன் எப்படி இதுக்கு அடிமையாவான்?"– நிர்வாண சித்தரின் கேள்வியும், விளக்கமும் பிரசாத் வரையில் புதிது. ஆடிப் போய்விட்டான்.

"அப்ப நான் சாப்பிட்டு இருக்கேனே... நான் அடிமையா?"

"சந்தேகமென்ன...? எங்கே போனாலும் சாப்பிட என்ன கிடைக்கும், தங்க இடம் கிடைக்குமான்னு உடம்பை மையமா வெச்சு சிந்திக்கற நீ அடிமை இல்லாம வேற யார்?"

"சாமி..."

"என்ன சாமி... என் வரையில உடம்புகூட பாரம். அதான் நிர்வாணமா சுத்தறேன். ஏகாந்தமா இருக்கேன். கூடிய சீக்கிரம் சாமி மாதிரி நானும் சமாதி ஆயிடுவேன். அப்புறம் எப்பவும் நித்திய இன்பம்தான்."

–அவர் சொன்னதை எல்லாம் அப்படியே மொழிபெயர்த்து அந்த நான்கு யோகிகளிடமும் கூறினான். அவர்கள் பரவசமாக அவரைப் பார்த்துக் கையெடுத்து கும்பிட்டனர்.

"நாங்க அதிர்ஷ்டம் செய்திருக்கோம். அதனாலதான் இப்படியாகி எங்களுக்குப் பல அரிய செய்திகளும் தெரியவருது" என்றனர்.

அதன்பின் அவர் வெளியே போய், சமாதி அருகில் படுத்துக்கொண்டார். புலித்தோலை மேலே போர்த்தினார். பார்க்க புலி ஒன்று சமாதி மேல் படுத்திருக்கிற மாதிரி தெரிந்தது.

யோகிகளும் நடந்த களைப்பு, சாப்பிட்ட மலைப்பு என்று அப்படியே கண் அயர்ந்துவிட்டனர். ஆனால், பிரசாத்தால் மட்டும் முடியவில்லை.

இந்த உலகில்தான் எவ்வளவு அரிய விஷயங்கள்!

விரக்தியோடு மையக் கனப்பில் கையை நீட்டி உஷ்ணப்படுத்திக்கொண்டான். அந்தத் தனிமையில் மெல்லிய இருளில் தேவிகா பற்றிய ஞாபகத்தைத் தவிர்க்க முடியவில்லை.



'அவள் என்ன செய்து கொண்டிருப்பாள்? என்னைத் தேடுவாளா? இல்லை, 'விட்டது சனியன்' என்று நிம்மதி கொண்டிருப்பாளா?'

## 10

நோய் இன்மைதான் ஒருவன் கடக்கும் பதினோராவது படி. இது, உண்ணும் உணவு– சுகாதாரமான வாழ்க்கை முறையால் மட்டும் வருவதல்ல... அன்னை வயிற்றில் பிண்டக் கருவாய் உருத்திரளும்போதே சேர்ந்து வருவது. அழகிய கூந்தல், அளவாக அவயவங்கள், சரியான உயரம், நல்ல நிறம், ஞாபகசக்தி, கண்பார்வை, ஜீரண சக்தி, மலச்சிக்கல் இன்மை, சீரான சுவாசம், சரியான வியர்வைப் பெருக்கு... இவை எல்லாம்தான் நோய் இன்மையின் எதிரொலிகள்.

ஒருவன் தான் நோய் இன்மையோடு திகழ, அவன் தாயும் ஆரோக்கியமானவளாகத் திகழ வேண்டியது மிகமிக முக்கியம். ஆரோக்கியமாகப் பிறந்தால் மட்டும் போதாது. அதைப் பாதுகாத்தபடியே வளருவதும் மிகமுக்கியம். ஒருவரது ஆரோக்கியமான அடித்தளத்துக்கு கர்மவினைகளும் ஒரு காரணம்.

பல பாவங்கள், நோயாக மாறித்தான் கணக்குத் தீர்த்துக்கொள்கின்றன. எனவே, பாவச்செயல் செய்யாமல் வாழ்வதற்கும், நோயற்று இருப்பதற்கும் நிறையவே தொடர்பு உள்ளது.

இந்தப் பதினோராவது படியைக் கடந்தால், அடுத்து வருவது 'வலி' என்கிற பலம். அதாவது வலிமை!

பிரசாத்தின் வீட்டுக்கே வந்திருந்தார் பஞ்சாட்சரம். கூடவே சந்தானமும், ஜேக்கப்பும்.

தேவிகா அவர்கள் எதிரில் மவுனமாக அழுதுகொண்டிருந்தாள்.

"அழாதேம்மா, இனியாவது தன்மையா இருக்க முயற்சி செய். அவன் நிச்சயம் திரும்பி வந்துடுவான். எனக்கு நம்பிக்கை இருக்கு..."– என்றவரை, தேவிகா கொஞ்சம் கோபத்துடன் பார்த்தாள்.

"ஏம்மா இப்படிப் பார்க்கறே... நான் ஏதாவது தப்பா சொல்லிவிட்டேனா...?"

"நீங்க தப்பா எதையும் சொல்லலை, அதே நேரம் என் கோபம் உங்க மேலேயும் இல்ல..."

"பின்னர் யார் மேலம்மா...?"

"பிரச்சினையே... நீங்க ஒரு சித்தர் பற்றி சொன்னதுலதான் அவர் கொல்லிமலைக்குப் போகச் சொன்னார். குழந்தையை தத்து எடுத்துக்கச் சொன்னாருன்னு எல்லாம் சொன்னீங்க இல்லையா?"

"ஆமாம்... அது அவர் சொன்னதுதாம்மா. நான் சொல்லலை."

"நானும் மறுக்கலை. அவர் இப்ப வந்து– என் வீட்டுக்காரர் எங்க இருக்கார், எப்படி இருக்கார்ன்னு சொல்லக்கூடாதா?"

தேவிகா அப்படிக் கேட்டதிலும் ஒரு அர்த்தம் இருக்கவே செய்தது. பஞ்சாட்சரத்துக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

"சார்... இவங்க கேக்கறதுலயும் அர்த்தம் இருக்கே சார். 'குழந்தை பிறக்கும், நல்லது நடக்கும்'னுல்லாம் சொன்னவர், இப்ப வந்து பிரசாத் இருக்கற இடத்தைச் சொல்லக்கூடாதா?" சந்தானமும் அதையே கேட்டான்.

"தாராளமா சொல்லலாம். ஆனா, அது அவர் விருப்பம். அவரா வந்து சொல்லணும்னா, அவருக்கு இவங்க மேல கருணை இருக்கணும்; இவங்களுக்கும் சித்தர் மேல நம்பிக்கை உண்டாக வேண்டும். அகங்காரமா நாம இருக்கும்போது, அவங்க வரமாட்டாங்க."

"இப்பதான் இவங்க நம்பறேன்னு சொல்றாங்களே..."

"இது ஒரு வித நிர்ப்பந்தத்துல– நம்பித்தான் பார்ப்போமேன்னு சொல்ற விஷயம். என் நம்பிக்கை அப்படி இல்லை. நான் என் குருநாதர் சொன்னா அக்னியிலகூட குதிச்சிடுவேன். ஏன்னா, அதுல நல்லது மட்டும்தான் இருக்க முடியுங்கறதுதான் என் எண்ணம்."

"சார்... தெரிஞ்சோ தெரியாமலோ, உங்க மூலமா ஒரு பாதை தெரிய வந்திருக்கு. நீங்களும், சித்தர் சாமிங்க சொன்னா சொன்னதுதான்... மாறாதுன்னு சொல்றீங்க. ஆனா, இங்க பிரசாத்



தங்களோட சொத்தை எல்லாம்கூட இவங்க பேருக்கு மாத்தி எழுதி வெச்சுட்டு போலே போயிட்டான். என்கிட்டப் பேசும்போது, இனி இந்த ஊர்ப் பக்கமே எனக்கு வேலை கிடையாதுங்கற மாதிரி பேசினான். அவனுக்கு வடநாட்டுல ஏதாவது ஒரு ஆசிரமத்துல போய் சேர்ந்துடணுங்கறதுதான் நோக்கம். அவன் இப்ப அங்கதான் போய்க்கிட்டு இருப்பான்."

"இருக்கலாம் சந்தானம். நீங்க இவ்வளவு சொல்றதால, நான் என் குருநாதர் கிட்ட எப்பவும் போல மனசுக்குள்ள பிரார்த்தனை பண்ணிக்கறேன். எனக்கும், பிரசாத் இருக்கற இடம் தெரிஞ்சா நல்லாத்தான் இருக்கும். உங்களுக்காக இல்லேன்னாலும், எனக்காகவாவது பிரசாத் இருக்கற இடத்தை என் குருநாதர் எனக்கு உணர்த்தலாம். பாக்கறேன்..." என்று புறப்பட்டார். எதிரில் ஒரு வயதான உறவுக்கார பெண்மணி.

"அடியே தேவிகா... அவன் தங்கம்டி. சொக்கத்தங்கம். பிள்ளையைக் கொடுக்க முடியலேங்கறதுக்காக, அவனை ஊரைவிட்டே ஓடும்படி பண்ணிட்டியா? நான் நாலு பெத்தும், ஒரு பிரயோஜனமும் இல்லடி. ஒரு பிள்ளைகூட மதிச்சுச் சோறு போட மாட்டேங்கறான்டி... இதெல்லாம் ஏன்டி உனக்கு தெரியலை. ஏன் இன்னும் திருந்தாம பழைய கர்நாடகமாவே இருக்கே...?" என்று அந்தப் பெண்மணி பேசுவது, வெளியே பஞ்சாட்சரம் காரில் ஏறும் வரை கேட்டது.

சந்தானமும், ஜேக்கப்பும்... 'இப்படியும் நாலு பேர் வேணும்' என்று சொல்லிக்கொண்டே காரின் பின்பக்கம் ஏறினர். ஆனால், பஞ்சாட்சரம் அப்படி நினைக்கவில்லை. மனதுக்குள் புழுங்கினார். உடன் வந்த இருவரும் அதைத் துல்லியமாக கவனித்தனர்.

"சார்..."

"என்ன சந்தானம்?"

"ரொம்ப வேதனைப்படுற மாதிரி தெரியுதே சார்..."

"ப்ச்ச்..."

"மனசுவிட்டுப் பேசுங்க சார்... எங்களுக்கெல்லாம் உங்க பேச்சு எப்பவுமே பெரிய ஆறுதல் சார்."

"என்னத்த பேசறது... வாழ்க்கையை நினைச்சா சிரிக்கறதா... அழறதான்னே தெரியல."

"விரக்தியில எல்லாரையும் போலவே நீங்களும் பேசினா எப்படி.

சார்?"

"இல்ல சந்தானம்... இந்தக் கடவுள் ரொம்பப் பொல்லாதவன். 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்'கறது ஒரு கொடுமையான விஷயம். அன்றே கொன்னுடறது ஆயிரம் மடங்கு மேல்."

"என்ன சார், ஏதேதோ சொல்றீங்க?"

"ஏதோதோ சொல்லலை. நான் ஆழமா உணர்ந்ததைச் சொல்றேன். பாவம் பிரசாத்... அதைவிடப் பாவம் அவனுடைய மனைவி. இவங்க செய்த பாவத்துக்குக் கடவுளோட சட்டப் புத்தகத்துல அன்னிக்கே கொடுத்து முடிக்கற மாதிரியான தண்டனை எதுவும் இல்லை போல இருக்கு. அதான் ஒரு குழந்தை வடிவத்துல அந்தக் கடவுள் இவங்களை தினம் தினம் கொல்றான்."

"அதுதான் குழந்தை பிறக்கும்னு சொல்லிட்டீங்களே சார்..."

"அது இனிதானே...! ஆனா, இதுவரை அவங்கபட்ட பாட்டை எதோட சேர்க்கறது? நின்னு கொல்ற அந்த ரகத்துலதானே?"

"இப்படிச் செய்யறதுல அந்தக் கடவுளுக்கு என்ன சார் கிடைக்குது?"

"அவருக்கு எதுவும் கிடைக்கறது இல்ல ஜேக்கப்... இந்த சமூகத்துக்குத்தான் இவங்களால நிறைய பாடங்கள் கிடைக்குது."

"எப்படி சார்... புரியலையே நீங்க சொல்றது?"

ஓடும் காருக்குள் ஒரு நீதி நெறி விளக்கமே கொடுக்கத் தயாராகிவிட்டார் அவர்.

"வாழ்க்கையில தெரிஞ்சும், தெரியாமலும் எவ்வளவோ தப்புகள் பண்ணுறோம். தெரியாம பண்ணுற தவறுகளைப் போக்கத்தான் கங்கையும், யமுனையும். தெரிஞ்சு பண்ணுற தவறுக்கு தண்டனைதான் ஒரே தீர்வு. இதோ இப்பக்கூட இந்த கார்ல பயணிக்கும்போது, இந்த காரோட சக்கரத்துல ஈ, எறும்புன்னு எவ்வளவோ ஜீவராசிகள் அடிபட்டுச் சாகலாம். இது நாம திட்டமிடாத- நமக்குத் தெரியாம செய்யற பாவம்.

இரண்டு இடத்துல கார் நின்னப்ப, பல பிச்சைக்காரங்க கை நீட்டி பிச்சை கேட்டாங்க. ஆனா, நாம அவங்களுக்குக் காசு கொடுத்து உதவி செய்யலை. இது தெரிஞ்சே செய்யற பாவம். இது பாவம் இல்லைன்னு புத்தி நினைச்சா, எவ்வளவு வேணும்னாலும் நியாயப்படுத்திக்கும். அது வேற விஷயம். ஆனா, இல்லைன்னு



நீண்ட கையை நாம உதறிட்டோம். இப்படித்தான் இந்த உலகத்துல நாம பல பாவங்களைச் செய்ய பழகிக்கிறோம். சிலர்கிட்ட இது வளர்ந்து எல்லை இல்லாத ஒரு உயரத்துக்கே போயிடுது. எனக்கு மூணு வயசு இருக்கும்போதே என் அம்மா, அப்பா இறந்துட்டாங்க. நான் என் அத்தையோட தயவுலதான் வளர்ந்தேன்.

என் அத்தைக்கும் இரண்டு பசங்க. சோறு ஊட்டும்போது, அவங்களுக்கு மட்டும் பார்த்துப் பார்த்து ஊட்டுவாங்க. அதேபோலத்தான் துணிமணி எடுக்கும்போதும். என் மனசுல பச்சை குத்தின மாதிரி அவங்க பாரபட்சம் பதிஞ்சு போச்சு. என்னைப் பெரிய பாரமா நினைச்சாங்க. நான் இல்லேன்னா, தன் பசங்களை இன்னும் நல்லா வளர்க்க முடியும்னும் நினைச்சாங்க. பள்ளிக்கூடத்துல நான் முதல் மாணவன். ஆனா, அவங்களோ எல்லாத்துலேயும் 'பெயில்'. அதுக்காக என்னை அடிப்பாங்க. அவங்க பசங்க 'பெயில்' ஆகும்போது, நானும் அப்படி ஆகணும்னு அவங்க ஆசைப்பட்டாங்க. பாசம் அவங்களை ரொம்பப் பாரபட்சமா நடக்க வெச்சது.

இதெல்லாம் தப்பு... இதெல்லாம் பாவம்னு சொல்ல யாரும் இல்லை. சிலர் சொன்னப்போ, என் அத்தையோட கெட்ட நேரம்... அவங்க காதுல அது ஏறலை. கடைசியில என் அத்தை பசங்க கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போயிட்டாங்க. அதுல ஒருத்தன் இளவயசுலயே குடிப் பழக்கத்துக்கு அடிமையாகிச் செத்துட்டான். இன்னொருத்தன் கல்யாணம், குழந்தைன்னு எதுவும் இல்லாம ஆட்டோ ஓட்டிப் பிழைச்சுக்கிட்டு இருக்கான். அத்தைக்கும் காசநோய். ஆனா, அன்னிக்கு நான்பட்ட துன்பம், என்னைப் பக்குவப்பட வைத்தது. என் படிப்பும், நான் வாங்கின மதிப்பெண்களும் என்னை உங்களுக்கு 'மேனேஜர்'ங்கற அளவுக்கு உயர்த்தி இருக்கு!

இப்பவும் அத்தை உயிரோட இருக்காங்க. என்னைப் பார்க்க வருவாங்க. "நான் பாரபட்சமா நடந்துக்கிட்டதால கடவுளும் என் வரையில பாரபட்சமா ஆகிட்டார். அவர் முன்ன போய் உனக்கே இது நியாயமான்னு கேட்கற தைரியமோ, தகுதியோ எனக்கு இல்லை. ஆனா, உன்னைக் கடவுள் கைவிடலை, கை தூக்கி விட்டுட்டார்"ன்னு அவங்க சொல்லி அழும்போது, நியாய-தர்மங்கள் மேல எனக்கு ஒரு தனி மரியாதையே வரும்.

"இதையெல்லாம் ஏன் சொல்றேன்னா, நாம எது செய்யறோமோ...

அதுதான் நமக்குத்திரும்பி வருது. இதை ஒரு நீண்ட அனுபவத்துலதான் உணர முடியும். எவன் ஒருவன் மனசுல பாரபட்சமில்லாத நியாயத்தராசு இருக்கோ, அவன் பிரசாத் மாதிரி நின்னு கொல்லப்படுற தண்டனைகள்ல மாட்டிக்கறதே இல்லை.

பாவம்... பிரசாத்தும், தேவிகாவும்! எந்த ஜென்மத்துல பிஞ்சுக் குழந்தைகளுக்கு என்ன கேடு செய்தாங்களோ தெரியலை. கர்மவினையா பதிவாகி இன்னிக்கு இப்படி அவங்களைப் படுத்திக்கிட்டு இருக்கு..."- பஞ்சாட்சரம் சொன்ன விஷயங்களில் அப்படியொரு உருக்கம், அழுத்தம்.

நெடுநேரம் சந்தானமும், ஜேக்கப்பும் எதுவுமே பேசவில்லை. காரின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டே வந்தார்கள். வெளியே பறந்தபடி இருக்கும் வாகனங்கள்... ஓடு ஓடு என்று ஓடியபடியே இருக்கும் மனிதர்கள். சூரியனும் சுட்டெரித்தபடி இருந்தான். நல்ல மழையை அந்த மண் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. காலம் கெட்டுவிட்டது என்று சொல்லாதவர்களே இல்லை. ஆனால், 'போட்டதுதான் முளைக்கிறது' என்கிறார் பஞ்சாட்சரம். அதை மறுக்கவும் முடியவில்லை. தர்மச் சக்கரம் சரியாகத்தான் சுழன்றபடி உள்ளது. நமக்குள்தான் ஏதோ அவசரம் அல்லது தவறான பார்வை...

இப்படித்தான் அந்த மவுனத்தில் ஜேக்கப்பும், சந்தானமும் நினைத்தார்கள். அதில் ஜேக்கப்பிடம் மட்டும் கொஞ்சம் வேறுபட்ட சிந்தனை.

"சார்..."

"சொல்லுங்க ஜேக்கப்..."

"எங்க மதத்துல எங்க கடவுள் எல்லாத்தையும் மன்னிச்சிடுறாரு. அவரைச் சரண் அடைஞ்சுட்டா போதும். உங்க மதத்துல அப்படி எதுவும் இல்லையா சார்?"

"உங்க கடவுளாலகூட எல்லாப் பாவங்களையும் மன்னிக்க முடியாதுன்னுதான் ஜேக்கப் நான் நினைக்கிறேன். அப்படி அவர் மன்னிக்கிறார்ன்னு தெரிஞ்சா, தவறுதான் அதிகமாகும். 'முதல்ல தப்பு பண்ணிடுவோம், அப்புறம் மன்னிப்பு கேட்டுக்கிட்டா போச்சு'ன்னு ஒரு தப்பான பாதை உலகம் முழுக்க உருவாயிடும். உங்க மதத்துல கடவுள் செய்யற அதே காரியத்தைத்தான் எங்க மதத்துல கங்கையும், யமுனையும், காவிரியும் செய்யுது. சில வழிபாடுகள்,



விரதங்கள் எல்லாம் அதுக்குத்தான் இருக்கு. பாவங்கள்ல இரண்டு வகை உண்டு. ஒன்று, கழுவ முடிஞ்சவை. மற்றொன்று, கழுவ முடியாதவை."

"அப்ப பிரசாத்- தேவிகா விஷயம் கழுவ முடியாத ரகம்னு சொல்ல வர்றீங்களா?"

"சேச்சே... பிள்ளை இல்லைங்கறது ஒரு கோணத்துல தான்பாவம். பல கோணத்துல அது மிகப்பெரிய விஷயம்."

"என்ன சார்... இது என்ன சமாளிப்பு?"

"சமாளிக்கலை. நான் சொல்றது சத்தியம். இனி பிறவி இல்லைன்னு ஆகிவிட்டவங்க, இந்த ஜென்மத்துலேயே எல்லாத் துன்பத்தையும் அனுபவிக்கணும்கற விதி அமைப்பு உடையவங்க, இறந்த பிறகு நேரா இறைவன்கிட்ட போகற பாக்கியம் உள்ளவங்க, இவங்கள்லாம்தான் வாரிசுகள் இல்லாத ஒரு வாழ்க்கையை- இந்த மண்ணுல வாழுறாங்க.

பிள்ளைன்னு ஒருத்தன் இருந்தா, அவன் கர்மம் செய்யணும். அப்ப அவனை ஆசிர்வதிக்க பித்ருக்களா இருந்து ஓடி வரணும். சுருக்கமாகச் சொன்னா, இந்த பூமியில திரும்பத் திரும்பப் பிறக்கறதும் ஒண்ணுதான்; சந்ததி தொடர்றதும் ஒண்ணுதான். அதனாலதான் பிரமச்சரியத்துக்குள்ள புகுந்து சன்னியாசியாகி, தங்களோடு தங்கள் பரம்பரைத் தொடர்பு முடிஞ்சு, முற்றுப்புள்ளியா மாற பலரும் ஆசைப்படுறாங்க. இல்வாழ்க்கை, பிள்ளைப்பேறு, குடும்பம் குட்டிங்கறது ஒரு பாதைன்னா, இது மறுபாதை. இந்தப் பாதையோட பலம் தெரியாதவங்கதான் பிரசாத், தேவிகா போல அழுவாங்க. தெரிஞ்சவங்க, கடவுள் தங்களை ஆசிர்வாதம் செய்துட்டதாதான் நினைப்பாங்க..."

"சார்... எப்பவோ செய்த, கழுவ முடியாத பாவங்கள்தான் மலட்டுத்தனமா வெளிப்பட்டு நின்று கொன்னுகிட்டு இருக்கறதா சொன்னீங்க. இப்ப அதை அப்படியே மாத்திப் போட்டுட்டீங்களே... நின்று கொல்ற விஷயத்தை ஒரு ஆசிர்வாதமாகவும், அருளாவும் சொல்றீங்களே... எப்படி சார்?"- சந்தானம் கேட்டதும் சரிதான். ஜேக்கப்பிடமும் ஆமோதிப்பு.

ஆனால், பஞ்சாட்சரம் அந்தக் கேள்வியை ஒரு சிக்கலாகவே நினைக்கவில்லை.

"இந்த மாதிரி விஷயம் எல்லாம் பூஜ்ஜியம் மாதிரி! பூஜ்ஜியம்

ஒரு எண்ணுக்கு முன்பக்கம் விழுந்தா அந்த எண்ணோட மதிப்பு அப்படியே குறையும். அதுவே, எண்ணுக்கு பின் பக்கம் விழுந்தா அப்படியே அதிகரிக்கும். பிரசாத்தும், தேவிகாவும் பிள்ளை இல்லாததை ஒரு குறையா நினைக்கிறாங்க. அப்ப அவங்க வரையில இந்த விஷயம், முன்னால விழுந்த ஒண்ணு ஆயிடிச்சு. எனக்குத் தெரிஞ்ச ஒரு தம்பதிக்குக் குழந்தை இல்லை. அவங்க என்ன நினைக்கிறாங்க தெரியுமா?”– அவர் விட்ட இடைவெளி சந்தானம், ஜேக்கப் இருவரையும் உற்றுப் பார்க்க வைத்தது.

“குழந்தை பிறந்துட்டா நாம அதை மட்டும்தான் நம்ம குழந்தையா நினைப்போம். பிறக்காத நிலையில உலகத்துல இருக்கற எல்லாக் குழந்தைகளையும் எங்க குழந்தைகளா நினைக்கிறோம். எங்க மனசு இப்ப ரொம்ப விசாலமா ஆகிடிச்சுன்னு சொல்றாங்க. என்ன ஒரு ஆக்கப்பூர்வமான மனப்போக்கு பார்த்தீங்களா?”

அந்தப் பதிலுக்குப் பிறகு இருவருமே வேறு எதையுமே கேட்கவில்லை. பஞ்சாட்சரத்தின் வீடும் வந்தது. காரைவிட்டு இறங்கிக்கொண்டவர், இருவரையும் நன்றியோடு பார்த்தார். “நாளைக்கு ஆபீஸ்ல சந்திப்போம்” என்றபடியே உள்ளே சென்றார்.

யாரும் இல்லாத வீடு அது. அவருடைய மனைவி, மகளின் வீட்டில் ஒரு விசேஷம் என்று திருச்சி வரை போய்விட்டாள். மகனோ அமெரிக்காவில் குடும்பம் நடத்துபவன். சென்னையில் இவரும், மனைவியும் மட்டும்தான்.

என்னதான் பிள்ளைகளைப் பெற்று அவர்கள் மூலமாக பேரன், பேத்திகளைப் பெற்றுக்கொண்டாலும், அவர்களோடு சேர்ந்து வாழ முடியாத வாழ்வும் சிலருக்கு அமைந்துவிடுகிறது. இருந்தும் இல்லாத இதை எந்த விதத்தில் சேர்ப்பது? பஞ்சாட்சரமும் கேட்டுக்கொள்வார். அப்போதெல்லாம் இருக்கிறதோ, இல்லையோ அனுபவிப்பதற்கு என்று ஒரு விதி இருக்கிறது என்பதை மட்டும் உணர்ந்திருந்தார்.

பூட்டிய கதவைத் திறந்துகொண்டு சோர்வாக உள்ளே நுழைந்தவருக்கு, ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. உள்ளே நாற்காலி ஒன்றில் அவரையே பார்த்தபடி கல்யாண சித்தர்!

ஒரு விநாடி தூக்கிவாரிக்கூட போட்டது.



# 11

பதினாறு பேறுகளில் நோயின்மையைத் தொடர்ந்து வருவது வலி, அதாவது வலிமை. வலிமை என்பது உடல் வலிமையை மட்டும் குறிப்பதன்று... உள்ளத்து வலிமையையும் குறிப்பதுதான்.

எந்த நோயும் இல்லாத உடல் இருந்தால் மட்டும் போதாது. இரும்பு போன்ற நல்ல உடற்கட்டும் ஒருவருக்குப் பிரதானம். சிலரால் ஒரு சில கிலோ மீட்டர்கள் கூட கைவீசி நடக்க முடியாது. வலிக்கிறது என்று அமர்ந்துவிடுவார்கள். அதேபோல, சிறிய பிரச்சினைக்குக்கூட பெரிய அளவுக்கு சலனப்படுவார்கள். மனபலம் இல்லையென்றால் எதையும் தாங்க முடியாது. தீமைகளைக் கண்டிக்கும் துணிவு இல்லாமல் போகும். எதிரிகள் வாலாட்டும்போது, வீரத்துடன் செயல்பட முடியாது. கோழை போல கதவைத் தாழிட்டுக் கொள்ளத்தான் முயலுவோம். எனவே, ஒருவர் பெறும் பேறுகளில் வலிமையும் பிரதானமாகும்.

வலிமைதான் பன்னிரண்டாவது படி!

பூட்டிய வீட்டுக்குள் கல்யாண சித்தரைப் பார்த்தவருக்கு அப்படி ஒரு திகைப்பு.

“சாமி, நீங்களா?”– என்று கேட்டபடியே போய் அப்படியே காலில் விழுந்தார். அவரோ சிரித்தார்.

“பூட்டி இருக்கற வீட்டுக்குள்ள எப்படிடா வந்தேன்னு கேட்டு என்னைக் கோவிச்சுக்கமாட்டியே?”– தாடியை நீவியபடி சிரிப்புக் கலையாமல் அவர் கேட்டதில், ஒரு சின்ன ஆழம் பார்க்கும் ஆசை.

“சாமி, என்ன கேள்வி இது? உங்களைப் பார்த்து நான் அப்படியொரு கேள்வி கேட்பேனா...? இது உங்க வீடு. எங்களைப் போன்ற அல்ப ஆத்மாக்களுக்குத்தான் காலம், நேரம், இடம், பொருள், தடை, தடுமாற்றம் எல்லாம்! உங்களுக்கென்ன...?”

“அதுசரி... அந்தச் சித்தர் என் எதிர்க்க வரமாட்டாரா... என்கிட்ட சொல்ல மாட்டாரான்னு உன் முன்னால சிலர் நிறையவே கேட்டிருக்கற மாதிரி தெரியுதே...”

“ஆமாம் சாமி, அது சகஜம்தானே?”

"நீ அதுக்குச் சொன்ன பதிலும் எனக்குத் தெரியும். கவலைப்படாதே. உன் நம்பிக்கை வீண் போகாது. அவன் இப்ப கொல்லிமலையிலதான் இருக்கான். அவனைச் சுத்தி நாலு சாதுக்கள் வேற... இப்பவே அவன் பல பரிகாரங்களைப் பண்ணி முடிச்சிட்டான். ரத்தம் கொடுத்து இருக்கான். வழிகாட்டி இருக்கான்.யோகி ஒருத்தரைத் தோள் மீது சுமந்து இருக்கான். பாராட்டை மறுத்திருக்கான். துணிச்சலா தன் உயிரைக்கூட பொருட்படுத்தாமல் செயல்பட்டுக்கிட்டு இருக்கான்.

'குழந்தை குழந்தை'ன்னு வருத்தப்படற மனைவிக்கும் எல்லா நியாயங்களையும் செய்திருக்கான். இந்த நிமிஷம், கால் காசுகூட அவன்கிட்ட கிடையாது. அவன் இப்ப வேற ஒரு பெண்ணை மணந்துகிட்டு உல்லாசமா வாழ நினைக்கலாம். மது, மாதுன்னு ஊரையும் சுத்தலாம். புத்தியை அந்தப் பக்கம் ஓடவிடாம அடக்கி ஒரு நாலு யோகிகளோட போய் கூட்டு சேர்ந்துருக்கான். சுருக்கமா சொன்னா ஒவ்வொரு படியா அவன் மேல ஏறிக்கிட்டே இருக்கான். கடைசியா அவன் ஏறப்போறதுதான் நன்மக்கள்ங்கற படி, ஏறிடுவான்... இருந்தாலும்..."

"என்ன சாமி... என்ன தயக்கம்?"

"இந்தப் பதினாறு பேறுகள்ல ஒரு குபேர விஷயமும் இருக்கு. அதுதான் பொன்."

"அதுக்கென்ன சாமி?"

"அதுவும் வெற்றிகரமான ஒரு வாழ்க்கைக்கு வேணும். அதைக் கொடுத்தாத்தானே இது கிடைக்கும்...?"

"புரியல சாமி..."

"அவன் பரிகாரம்கற பேர்ல எல்லாத்தையும் சீர் செய்துக்கிட்டு வர்றான். இறுதியா இந்தப் பொன் விஷயத்துல மாட்டிக்குவானோன்னு எனக்குள்ள ஒரு சிறு சஞ்சலம்..."

"உங்க கருணை இருந்தா தப்பிக்க முடியாதா?"

"என் கருணை எங்க...? எல்லாம் உன் கருணைதான். நீதான் எதையும் கேக்க மாட்டேங்கறே. ஆனா மனசுல, உச்சியில என்னை வெச்சு சுமக்கறே. உன் மனசுல அவனை நினைச்சா ஒரு வருத்தம்; அதை நினைச்சா எனக்கு வருத்தம். அதனாலதான் ஓடி ஓடி வர்றேன்."

– திரும்பவும் தாடியை நீவிக்கொண்டு சிரித்தார்.



"சாமி... என்னையும் ஒரு மனுஷனா நினைச்சு பொருட்படுத்தற உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போறேன்?"

"சரி, நான் புறப்படுறேன். என் ஜீவசமாதிகிட்டதான் இப்ப அவனும், அந்த யோகிகளும் தங்கி இருக்காங்க. அதுல ஒருத்தருக்குக் கால் முறிஞ்சு போச்சு. அந்த முறிவைக் கந்தப்பன் என்கற சித்தன் சரி செய்துடுவான். போகரோட வைத்தியசாலை மாணவன். எல்லாம் அவன் பார்த்துப்பான். நாளைய பொழுது அந்தப் பிரசாத்துக்கு நிறையவே சோதனையானதுதான்..."– என்றவர், சித்தரின் கால் தொட்டு வணங்கிவிட்டு நிமிர்ந்தபோது, அவர் மறைந்துவிட்டார்.

பஞ்சாட்சரத்தின் கண்களில் கண்ணீர்க் கூடு. உடனே தொலைபேசி செய்து சந்தானத்துக்கும், ஜேக்கப்புக்கும் சொல்ல மனசு துடித்தது. ஆனால் அடக்கிக்கொண்டார். தேவிகாவுக்கு மட்டும் சொல்வோம் என்று அவர், அவளை தொலைபேசியில் அழைத்து, "பிரசாத் இப்ப கொல்லிமலைலதாம்மா இருக்கார். நிச்சயமா கரடிப்பள்ளம் போய் சித்தர் சாமி சொன்ன மாதிரி என்ன செய்யணுமோ அதைச் செய்வார்ன்னு நினைக்கறேன்" என்றார்.

தேவிகா அப்போதே கொல்லிமலைக்குப் புறப்படத் தயாராகிவிட்டாள்.

## 12

**வ**லிமையைத் தொடர்வது வெற்றியாகும்! வெற்றி ஒரு வரம். எல்லோருக்கும் இது கிடைப்பதில்லை. சம பலம் கொண்ட இருவர் மோதிக்கொள்கின்றனர். ஆனால், வெற்றி அவர்களில் ஒருவருக்குத்தான் சொந்தமாகிறது. சில நேரங்களில் யார் வெற்றி பெறுவார் என்றே தீர்மானிக்க முடியாதபடியும் ஆகிவிடுகிறது. எப்பொழுதும் எதிலும் வெற்றி பெற்றபடியே இருக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். வெற்றி என்பது அதிர்ஷ்டத்தால் மட்டும் வருவதன்று. அதை அடையப் பல காரணிகள் தேவை. அதிர்ஷ்டமும் அதில் ஒன்றாக இருக்கிறது. பல நேரங்களில் அதிர்ஷ்டம் மட்டுமே கூட காரணமாக உள்ளது.

வெற்றி என்னும் பேறு பதிமூன்றாவது படியாகும்.

அந்த இரவுப் பொழுதில், குளிரில் பிரசாத்தால் தூங்கவே முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்தவன், ஒரு கட்டத்தில் எழுந்து குடிசை நடுவில் உள்ள அடுப்பு அருகே போய் அமர்ந்துகொண்டான். அவ்வப்போது கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் முன்னோக்கிப் போகாமல், பின்னால் செல்கிற மாதிரி தோன்றியது. எப்பொழுது மணி மூன்று வரும் என்று மனம் துடித்தது. அந்த யோகிகளும் கிட்டத்தட்ட அப்படித்தான் இருந்தனர். புரண்டு புரண்டு படுத்தனர். நடுநடுவே பிரசாத்தைப் பார்த்து, “நீ எங்களுக்காக மிகவும் சிரமப்படுகிறாய்” என்றனர்.

கால் ஒடிந்த பண்டரிநாத் மட்டும் வேதனையோடு அவ்வப்போது முனகியபடியே இருந்தார்.

மழையும் விட்டு விட்டுப் பெய்தபடி இருந்தது. அந்த நிர்வாண சித்தரோ, பேருக்குப் புலித்தோலைப் போர்த்திக்கொண்டு சமாதி அருகே படுத்திருந்தார். மிக ஆழ்ந்த உறக்கம். எப்படி இப்படி உறங்க முடிகிறது என்று பொறாமைப்பட வைக்கிற உறக்கம், அது. பிரசாத் அவ்வப்போது அதைப் பார்த்துப் பார்த்து மாய்ந்து போனான்.

ஒரு தடவை அவன் மெல்ல எட்டிப் பார்த்தபோது, முன்பு யோகிகளைச் சிதறடித்த புலிகூட அவர் அருகில் வந்து நாய்க்குட்டி போலப் படுத்திருந்தது. அந்தக் காட்சி உதறல் எடுக்கச் செய்வதாக இருந்தது. சிறிது நேரத்திலேயே அது எழுந்து போய்விட்டது. மொத்தத்தில் அது அங்கேயே சுற்றிக்கொண்டு இருப்பது தெரிந்துவிட்டது. இந்த நிலையில் எந்த ஆயுதமும் இல்லாமல் எப்படி அருவிக்கரைக்குப் போக முடியும்?

குழப்பமாக இருந்தது. ‘கூடவே அந்த நிர்வாண சித்தரே கூட இருக்கும்போது, எதற்கு அச்சப்பட்டுக்கொண்டு?’ என்றும் எண்ணிக்கொண்டான். இதுவே வீடாக இருந்தால் மெத்தையில் இதமான ‘குளு குளு’ குளிரில் காஷ்மீர் கம்பளிக்குள் ஆனந்தமாகத் தூங்கிக்கொண்டு இருக்கலாம். ஆனால், விதி இப்படி இழுத்துக்கொண்டு வந்துவிட்டதே? முதலில் அதை ஒரு சங்கடமாக எண்ணியவன், எப்பொழுதும் மனதில் மலை போன்ற பாவத்தைச் சுமந்துகொண்டு பாவியாக வாழ்வதற்கு இது எவ்வளவோ தேவலை என்றும் எண்ணிக்கொண்டான். எதிரில் அவிந்து, அடங்கிப் போன தீக்கங்குகளைப் பார்த்தான். அப்படியே மணி மூன்றை எட்டிப் பிடிக்க– எழுந்தவன், நிர்வாணச் சித்தரையும்



எழுப்பலாம் என்று எண்ணிக் கதவைத் திறக்கவும் எதிரில் அவரே நின்றுகொண்டிருந்தார்.

“என்னப்பா... சரியான நேரத்துக்கு முழிச்சிட்டே போல தெரியுமே...” என்றார்.

“ஆ... ஆமா சாமி.”

“எங்க... தூக்கமே வந்திருக்காது. தூங்கினால்ல முழிச்சுக்க...?” என்று சற்றுக் கிண்டலாகக் கேட்டுச் சிரித்தவர், யோகிகள் பக்கம் பார்வையை விட்டார். அவர்கள், இருவரின் குரல் கேட்டு எழுந்துவிட்டனர். பண்டரிநாத் மட்டும் படுத்தபடியே பரிதாபமாகப் பார்த்தார். சித்தர் சாமி போய்த் தீப்பந்தத்தை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டார்.

“அந்தக் கால் ஒடிஞ்ச சாமியைக் கழுத்து மேல உக்காத்தி வெச்சுக்கிட்டுக் காலைத் தொங்கப் போட்டுக்கச் சொல்... அப்படியே கையைப் பிடிச்சுக்க...” என்று அவரைச் சுமக்கும் விதத்தைச் சொல்ல, பிரசாத்தும் அதேபோல அவரைத் தூக்கிக்கொண்டான். மற்ற மூவரும் ‘நாங்கள் தூக்குகிறோம்’ என்று முன்வரவும், மறுத்துவிட்டான்.

அந்த யோகி நல்ல கனம். நூறு அடிகூட அவரைச் சுமந்தபடி பிரசாத்தால் நடக்க முடியவில்லை. அதன்பின் மற்றவர்கள் முன்வர... மாறி மாறி அவரைத் தூக்கிக்கொண்டு அந்த அதிகாலையில் மலைப் பாதையில் நடப்பது ஒரு கொடிய அனுபவமாக இருந்தது. ஆங்காங்கே மழைநீர் சொத சொதப்பில் கால் இரண்டும் புதைந்து போய்விட, புதைந்த கால்களை வெளியே இழுத்து நடப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

அருவிச் சாரலின் இரைச்சல் சப்தம் மட்டும் துல்லியமாகக் கேட்டது. ஆனால், நடக்க நடக்க அருவியானது பின்னோக்கியே போவது போல் பிரமை தட்டியது.

சரியாக நான்கு மணி. திண்டு திண்டான பாறைகளைக் கடந்து அருவியை எட்டியபோது பிரமிப்பாக இருந்தது. குதிரை வால் போல் அருவி கொட்டி, அது பட்டுத் தெறிக்கும் இடத்தில் ஆங்காங்கே சிலை போல சித்தர்கள். சிலர் நெஞ்சுக்கு நேராகக் கைகூப்பிக்கொண்டு, சிலர் தலைக்கு மேலே கைகூப்பியபடி, சிலர் பத்மாசனம் இட்டுப் பாறை மேல் அமர்ந்திருந்தனர். அவ்வளவு பேரையும் அருவி நீர் அபிஷேகித்தபடி ஓடிக்கொண்டிருந்தது.

நிர்வாண சித்தரின் தீப்பந்த ஒளியில் ஓரளவுதான் பார்க்க முடிந்தது. ஹரித்துவாரில் இருந்து வந்திருந்த அந்த யோகிகள் அப்படியே இறை தரிசனம் கிட்டிவிட்டது போல பிரமித்துப் போய்க் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றுவிட்டனர். அவர்களில் ஒருவர் அங்கிருந்து மெல்ல விலகி, தீப்பந்தம் தாங்கியபடி நிற்கும் நிர்வாண சித்தர் அருகில் வந்தார். சிரித்தார்.

“என்னப்பா... இவருக்கு என்ன எலும்பு முறிஞ்சு போச்சா?”

“ஆமாம் சாமி. உங்களாலதான் நேர் பண்ண முடியும்னு கூட்டிட்டு வந்தேன். இவங்க கங்கைக் கரை யோகிங்க. சித்த தரிசனத்துக்காகப் பிரயத்தனப்பட்டு வந்து இருக்கறவங்க...”

“சந்தோஷம். என்கூட வா...”– அவர் அங்கிருந்து ஒரு ஒற்றையடிப் பாதையில் நடந்தார். பிரசாத் உடம்போ நடுங்கியது. அருவிச் சாரல் ஊசி போல் அவன் மேல் பாய்ந்தபடி இருந்தது. அவர் ஒரு மூங்கில் குடிசைக்குள் நுழைந்தார். ஆங்காங்கே கல் விளக்குகள்! குடிசைக்கு வலப்பக்கமாய் இடுப்பு உயரத்துக்கு லிங்கம். இருளிலும் பார்க்க முடிந்தது.

அவர் முன்புறம் ஒரு மூங்கில் கட்டிலில், பண்டரிநாதனைப் படுக்க வைத்து அடிபட்ட மூட்டுப் பாகத்தைத் தொட்டுப் பார்த்தார். அது விலகி வெளியேறி இருந்தது.

“எலும்பு முறியல... மூட்டு விலகி இருக்கு. நொடியில சரி செய்துடறேன்...” என்றவர், பண்டரிநாதனைப் பார்த்து சிவ நாமம் சொல்லச் சொன்னார்.

பண்டரியும், ‘ஓம் நமச்சிவாய’ என்றார். திரும்பிச் சொல்லச் சொன்னார். திரும்பவும் அவரும் கூறினார். இப்படியே திரும்பத் திரும்பச் சொன்னவர், ஒரு கட்டத்தில் அவர் எதிர்பாராத நொடியில் முட்டிப் பாகத்துக்கு கீழ் உள்ள பாகத்தை ஒரு இழு இழுத்தார். அடுத்த நொடி, விலகிய மூட்டு தன் பழைய இடத்தில் பதிந்துகொண்டது. அதை ஒரே இழுப்பில்– ஒரே வேகத்தில் செய்யத்தான் அந்த சிவ நாமம். சிவ நாமத்தில் கவனம் இருக்கும்போது, உடம்பு தளர்ந்திருக்கும் நிலையில் மின்னல் வேகத்தில் செய்ய வேண்டும்.

பண்டரிநாதனுக்குக் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது. அப்போதே எழுந்து நின்றார். அப்படியே சாஷ்டாங்கமாக அவர் காலடியில் விழுந்தார்.

“இந்த மூட்டு விலகல் ஒரு வகையில ஆசிர்வாதம். இல்லேன்னா



இங்க வந்து உங்களைத் தரிசிக்கிற பாக்கியம் கிடைச்சி இருக்காது” என்றார்.

பின் அவர்களுக்கு மலை மூலிகை வேர்களால் செய்த கசாயத்தை சூடுபடுத்திக் குடிக்கக் கொடுத்தார். அந்த அதிகாலைக் குளிருக்கு அமிர்தமாக அது இருந்தது. பிரசாத்துக்கு அதைக் குடிக்கவும் உடம்பில் ஒரு புது ரத்தம் பாய்ந்த மாதிரி சிலிர்ப்பு.

அந்த நான்கு யோகிகளும் அங்கேயே தங்கள் காலை யோகங்களைச் செய்ய ஆரம்பித்துவிட, பிரசாத் சற்று தொலைவில் அமர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

## 13

பொன்! உலகின் முழுமுதல் செல்வம். நல்ல மனமுடைய ஒருவரைத் தங்கமான மனசுக்காரர் என்போம். அந்த அளவு சிறப்புடையது, இது. உலகில் உள்ள எல்லாமே தீயால் அழியும்; சாம்பலும் ஆகிவிடும். ஆனால், தீ பட்டும் ஒளிர்வது தங்கம் மட்டும்தான். நீர், ஆகாயம், மண், காற்று என்கிற மற்றய பூதங்களாலும் பாதிக்கப்படாத ஒரு உன்னதம் தங்கம். அதனால்தான் இதில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள் என்பார்கள். உலகின் பொதுவான செலாவணி. இதை அடைய விதி வேண்டும். பொன் இருக்கும் இடத்தில் தரித்திரம் இருக்காது. மற்ற செல்வங்களும் சேரும்.

பதினாறு பேறுகளில் இது பதினான்காவது பேறாகும்.

விடிந்துவிட்டது. மொத்த மலைப் பரப்பும் அழகாய்த் தெரிந்தது. அடேயப்பா! எத்தனை எத்தனை விதமான பறவைகள்... அவற்றின் குரலொலிகள்! பிரமித்துப் போனான் பிரசாத். எடுத்த எடுப்பிலேயே சுள்ளென்று சூரியக்கதிர் படவும், சுகமாக இருந்தது. அருவிக்கரைக்குப் பக்கத்திலேயே சிறு சமவெளி போன்ற பகுதி. அங்கங்கே சிறு சிறு குடிசைகள். அதில் ஆளுக்கொரு சித்தர்கள் குடியிருந்தனர். கயிற்றுக் கட்டில்தான் அவர்கள் பஞ்சணை. மரத்தடி கல் மேடைதான் அவர்கள் சிம்மாசனம். சிலர் அந்தக் கல்மேடைகளில் அமர்ந்து சுவடிக் கட்டுகளை விரித்துப் படித்தபடி

இருந்தனர்.

ஹரித்துவார் யோகிகளுக்கு அங்கிருந்து கிளம்ப மனமே இல்லை. அவர்களது யோகச் செயல்கள், சித்தர்களுக்கும் மிகப் பிடித்துவிட்டது. ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஆன்மீக ஆராதனைகளைப் பரிமாறிக்கொண்டார்கள். பிரசாத்தும் 'தான் யார்?' என்பதில் இருந்து சகலத்தையும் மறந்து அந்தப் புதிய சூழலில் அப்படியே ஐக்கியமாகிவிட்டான். அங்கு இருக்கும் ஒரு சித்தர் அவனை அழைத்தார். தனுராசனம் போல ஒரு புதுவித ஆசனம் போட்டுக் காட்டியவர், "இதை நீ தினமும் செய். நரம்புகள்ல புது சக்தி ஏற்படும். ரத்த ஓட்டம் வேகமா பாயும். உயிர்ச்சத்து சுரக்கற இடத்துல ஒரு உத்வேகம் உண்டாகும்" என்றார்.

'உயிர்ச்சத்து' என்கிற அந்த வார்த்தை அவனை அப்படியே பிடித்துக்கொண்டது.

"சாமி... உயிர்ச்சத்துன்னு சொன்னீங்களே... அது என்ன சாமி?"

"உன்கிட்ட இல்லாதது அது. ஒரு அம்மைக் காய்ச்சல் வந்தபோது உனக்குள்ள அது பட்டுப் போச்சு. அது திரும்ப வரும். அதுக்குன்னு ஒரு மருந்து இருக்கு. அதைச் சாப்பிட்டா, அது பெருகும்" என்றார்.

"நிஜமாகவா, அந்த மருந்தை எனக்குத் தர்றீங்களா?"

"தர்றேன். பதிலுக்கு நான் உன்கிட்ட ஒண்ணு கேட்டா அதை நீ எனக்குத் தருவியா?"

"என்ன வேணும் சாமி... என் சொத்து பூரா வேணுமா தரேன்."

"சொத்து பூராவா... அது எதுக்கு? இந்தக் காட்டுல கிடைக்காததை உன் சொத்து சுகம் தந்துடுமா என்ன?"

"வேற என்ன சாமி வேணும்?"

"நான் முதல்ல மருந்தோட வரேன். அப்புறம் கேக்கறேன்..."

"சாமி... எனக்கு உயிர்ச்சத்து இல்லைன்னு எப்படி சாமி உங்களுக்குத் தெரியும்?"

"நீதானே பிரசாத்..."

"ஆமா."

"கல்யாண சித்தர் சொன்னாரே..."



"க... கல்யாண சித்தரா...?"

"அவரேதான். நம்ம பய ஒருத்தன் வருவான். அவனுக்கு இப்படி ஒரு சிக்கல். கவனிச்சுக்கோன்னு சொன்னாரே..."

"அ... அ... அப்படியா?"

"என்ன அப்படியா...? அவர் சொல்லாட்டி நீ எப்படி இந்த மலைப் பக்கம் வர முடியும்? எங்களை எல்லாம் பார்க்க முடியும்?"

"ஆனா... ஆனா... நான் அவரைப் பார்த்ததில்லையே..."

"அவரைப் பார்க்கலேன்னா என்ன, அவரைப் பார்த்தவரைப் பாத்திருக்கியே..."

"ப... பஞ்சாட்சரம் சாரை சொல்றீங்களா?"

"ஆமா, தனக்குன்னு அவர் எதுவும் கேக்கமாட்டாரே! எப்பவும் அவர் பிறருக்காகத்தானே கேப்பாரு..."

"ஆமா... ரொம்ப நல்ல மனுஷன். ஆனா, என் வாழ்க்கையை இப்படி திருப்பற அளவு ஒரு நல்லவரா நான் நினைக்கல."

"சரி... நீ இங்கயே இரு. நான் போய் மருந்தோட வரேன்."

"ரொ... ரொம்ப சந்தோஷம் சாமி..." என்று உணர்ச்சிப் பிரவாகமானான். அப்படியே நான்கு யோகிகளிடமும் சென்றான்.

"சாமிகளா... நாம இன்னிக்கே இங்கே இருந்து கிளம்பணுமா?"

"வேண்டாம். இங்க நாங்க கூடுதலா சில நாட்கள் தங்க விரும்பறோம். இந்தக் காத்து, இந்தச் சூழ்நிலை எங்களுக்கு இமயமலையை ஞாபகப்படுத்துது!"

"ரொம்ப சந்தோஷம். நான் போய் கார்ல இருக்கற நம்ம பொருட்களை எடுத்துட்டு வந்துடறேன். எனக்கும் வேற துணிமணிகளே இல்லை. எல்லாத்தையும் வாங்கிட்டு வந்துடுறேன்."

"போயிட்டு வா..."

அவர்கள் விடை கொடுக்க, அங்கிருந்து குதித்துக்கொண்டு ஓடினான். "பாத்துப் போங்க..."– அவர்கள் அக்கறை காட்டினர்.

**அ**ந்த நான்கு பேரையும் பார்க்க வேட்டைக்காரர்கள் போல இருந்தனர். பேண்ட், சட்டை அணிந்திருந்தனர். கையில் நீண்ட குழல் துப்பாக்கி.

"நாமும் வருஷக்கணக்கா இந்த மலையைச் சுத்திச் சுத்தி வர்றோம். அந்தத் தங்கம் பண்ணுற சாமி, கண்ணுலயே படமாட்டேங்கறாரேடா

முனியப்பா..."

"பட்டுட்டாலும் கிளுகிளுன்னு தங்கம் பண்ணச் சொல்லிக் கொடுத்துடப் போறாரு பாரு..."

"ஏன்... அவரு யாருக்கும் அதைச் சொல்லித் தரமாட்டாருன்னு நீ நினைக்கிறயா?"

"அப்படி அவர் மட்டும் சொல்லி இருந்தா, இந்நேரம் எத்தனை பேர் கோடீஸ்வரர்களாகி இருப்பாங்க தெரியுமா?"– அவர்கள் பேசிக்கொண்டு வந்த அதே பாதையில், பிரசாத்தும் வந்தபடி இருந்தான். அவர்களைப் பார்க்கவும், "பஸ் நிலையத்துக்குப் போகணும். இந்தப் பாதை போகும்தானே?" என்று கேட்டான்.

"போகும்... போகும். ஆமா, நீங்க யாரு...? இந்தக் காலை நேரத்துல தனியாக இந்தப் பக்கமா வர்றீங்களே...?"

பிரசாத் தான் யாரென்று கூறினான்.

"அப்ப சாருக்கு சென்னையா?"

"ஆமா, நீங்க?"

"எங்களுக்கு இந்த மலைக்காடுதான் எல்லாம். இங்கயே சுத்திச் சுத்தி வருவோம்..."

"இந்தத் துப்பாக்கி, வேட்டையாடவா?"

"பின்ன... இதை வெச்சு பூஜையா பண்ணுவாங்க?"– அவர்கள் கிண்டலாகக் கேட்டாலும், அவனுக்கு முதல் நாள் இரவு பார்த்த வேங்கைப்புலி ஞாபகம்தான் வந்தது.

"பார்த்துப் போங்க... புலி நடமாட்டம் இருக்கு. நானே ரெண்டு தடவைப் பார்த்துட்டேன்..." என்றான்.

அவர்களுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"என்னது! புலியைப் பாத்தீங்களா?"

"ஆமாம், ஏன் அப்படி கேக்கறீங்க...?"

"உங்க கண்ணுல படுற மாதிரியா அது திரிஞ்சிச்சு?"

"ஏன்... அது கண்ணுல படாதா?"

"நாங்களும் நாய் மாதிரி சுத்தி வர்றோம். ஒரு நாள்கூட கண்ணுல படமாட்டேங்குது. ஆனா, உங்க கண்ணுக்கோ ரெண்டு தடவை பட்ருக்குது. சரி, இன்னிக்கு விடுறதில்லை. ஒரு 'பார்ட்டி' புலித்தோலுக்கு அம்பதாயிரம் முன்பணம் தரேங்கறான்...' என்றபடியே அவர்கள் அவனைக் கடந்தனர்.



பிரசாத்தும் தொடர்ந்து நடந்தான். பாதை ஒரு இடத்தில் ன்காகப் பிரிந்து நீண்டது. அவற்றுள் எதில் செல்வதென்றே தெரியவில்லை. பிறகு, ஒருமாதிரி முடிவுக்கு வந்து எந்தப் பாதையில் ல்தடம் தெரிகிறதோ அதுதான் சரியான பாதை என்று அதன் ழியே நடந்தான்.

# 14

பதினாறு பேறுகளில் பொன்னைத் தொடர்ந்து பெற வண்டியது புகழாகும். இது ஒன்றுதான் ஒருவன் இறந்த பிறகும் வாழும். இந்தப் புகழ் மேல் ஆசை வைக்காதவரே இல்லை. இதற்காகவென்றே பல அரிய செயல்களைச் செய்தவர்கள் பலர்; இன்றும் செய்துகொண்டு இருப்பவர்கள் பலர். புகழை விலைக்கு வாங்க முயல்பவர்களும் உண்டு. இது ஒன்றுதான் எவ்வளவு இருந்தாலும், ஒருவருக்குத் திருப்தியைத் தராது. பல அறிஞர்கள், செல்வம் சென்றுவிடும்; ஆனால், புகழ் நிலைத்து நிற்கும் என்று ண்டுகொண்டு அதற்காகவே காவியங்கள் பல படைத்தனர்.

ஒரு மனிதன் பெறும் பதினாறு பேறுகளில், அவன் இறந்த பிறகும் நிலைத்து நிற்பது புகழ் ஒன்றுதான்! இதுவே ஒருவன் பெற்றிடும் பதினைந்தாவது பேறாகும். இதை அடைந்தவன் பதினைந்து படிகளைக் கடந்தவன் ஆவான்!

அந்தப் பாதை எங்கெங்கோ போனது. இருபுறமும் அடர்வாக ரே புதர். பிரசாத்துக்கு தான் வழி தவறிப் போகிறோம் என்று ள்ளுணர்வு எச்சரித்தும் பலனில்லை. திரும்ப நடக்க முயன்றவன், அப்படியே வெலவெலத்துப் போனான். அதே பாதையில் ஒரு மலைக்கரடி. அவனைப் போலவே நிதான நடை நடந்தபடி...

அவன் ஓட ஆரம்பித்தான்! அதுவும் துரத்தத் தொடங்கியது. ஓடியவன் சட்டென்று பக்கவாட்டில் தெரிந்த ஒரு மலைப்பாறை மேல் தாவி ஏறினான். அப்படியே குரங்கு போல தாவித் தாவி இரு பெரிய பாறைகளுக்கு நடுவில் உள்ள இடைவெளியில் புகுந்துவிட்டான்.

அப்படிப் புகுந்து மறுபக்கம் சென்ற நொடி, அவனுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. மறுபுறம் குகை போல ஒரு தோற்றம்.

பல இடங்களில் பாறைகள், மஞ்சள் நிறமாகக் காட்சி அளித்தன. நிறைய பீங்கான் பாத்திரங்கள், சட்டிகள் என்று அங்கங்கே பொருட்களும் கிடந்தன. கிரிக்கெட் பந்து அளவுக்கு நூற்றுக்கணக்கில் பல உருண்டைகள். இரும்பும், மூலிகையும் கலந்த ஒரு தினுசான வாசம் வேறு மூக்கை நெருடியது. சுற்றிலும் மலைப்பாறைகள் அரண் போல அடைத்துக்கொண்டு மேலேயும் மூடி இருந்தன. அந்த உருண்டைகளைப் போய் எடுத்தவன், அதன் கனத்தை வைத்து அது உலோகம் என்கிற முடிவுக்கு வந்துவிட்டான். ஆனால் பித்தளையா... தங்கமா? என்பதில் ஒரு குழப்பம்.

அப்போது, "யாரது?" என்று ஒரு குரல்.

திரும்பினான். சித்தர் ஒருவர் கையில் கீரை போல ஒரு மூலிகைக் கட்டுடன்... அவர் கண்களில் ரத்தச் சிவப்பு.

"சாமி..."

"யார் நீ? இங்கே எப்படி உன்னால வர முடிஞ்சது?"

"கரடி துரத்தவும், ஓடி வந்து உள்ளே புகுந்தேன் சாமி..."

"கரடி துரத்தினா இங்கே நுழைவியா?"

"சாமி... நான் போயிடுறேன். நீங்க தப்பா எடுத்துக்காதீங்க..."

"உன் பேர்?"

"பிரசாத்."

"உன்னைப் பார்த்தா நவீனமா இருக்கே...! இந்த மலையில உனக்கென்ன வேலை?"

பிரசாத் எதையும் மறைக்காமல் அவரிடம் சொல்லி முடித்தான். அவர் முகத்திலும் இப்பொழுது முன்பிருந்த கோபமில்லை. அவன் வரையில் அது பரிதாபமாக மாறிவிட்டிருந்தது.

"சரி... இப்ப நீ அந்த யோகிகளோடு ஹரித்வார் போகப்போறியா?"

"அப்படித்தான் நினைச்சேன். ஆனா, ஒரு சித்தர் சாமி எனக்கு உயிர் அணுவை உருவாக்கித் தரும் மூலிகை மருந்து தர்றேன்னு சொல்லி இருக்காரு. அதைக் கேட்டதுல இருந்து ஒரு நம்பிக்கை..."

"அப்ப ஊருக்குப் போய் வாழறது உன் எண்ணமா?"

"ஆமாம் சாமி. இப்ப எனக்கு ஒரு நம்பிக்கை பிறந்திருக்கு..."

"பைத்தியக்காரா... உன் மனைவி உன்னை நம்பி





ஏத்துக்குவாளா?”

“அவ ஏத்துக்லைன்னாலும் வேற யாராவது கிடைக்க மாட்டாங்களா சாமி...? ஒரு பிள்ளைக்கு அப்பாவா நான் சாக விரும்பறேன்...”

“ஆனா, உன்னை நான் விட முடியாது...”– அவர் சொன்ன தொனியும், விதமும் பிரசாத்தைத் திடுக்கிட வைத்தன.

“சாமிசச...”

“ஆமாம். உன்னை இங்கே இருந்து நான் அனுப்ப முடியாது. இது என்னோட ரசவாத சாலை. இங்க இருக்கற அவ்வளவும் பசும் தங்கம். அந்த உருண்டைகள் எல்லாம் தங்கம். இங்கே வந்து இதைப் பார்த்துட்ட யாரையும் நான் வெளியே விட்டதில்லை.”

“சாமி, என்ன இது? நான் ஒண்ணும் வரணும்னு வரலை. இங்கே இருந்து நான் குண்டுமணி அளவு தங்கமும் எடுக்கலை. எனக்கு இது வேண்டவும் வேண்டாம். தயவுசெய்து என்னை அனுப்பி வையுங்க.”

“இல்ல... நீ போக முடியாது. போகவிடவும் மாட்டேன். விட்டா நீ ஒரு பெரிய கூட்டத்தோட வருவே... இப்பவே என்னைத் தேடி ஒரு கூட்டம் இந்த மலையில அலையுது...”

“நான் அப்படி இல்ல... ஆமா, இவ்வளவு தங்கத்தையும் என்ன பண்ணப் போறீங்க? உங்களுக்கு எதுக்கு இது?”

“இதெல்லாம் ரசவாதத் தங்கம். சொர்ணலிங்கம் செய்ய நினைக்கற என் பக்தர்களுக்குக் கொடுக்கத்தான் இவ்வளவு தங்கமும்...”

“நான் வேணும்னா உங்களுக்குச் சத்தியம் செய்து தரேன். இதைப் பற்றி நான் யார்கிட்டயும் மூச்சு விடமாட்டேன்.”

“சத்தியமாகத்தான் சொல்றியா?”

“ஆமா, யார் மேல நான் சத்தியம் செய்யட்டும்...?”

“பிறக்கப்போற உன் பிள்ளை மேல சத்தியம் செய்வியா?”– அவர் அப்படியொரு கேள்வி கேட்பார் என்று பிரசாத் துளிகூட எதிர்பார்க்கவில்லை. கொஞ்சம் போல் ஸ்தம்பித்தான். மூச்சு பலமானது, காது மடல் ஆடியது.

“என்ன யோசனை?”

“இல்ல... எனக்குப் பிள்ளை பிறக்கும்னு சொன்ன உங்க பேச்சு, என்னைத் திக்குமுக்காட வெச்சிடுச்சு...”



“பிறகென்ன, அந்தப் பிள்ளை மேல சத்தியம் ... யார் கிட்டேயும் இடம் பற்றி... என்னைச் சந்தித்தது பற்றி... நீ யார் கிட்டேயும் சொல்லக்கூடாது.”

“சொ... சொல்லலை... போதுமா?”

“சத்தியம் செய்...”– அவர் கையை நீட்டினார்.

“சத்தியம்... சத்தியம்... சத்தியம்...”– அவனும் மூன்று முறை சொன்னான். அப்படி சொல்லிக்கொள்ளும்போதே தனக்குப் பிள்ளை பிறக்கப் போவது உறுதி என்றும் நம்பி, அப்படியே விளக்கொளி போல முகத்தில் சுடரொளியைக் காட்டினான். சோர்ந்து, கறுத்து இருளடைந்த அவன் முகத்தில் புது ஒளி!

அவர் அவனது சத்தியத்தைத் தொடர்ந்து, “சரி, திரும்பிப் போ...” என்றார். அவனும் திரும்பி, அந்தத் தங்க உருண்டைகளை ஒரு பார்வை பார்த்தான். நூற்றுக்கணக்கான உருண்டைகள். பல ஊர்களில் புதையலாக இப்படிப்பட்ட உருண்டைகள் கிடைத்திருக்கின்றன. அவ்வளவும் கோவில் புதையல். அவை எல்லாம் இப்படி சித்தர்கள் தந்த தங்கம் என்பதை அந்த நொடி புரிந்துகொண்டே நடந்தான்.

“சத்தியம் மீறுனே... உன் குழந்தை உயிரோட தங்காது...” என்று போய்க்கொண்டு இருந்த அவன் வயிற்றில் புளியைக் கரைத்தார் திரும்பவும் அந்த சித்தர்.

பிரசாத்துக்கு அவர் அப்படிச் சொன்னதில் குலை நடுக்கம்!

# 15

**தா**ய், தந்தையரில் தொடங்கி– நெல், அறிவு, அழகு, கல்வி, நுகர்ச்சி, இளமை, துணிவு, பெருமை, நோயின்மை, வலி, வெற்றி, பொன், புகழ் என்கிற பேறுகளைத் தொடர்ந்து அடுத்து வருவது நல்லூழ்!

நல்லூழ் என்றால் விதியமைப்பு என்பது ஒரு பொருள். நல் வினைகளையே நாம் செய்தவர்களாக இருப்பது என இன்னொரு பொருள்.

நல்ல வினைகள் நம் கணக்கில் இல்லாவிட்டால், இந்தப் பேறுகள்

நம்மிடம் தங்காமலேயேகூடப் போய்விடும் என்பது மாத்திரமல்ல... அவை தங்கள் கணக்கைத் தீர்த்துக்கொள்ள நம்மை இந்தப் பேறுகளின்கிட்டேயே நெருங்கவிடா...! நல்வினை இல்லை என்பது பல விதங்களில் தெரியவரும். மிகச் சிறந்த வணிகனான கோவலன் எந்தத் தவறும் செய்யாத நிலையிலும், அரசனால் கொலைக் குற்றம் சாட்டப்படுவதற்கு அவனது ஊழ்வினைதான் காரணம்.

அதேபோல் நல்ல மனைவி, மக்கள், செல்வம் என்று எல்லாம் வாய்க்கவும் நல்லூழே துணை நிற்கிறது. குறிப்பாக பதினாறு பேறுகளையும் நமக்குப் பெற்றுத் தருவதே நல்லூழ்தான்!

பேறுகளில் இது பதினான்காவது பேறு. ஆனால், படிகளிலோ இது பதினாறாவது படியாகும்.

கொல்லிமலை பஸ் நிலையம்!

வந்து நின்ற பஸ்ஸில் இருந்து உதிர்ந்து கொண்டிருந்தாள் தேவிகா. தோளில் ஒரு தோல் பை. கண்களில் குளிர் கண்ணாடி. இறங்கியவள், சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். பிஞ்சுக் குழந்தையோடு ஒருத்தி. அந்தக் குழந்தையின் கையை நீட்டி, பின்னால் தன் கையைப் பிடித்தபடி பிச்சை கேட்டாள்.

தன் முன் நீண்ட அந்தக் கை, தேவிகாவை அப்படியே ஊசியாய்க் குத்தியது. முகமும் சிவந்து போனது.

"ஏம்மா... அறிவில்ல உனக்கு...! இப்படியா ஒரு பச்சைக் குழந்தையை வெச்சு பிச்சை கேப்பே...? இதுக்குப் பிச்சைன்னா என்னன்னாவது தெரியுமா?"

அவளிடம் பதிலுக்கு ஒன்றும் பெரிய கோபமில்லை.

"தாயி... இதோட பசிக்குதான் பிச்சை எடுக்கறேன். நான்னா தாங்கிடுவேன். ஆனா, இதால முடியாதுல்ல..."

"நீதான் எதுக்குப் பிச்சை எடுக்கறே? வேலைக்குப் போலாமே...?"

"இப்படியே எத்தினி பேர்தாம்மா சொல்வீங்க...? என்னமோ ஊட்டுக்கு ஊடு வேலை இருக்குது, வாங்க வாங்கன்னு கூப்பிடுற மாதிரியில்ல பேசுறீங்க...?"

"அடேங்கப்பா... பிச்சைக்காரி, உனக்குக்கூட ரோஷமோ? சரி, நான் கூப்பிடுறேன், வர்றியா?"

"நிசமாவா தாயி சொல்றே...?"



"நான் சும்மா பேச்சுக்குப் பேசுற பொம்பள இல்ல..."

"இந்தப் புள்ளையோடு வந்தா ஒண்ணும் சொல்லமாட்டியே..."

"இந்தப் புள்ளைக்காகத்தான் நான் உன்னையே கூப்பிடுறேன். இதை வெச்சுப் பிச்சை எடுக்கற கொடுமையைத் தடுக்கத்தான் கூப்பிடுறேன்..."

"அப்படியா... ஒரு விஷயம் தெரியுமா தாயி?"

"என்ன?"

"இது என் குழந்தை இல்லை. இந்த மலைக்காட்டுல திரிஞ்சுகிட்டிருந்த ஒரு சித்தசுவாதீனம் இல்லாதவளோட புள்ள. இதுக்கு அப்பன் யாருன்னு யாருக்குமே தெரியாது. அந்தப் பைத்தியத்தை காமக் குரங்குங்க சீரழிச்சுட்டாங்க. அவளும் அநாதையா இதைப் பெத்துப் போட்டுட்டு, செத்தும் போயிட்டா. நான்தான் இதுவும் செத்துடப் போகுதுன்னு பரிதாபப்பட்டுத் தூக்கிக்கிட்டுச் சுத்திக்கிட்டு இருக்கேன்..."– அந்தப் பிச்சைக்காரி சொன்னது தேவிகாவை உலுக்கிவிட்டது.

குழந்தையையே உற்றுப் பார்த்தாள். பார்க்க அழகாக, லட்சணமா, வாயில் எச்சில் ஒழுக சிரித்தது. அதிர்ஷ்ட தேவதை போல நீலக் கண்கள். தலையில் புசுபுசுவென்று முடி. முகத்தில் மட்டும், குளிக்காததால் ஒட்டி இருக்கும் தூசும், தும்பும்.

அது, தன்னை நோக்கும் தேவிகாவை பதிலுக்குக் குமிழ்ச் சிரிப்போடு பார்த்தது. அந்த நொடி அது அநாதை, பிச்சைக்காரக் குழந்தை என்கிற எல்லா எதார்த்தங்களும் சிதறிப் போயின.

ஒரு குழந்தை பெற இயலாத அவளது தாய்மை, பாசப் பெருக்கெடுத்து அப்படியே கையை நீட்ட வைத்தது. நீண்ட இரு கரங்களுக்குள் அந்தக் குழந்தையும் பாய்ந்து வந்து அடங்கியது. அதே வினாடியில் ஒரு குழந்தையைத் தத்து எடுத்து, அதற்குத் தாயும்– தந்தையுமாகி செய்யும் அன்பு காட்டும் செயல் ஒரு பரிகாரம் என்று பஞ்சாட்சரம் மூலமாகக் காதில் விழுந்த செய்திதான் ஞாபகத்தில் வந்தது.

'கொல்லிமலைக்குப் போனால் நடக்க வேண்டியது எல்லாம் தானாக நடக்கும் என்று அந்த சித்தர் சொன்னது இதைத்தானா?' குழந்தையை அணைத்தபடியே– நனைந்துவிட்ட விழிகளுடன் சிந்தித்தாள். விழி நீரைச் சுண்டி விட்டுக்கொண்டவள், எதிரில் அடுத்த இன்ப அதிர்ச்சியாக பிரசாத்! அவளையே வைத்த கண்

வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

"என்னங்க... இங்கதான் இருக்கீங்களா?" என்று குழந்தையோடு அவன் முன் வேகமாகச் சென்று நின்றாள். அவனிடம், அவள் அளவுக்கு வேகமில்லை. அதற்காகக் கோபமோ, அலட்சியமோகூட இல்லை. வெறித்தபடி இருந்தான்.

"நீங்க இங்க இருக்கறதா சித்தர்சாமிதான் சொன்னார். அவர் சமாதிகிட்டயே தங்கி இருந்தீங்களாம். பஞ்சாட்சரம் சார் சொல்லவும், உடனே கிளம்பிட்டேன். நான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன். முட்டாள்தனமா நடந்துக்கிட்டேன். என்னை மன்னிச்சிடுங்க..."– அவள் குரலில் கெஞ்சல் தொனித்தது.

அவனுக்கு அவள் பேச்சு, அதன்பின் குழந்தையுடனான அந்தக் கோலம் எல்லாமே திகைப்பாகத்தான் இருந்தன.

"தேவிகா... இந்தக் குழந்தை...?"

"நமக்குன்னே பிறந்திருக்கிற குழந்தை, இது. தத்து எடுக்கணுங்கிறதுக்காக இனிமேல் தனியா கஷ்டப்பட வேண்டாங்க..."

"இந்தம்மா..."

"இந்தக் குழந்தையை இவதான் வெச்சிருந்தா. இவ பிச்சை எடுக்கறது, எனக்குப் பிடிக்கலை. சண்டை போட்டேன். அந்தச் சண்டையில கிடைச்ச பரிசுதான் இந்தக் குழந்தை. இவளும் நம்ம வீட்ல எல்லா வேலையும் செஞ்சுக்கிட்டே இருப்பா..."– தேவிகா, குழந்தையும் கையுமாகப் பேசுவது அவ்வளவும் தேனில் ஊறிய சொற்களாக அவன் காதில் விழுந்தன.

"ஆமாம்... அந்தக் கரடிப்பள்ளத்துக்குப் போயிட்டீங்களா?"

"இல்ல... இனிதான் போகணும். உன்கூட சேர்ந்து, இந்தக் குழந்தையோடு போகணும்னு எழுதி இருக்கு போல..."

"அப்ப கிளம்புங்க... இனிப் பழச எதையும் நினைக்க வேண்டாம். எனக்கு ஒரு குழந்தை பிறக்கவும் வேண்டாம். இந்தக் குழந்தையே போதும். பெத்த குழந்தை மேல பாசம் காட்டுறது இயற்கை. அதுல ஒரு தாய்க்குப் பெரிய பெருமை இல்ல. மத்த குழந்தை மேல அதே அளவு பாசம் காட்டுறதுதான் உண்மையிலே பெரிய விஷயம்..."

"நீயா இப்படிப் பேசறே...?"

"நானேதான். நீங்க சொன்னதெல்லாம் கட்டுக்கதை இல்ல,



கற்பனை இல்லைன்னு தெரிஞ்ச நிமிஷமே என் மனசுல ஒரு மாற்றம் ஏற்பட்டுடிச்சு. பஞ்சாட்சரம் சார் வந்து பேசி என்னை ரொம்பவே யோசிக்க வெச்சுட்டார்..."– அவளும், அவனும் பேசிக்கொள்வது எதுவும் அந்தப் பிச்சைகாரிக்குப் புரியவில்லை. ஏதோ பிரச்சினை அவர்களுக்குள் என்று மட்டும் தெரிந்துகொண்டாள். அவர்கள் பேச்சில் வெளிப்பட்ட கரடிப்பள்ளம், அவளுக்குத் தெரிந்த இடம். அதைத்தான் பேச்செடுக்கப் பிடித்துக்கொண்டாள்.

"தாயீ... கரடிப்பள்ளத்துக்குப் போகணுமா?"

"ஆமா... உனக்கு அந்த இடம் தெரியுமா?"

"இந்த மலையில நான் சுத்தாத இடமில்லை. வாங்க காட்டுறேன்..." அவள் நடந்தாள்.

பிரசாத்தும், தேவிகாவும் அந்தக் குழந்தையுடன் தொடர்ந்தனர்.

## 16

நல்லூழைத் தொடர்கின்ற பேறு, நன்மக்கள் என்பதாகும். ஆம்... பேறுகளிலேயே தலைசிறந்த முதல் பேறாக பிள்ளைப் பேற்றைத்தான் பலர் குறிப்பிடுகின்றனர். வம்சம் விளங்க– பரம்பரை சிறக்க– வாரிசுதான் பிரதானம். வயதான காலத்தில் நம்மை வைத்துக் காப்பாற்ற வேண்டியவர்களும் நமது மக்களே. அவர்கள் நன்மக்களாக இருக்க வேண்டும். வள்ளுவர் கூறியது போல தாய், தந்தைக்கு அழியாகப் புகழைச் சேர்ப்பவராக மக்கள் இருக்க வேண்டும்.

சிலர் தவறான வழிகளில் சென்று, குடும்பப் பெயரையே குலைத்துவிடுவார்கள். அப்படிப்பட்ட பிள்ளைகளைப் பெற்ற தாய், 'உனக்குப் பதிலாக நான் ஒரு பாறாங்கல்லைப் பெத்திருக்கலாம்' என்று கூறி அழுவதைப் பார்த்திருக்கிறோம். அதுவே நல்ல பிள்ளைகள் என்றால், கீர்த்திதான். நல்ல பிள்ளைப் பெற்றவர்களில் தசரதனும் ஒருவன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று காட்டுக்குப் போனவன் ராமன். பரசுராமனும் அப்படித்தான்; தந்தை சொன்னதுக்காகத் தாயின் தலையையே வெட்டியவன்.

இப்படி சொற்பேச்சைக் கேட்கும் ஒழுக்கமுள்ள பிள்ளைகளை நாம் பெறுவது என்பது பதினைந்தாவது பேறு. படிகளிலோ இது பதினேழாவது படி!

**தே**விகாவைப் பார்க்கவும் பிரசாத்துக்கு ஹரித்துவார் யோகிகளில் இருந்து அவன் சந்தித்த மற்ற சித்த புருஷர்கள் வரை எல்லோருமே தற்காலிகமாக மறந்து போனார்கள். ஏதோ ஒரு சக்தி தன்னைத் திட்டமிட்டு இழுத்துச் சென்றபடி இருக்கிறது என்று மட்டும் நினைத்தான்.

அந்தப் பிச்சைக்காரி குறுக்கு வழிகளுக்குள் புகுந்து போய்க்கொண்டே இருந்தாள். போகும்போது நிறைய பேசினாள்.

"தாயீ... அங்க நிறைய சித்தர் சாமிங்க நடமாடுறதா சொல்லுவாங்க. நமக்குக் கொடுப்பினை இருந்தாதான் கண்ணுல படுவாங்க. அங்க சொல்லி வெச்ச மாதிரி பதினெட்டு பாறைங்க இருக்கு. பார்க்கப் பதினெட்டு படி மாதிரியே இருக்கும். அதுல சித்தர் சாமியை நினைச்சுக்கிட்டே ஏறுறவங்களுக்கு, எல்லாமே கிடைக்கும்னு சொல்லுவாங்க. நான் இந்தப் பிள்ளையோடு, நேத்துதான் ஏறினேன். கொஞ்சம்கூட நம்பிக்கை இல்லை. நடந்து பார்க்கலாம்னுதான் ஏறினேன். ஆனா, இன்னிக்கு எனக்கும், இந்த புள்ளைக்கும் ஒரு நல்ல வழி பொறந்துடுச்சி. அந்தப் பாறைங்களுக்கு ஏதோ சக்தி இருக்கத்தான் செய்யுது..." என்றாள்.

அந்த இடத்தை நெருங்கியபோது நல்ல உச்சிப்பொழுது. பதினெட்டு பாறைகளும் ஒரு சீரான படி வரிசை போலத்தான் காட்சி அளித்தன.

"அதெல்லாம் பாறைங்க இல்லையாம். சித்தர் சாமிங்களாம்..."

அவள் எடுத்துச் சொன்ன தகவல், பிரசாத்தை உலுக்கியது.

"தேவிகா... வா! அந்தப் பாறைகளை ஐயப்பன் கோவில் பதினெட்டுப் படியா நினைச்சுக்கோ. அதுல முதல் படி, நம்ம அம்மா... அடுத்த படி அப்பா... அப்புறம் ஒவ்வொரு படியும் ஒரு நல்ல விஷயம். மொத்தத்துல மனுஷனா பொறந்துட்டவனுக்கு எதெல்லாம் கட்டாயமா– தேவையோ அதெல்லாம்தான் இங்க பதினெட்டு பாறைகளா பார்க்கப் படிக்கல்லாட்டம் நமக்குத் தெரியுது.

பஞ்சாட்சரம் சார், படிங்களுக்கு ஒரு தடவை சொன்ன பொருளை என்னால மறக்க முடியாது. படிச்சாதான் வாழ்க்கையில





மேல ஏறுவோம். படி மேல ஏறினாலும் மேலே போவோம். படிங்கறதுக்கு பணிவுன்னும் ஒரு பொருள். படிப்பு, பணிவு, முயற்சி- மூன்றும் சேர்ந்த ஒரு சொல்தான் படி. ஒரு படிக்கே இத்தனை உட்பொருள்னா, இங்க பதினெட்டு படிகள்! இதுகளுக்கு எவ்வளவு உட்பொருள் இருக்கும்?"

"உண்மைதான். படித் தத்துவத்தை விளங்கிக்க நமக்கு மூளை இருக்கான்னு தெரியலை. ஆனா, பதினெட்டுங்கற கணக்குல ஏதோ இருக்கு."

"ஏதோ இல்ல...! தாய் தந்தையர், அப்புறம் பதினாறு பேறுங்கற செல்வம். இது, கொடுத்தாத்தான் கிடைக்கற விஷயம்... இன்னிக்கு இதுல ஏறுவோம். பிறகு, அந்தப் பதினாறைக் கொடுக்கறவங்களாகவே இருப்போம். பதிலுக்கு அந்தப் பதினாறு நமக்கு வந்தா வரட்டும்; வராட்டியும் பாதகமிலலை. கொடுத்த பெருமை நமக்குப் போதுமே..."- என்று ஒரு திருப்தியான விளக்கத்தோடு இருவரும்... இல்லையில்லை, மூவராக அந்தப் பாறைகளில் தாவி ஏறினர். உச்சி வெயில் பட்டு, தகித்துக்கொண்டிருந்தது அந்தப் பாறை. ஆனாலும், அது ஒரு பெரிய விஷயமாகத் தெரியவில்லை.

பதினெட்டுப் பாறைகளின் முடிவில், சிவலிங்கம் போல ஒரு பாறை. அதைப் பிரதட்சணமாக வந்து வணங்கிவிட்டுக் கீழ் இறங்கினர். "தேவிகா... நாம ஊருக்குத் திரும்புவோம். அதுக்கு முந்தி என்னோடு வந்த யோகிகள்கிட்ட ஒரு வார்த்தை சொல்லிக்கணும். என்ன சொல்றே?"

"தாராளமா... இந்த மலையிலயே இருந்துடுவோம்னு நீங்க சொல்லுங்க... அதுக்கும் நான் தயார்..." என்றாள் தேவிகா. அவளது கையில் இருந்த குழந்தை, இரும்பைத் தங்கமாக்கும் மூலிகை போல அவளையும் ஆக்கிக்கொண்டு இருந்தது.

அவர்களின் அடுத்த இலக்கு, அருவிக்கரைக்குப் பக்கமாய் உள்ள சித்தர்களின் இருப்பிடம்!

## 17

**பே**று மொத்தம் பதினாறு...! அதில் பதினாறாவது பேறுதான், பேறு வாழ்நாள் எனும் நீண்ட ஆயுளாகும். ஆம்! பிறப்பதைவிட



பெரியது, சிறப்புடன் வளர்வது. வளர்வதைவிடப் பெரியது, இன்பமாய் வாழ்வது. குறைந்தபட்சம் ஒரு வாழ்க்கைச் சுற்றான அறுபது வயதையாவது கடப்பதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வின் சிறப்புக்குச் சாட்சிகளாக பேரன்- பேத்திகளைக் காணும் பாக்கியம் கிட்டும். நாம் மட்டும் வாழவில்லை, நம் பிள்ளைகளும் பிள்ளை- குட்டி என்று வாழ்கிறார்கள் என்பதை நீண்ட ஆயுளோடு வாழ்ந்தாலன்றி அறிய முடியாது.

நீண்ட ஆயுள் என்பது முழுமையான பேறு. படிகளில் இது பதினெட்டாவது! பதினெட்டு படிகளுக்கு வேறு காரணச் சிறப்புகளும் உண்டு. அதே நேரம் சூட்சுமச் சிறப்பு- அது தன்னுள் இந்தப் பேறுகளைக் கொண்டிருப்பதுதான்!

**த**னியே சென்ற பிரசாத், குடும்பஸ்தனாகத் திரும்பி வந்ததைப் பார்த்த அந்த நான்கு யோகிகளுக்கும் ஒரே வியப்பு. கையில் ஒரு குழந்தை வேறு! மூவரையும பார்த்தவர்கள், முதல் காரியமாக மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார்கள். 'நாங்கள் சில காலம் இங்கே தங்கி இருக்க விரும்புகிறோம்' என்றனர். பிள்ளையைத் தத்து எடுத்திருப்பது தங்கமான முடிவு என்று பாராட்டியவர்கள், அந்தப் பிள்ளையையும் தலையை வருடிக் கொடுத்து ஆசிர்வதித்தார்கள். அந்தப் பிச்சைக்காரியும் ஓடி வந்து எல்லோர் கால்களிலும் விழுந்து, ஆசிகளை மூட்டை கட்டிக்கொண்டாள்.

இறுதியாக ஜீவசக்திக்கு மருந்து தருகிறேன் என்று சொன்ன சித்தரிடம் வந்து நின்றான் பிரசாத்.

"உங்களைப் பார்த்த பிறகுதான், குழந்தை பிறக்கும்ங்கற நம்பிக்கையே எனக்கு வந்தது. அது சில மணி நேரங்கள்ல உண்மையாகவும் ஆயிடிச்சு"- என்றான்.

அவர் சிரித்தார்.கையில் ஒரு மண்டலம், அவன் சாப்பிடுவதற்கான ஜீவசக்தி மருந்து. பிரசாத்தும் கவனித்தான்.

"உனக்கான மருந்து, இது. ஒரு மண்டலம் சாப்பிட்டா போதும். உன் குறை நீங்கி, உன் சுக்லத்துல லட்ச லட்சமா உயிர் முட்டைகள் உருவாகிடும். அதே நேரம் இதை நான் சும்மா தரக்கூடாது. பதிலுக்கு நீ எனக்கு ஒண்ணு தரணும், தருவியா?"- என்று கேட்டார்.

"எங்கிட்ட இருக்கறதைக் கேளுங்க சாமி. தரேன். தர்மசங்கடமா எதையாவது கேட்டுடாதீங்க..."

"உன்கிட்ட இருக்கறதுதான். நீ போற வழியில தங்கம் பண்ணுற

சித்தரோட ரசவாத சாலை கண்ணுலப் பட்டு இருக்குமே...?"

"ஆமாம் சாமி..."

"அந்த ரசவாத சாலைக்கு நீ வழிகாட்டணும். காட்டிட்டா உனக்கு இந்த மருந்து மட்டுமில்ல. அங்க இருக்கற தங்கத்துல பாதியையும் தந்துடறேன். அந்தச் சித்தன் என்கிட்ட சிஷ்யனாக இருந்தவன்தான். பேராசை காரணமா ரசவாதி ஆயிட்டான். இந்த மலையில ஒளிஞ்சுகிட்டு, எனக்கே தண்ணி காட்டுறான்."

அவர் சொன்னது அவனைக் கிள்ளியது.

"சாமி..."

"என்ன?"

"உங்க விருப்பத்தை..."

"என் விருப்பத்தை..."

"என்னால் நிறைவேற்ற முடியாது. அப்படி செய்தா, நான் வாக்குத் தவறிடுவேன். என் வாரிசுகளும் வாழாம போயிடும் சாமி."

"கவலைப்படாதே... நான் இருக்கேன். உன் வாரிசுகளை வாழ வைக்கறது என் பொறுப்பு. இந்த மருந்து ஒண்ணே போதும்."

அவர் சொன்னதை தேவிகாவும் கேட்டாள். அவனைத் தனியே அழைத்தவள், "அந்த மருந்தை விட்டுடாதீங்க... எப்படியாவது வாங்கிட்டு வாங்க" என்றாள்.

தடுமாறிவிட்டான் பிரசாத். தத்தளித்தான். புழுங்கினான். குறுக்கும், நெடுக்கும் நடந்தான். அவரோ கண்களில் சிரிப்போடு பார்த்தபடி இருந்தார்.

தேவிகாவும் தவித்தாள். நடுவில் குழந்தை! ஒரு விநாடி அது பிணம் போல தெரிந்து, அவனுக்கு அதிர்ச்சி அளித்தது.

"இல்ல...என்னால முடியாது..." உச்சபட்சமாக அலறினான்.

**"எ**ன்னங்க, என்ன ஆச்சு?"

அவன் அலறல் சத்தம் கேட்டு தூக்கம் கலைந்து எழுந்த தேவிகாதான் கேட்டாள்.

"இல்ல... நான் அந்த இடத்தைக் காட்டமாட்டேன். எனக்கு என் குழந்தை முக்கியம்... குழந்தை முக்கியம்."

"எந்தக் குழந்தைங்க... என்ன ஆச்சு உங்களுக்கு?" தேவிகா கேள்வியோடு எழுந்து சென்று படுக்கை அறை சுவிட்சைப்



போட்டாள். பளீச்சென்று வெளிச்சம். அவன் கண்டதெல்லாம் கனவு என்பதை உணர்த்திட, மெல்ல பிரக்ஞை வசப்பட்டவன் வெளிறிய முகத்துடன் தேவிகாவைப் பார்த்தான்.

"என்ன... கனவா?"

"ஆமாம்... பதினெட்டு படிக் கனவு."

"ஆபீஸ்ல இருந்து வந்ததுல இருந்தே ஒரு குழப்பம்தான் உங்ககிட்ட! அப்பவே நினைச்சேன். கவலைப்படாதீங்க. 'டாக்டர் ரிப்போர்ட்' நல்லபடியாத்தான் வரும்."

"வரலேன்னாலும் கவலையில்ல தேவிகா... கொல்லிமலை இருக்கு. அங்கே பதினெட்டு பாறை இருக்கு. நிறைய சித்தர்கள் இருக்காங்க..."

அவள் பதிலுக்கு அவன் தலையைக் கோதிவிட்டு நெற்றியில் முத்தமிட்டாள்.

**ம**ருத்துவ அறிக்கையை வாங்கிக்கொண்டு டாக்டர்களைப் போய் இருவரும் பார்த்தபோது, ஒரே பதற்றம். அறிக்கையைப் பிரித்துப் பார்த்த டாக்டர் முகத்தில் புன்முறுவல்.

அவர் கரம் உற்சாகமாக முன்னால் நீண்டது.

"சிகிச்சை ரொம்ப ரொம்ப வெற்றி அடைந்திருக்கிறது மிஸ்டர் பிரசாத். உயிர் அணுக்கள் பல மடங்கு பெருகி இருக்கு. செயற்கை முறையிலகூட இனி முயற்சி செய்யத் தேவையில்லை. உங்க பரஸ்பர இல்வாழ்க்கையே போதுமானதுன்னு நினைக்கிறேன்"– என்றார்.

"அப்பாடா..." என்று மனம் லேசான பிரசாத், நன்றி கூறிவிட்டு வெளியே வந்தான். தேவிகாவைத் தோளோடு சேர்த்துக் கட்டிக்கொண்டே காரை நோக்கி நடந்தான்.

"தேவி... எனக்கு ஏற்பட்ட பயம், ஒரு அற்புதமான கனவுக்குக் காரணமாயிடுச்சு. அதுக்குள்ள எவ்வளவு சுவையான விஷயங்கள் தெரியுமா?"

"ஏங்க... அதை ஒரு கதை மாதிரி சொல்லுங்களேன்."

பிரசாத் கூறத் தொடங்கினான்.

அதைக் கேட்க விரும்புகிறவர்கள், முதல் பக்கம்– முதல் வரியில் ஆரம்பியுங்கள். இரண்டும் ஒன்றுதானே!

(முற்றும்)